நூதன இந்தியா

இந்தியாவின் நூதனஸ்திதி

இந்திய அரசாக்ஷி ஸம்பந்தமாயுள்ள
சீர்திருத்தங்களை
சுலபமாய் விளக்கும் தீபிகை

ஸர் நாராயண சந்தவர்கர் நைட்டு
என்பவரால் எழுதப்பட்டுள்ளது

141

ஆக்ஸ்வோர்டு ஸர்வகலாசாலை அச்சுக்கூடத்தாரின் அநுமதிபெற்று

சென்னை :

பப்ளிஸிடி பீரோவினால் மறுபதிப்புப் பெற்றது.

1921

P.B.L. No. 110.] [TAMIL.

அட்டவணை.

பக்கம்

1.	இந்தியாவிற்கு ஒரு நூதன சகம்	1
2.	முதல்படி—கடைகால்போடல்	9
3.	நூதன அரசாக்ஷியின் சரித்திர வரலாறு	17
4	ஒரு ஜகப்பிரஸ்தமான விளம்பரம்	22
5	ஸ்தல ஆக்ஷியில் சீர்திருத்தம்	29
6.	மாகாணச் சட்டநிர்மாண ஸபையில் சீர்திருத்தம் ...	35
7.	மாகாண நிர்வாக ஸபையில் சீர்திருத்தம்	41
8.	இந்தியா கவர்ன்மெண்டில் சீர்திருத்தம்	47
9.	இந்தியா ஸெக்ரெடெரி ஆப் ஸ்டேட்டும், அவர் ஆலோசனை ஸபையும்.	54
10.	மாக்ஷிமைதங்கிய நமது மகாராஜ சக்கிரவர்த்தியார் ...	61
11.	எலக்டர்களின் கடமை	67

நூன்முகம்.

இந்திய அரசாக்ஷி ஸம்பந்தமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கிற சீர்திருத்தங்களைப்பற்றி இச்சிறு புத்தகத்தில், எளிய நடையில், சுலபமாய் யாவரும் அறியும்வண்ணம், விளக்கி எழுதி, அச்சீர்திருத்தங்களாலே, ஆங்கில ராஜாங்கத்திற்கு, இந்தியாவும், ஒரு அங்கமாய் நிற்கலாகி, இந்தியர்கள் ராஜ்ஜியாதிபத்தியம் வகித்து, தாங்களே அவ் ராஜ்ஜியாதிபத்தியத்திற்கு உத்தரவாதமாயும் நிற்கும்படிக்குள்ள விஷயங்களை எடுத்துக்காட்டியிருக்கிறேன்.

ஈஸ்டு இந்திய வர்த்தகக் கம்பெனியார், இந்தியாவுக்கு வந்த நாள் முதற்கொண்டு, இந்திய அரசாக்ஷி அபிவிர்த்திக்கு வந்திருப்பதற்கு மூலாதாரமான பல மார்க்கங்களையும் சுருக்கமாய்க் காண்பித்திருக்கிறேன்.

இந்திய அரசாக்ஷி அபிவிர்த்திக்கு வருவதில், அநேகம் இடையூறுகள் ஏற்பட்டிருந்தும், அவ்வரசாக்ஷி, இந்தியர்கள் ஸ்வராஜ்ஜியாதிபத்தியம் அடைவதற்கு, எங்ஙனம் படிப்படியாய், வழி ஏற்படுத்திக்கொண்டு, மேனோக்கி வந்திருக்கிறது என்பதையும், அவ்வித அரசாக்ஷியை ஸம்பூர்ணமாய் இந்தியர்கள் பெறுவதற்கு மூலப்பிரகிருதியாயுள்ள இந்நூதனச் சீர்திருத்தங்கள் எங்ஙனம் ஏற்பட்டன என்பதையும், இப்புத்தகத்தில் விளக்கியிருக்கிறேன்.

இப்புத்தகத்தை நான் வெளியிட்டது இருவித கருத்துடனாகும்: (1) ராஜ்ஜியத்தில், ஸ்வராஜ்ஜியம் என்பது வேரூன்றி நிலைபெற்று, பிரஜைகளுக்கு ஜவாப்பு சொல்லக்கூடிய ஸ்திதியிலிருப்பதற்கு என்னென்ன உபகரணங்கள் அவசியமானவை என்பதையும், ராஜ்ஜியத்தில் ஏற்படுத்தப்படும் சீர்திருத்தங்கள் எத்தன்மையாயிருக்க வேண்டுமென்பதையும், அவைகளால் எங்ஙனம் பலாபலனை அடையலாகும் என்பதையும் விளக்கிக்காட்டுதல் என் முதல் கருத்து: (2) இந்தியாவிலே, அநாவசியமாய் கக்ஷிப்பிரதிகக்ஷிகள் உண்டாகி, குரோதம் மிக்கு, இச்சீர்திருத்தங்களை நிஷ்பலனாக்கி விடாமல், அவைகளைச் சரியானபடி பரியாலோசனை செய்து சோதித்துப்பார்த்து, அவைகளாலே நன்மை அடைய வழிதேட ஜீவாதாரமான நல்லபுத்தியை, இந்தியச்சிறுவர்கள் மனதிலும், நானாவிதமாய் ஏராளமாயுள்ள இன்னம் இதர எல்லா இந்தியர்கள் மனதிலும் கற்பித்து, இந்தியாவில் ஊக்கமுண்டாக்கிவருவதே என் இரண்டாவது கருத்து.

பெத்தர் சாலே, கம்பளா ஹில், பம்பாய்,

1920-ம் ௵ ஏப்பிரல் ௴ 24உ. என். ஜி. சந்தவர்கர்.

நூதன இந்தியா

இந்தியாவின் நூதனஸ்திதி.

இந்திய அரசாக்ஷி ஸம்பந்தமாயுள்ள சீர்திருத்தங்களை சுலபமாய் விளக்கும் தீபிகை.

1-ம் அத்தியாயம்.

இந்தியாவிற்கு ஓர் நூதன சகம்.

நமது தேசத்தில் துரைத்தன விஷயமாய் சீர்திருத்தங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவை அடுத்த 1921-ம் வருஷம் ஆரம்பத்திலேயே அநுஷ்டானத்திற்குவரும். மாக்ஷிமைதங்கிய நமது ஜியார்ஜ் சக்கரவர்த்தியாரின் மூத்தகுமாரனும் பிரின்ஸ் ஆப் வேல்ஸ் என்றும் பெயர்பூண்ட இளவரசர், தன் தகப்பனாருக்குப் பதிலாய் இந்தியாவிற்குவந்து, அச்சீர்திருத்தங்களைப் பிரதிஷ்டை செய்து அமுலுக்குக் கொண்டுவரப்போகிறார். அச்சீர்திருத்தங்களைப்பற்றி நமது தேச நேயர்கள் யாவரும் எளிதில் தெரிந்துகொள்ளும்படி இச்சிறு பிரசுரத்தில் சொல்லப்போகிறேன். கவனித்துப் படியுங்கள்.

இங்ஙனம் அனுஷ்டானத்திற்கு வரப்போகும் சீர்திருத்தங்கள் யாவை? இந்தியாவிற்கு அவை எவ்விதம் அநுகூலம்? இந்தியர்களுக்கு அவைகளால் என்ன நன்மை? இந்தியாவில் ஆயிரக்கணக்காயுள்ள ஜனங்கள் உழுது பயிரிடுவோர்கள் அல்லவோ? அவர்களுக்கு என்ன ஸுகம் இந்த சீர்திருத்தங்கள் விளைவிக்கும்? இவர்களில் வெகுபேர் ஏழைகளும் ஆயிற்றே! இவர்களுக்கும் பிரத்தியேகமாய் அச்சீர்திருத்தங்களால் என்ன சுகம் கிடைக்கும்?

இங்கிலீஷ் ராஜாங்கக் குடிகளாயும், தேசாபிமானிகளாயும் இருக்கும் நாம் இச்சீர்திருத்தங்களால் விளையும் பூரணபலனை ஸாங்கோபாங்கமாய், நாளாவர்த்தியில் அனுபவிக்க என்ன காரியங்கள் செய்துவரவேண்டும்?

இப்பேர்ப்பட்ட கேள்விகளை யாவரும் கேட்கக்கூடும். இவைகளும் கேட்டுத் தெரிந்துகொள்வதற்கு அவசியமானவைகள்தான். ஆகையினாலே, இவ்வினாக்களுக்குப் பதிலை யாவரும் எளிதில் அறியும் வண்ணம் என்னால் கூடுமானவரையில் தெளிவாய்ச் சொல்லப்புகுவேன். இச்சீர்திருத்தங்கள் யாவை என்பதைப்பற்றியும், அவைகளால் இந்தியாவுக்கு யாது நன்மைவிளையும் என்பதைப்பற்றியும், உங்களுக்கு நான் சீர்திருத்தங்களைப்பற்றிப் பொதுப்படையாய்ச் சொல்லிக்கொண்டுபோகையிலேயே, நீங்கள் தெரிந்துகொள்ளக்கூடும். ஆகிலும் ஒவ்வொரு வினாவுக்கும் ஸவிஸ்தாரமாய் விளங்க விடைகொடுக்க ஆரம்பிக்கும் முன், முதல் முதலில் நாம் தெரிந்துகொள்ளவேண்டியதாவது; "இச்சீர்திருத்தங்களின் உட்கருத்து என்ன? அவைகளின் நோக்கம் என்ன?" என்பது.

ஆகையினலே, இக்கருத்தை உங்களுக்கு முன்னடியே விளங்கச் சொல்லிவிட்டு, பிறகு ஒவ்வொரு வித சீர்திருத்தத்தைப்பற்றியும், தனித்தனியே, விஸ்தரித்துக்கூறுவேன். இப்படிச் செய்தால்தான் உங்களுக்கும் இச்சீர்திருத்தங்களைப்பற்றிய விஷயம் யாவும் நன்ருய் மனதில் பதியும். ஆகவே, இச்சீர்திருத்தங்களின் பொது நோக்கமும் உட்கருத்தும் என்னவென்ருல் :—

சென்ற நவம்பர்மாதம் மாக்ஷிமைதங்கிய நமது சக்கிரவர்த்தியவர்கள், இந்தியாவிலுள்ள அரசர்களுக்கும், ஸகலமான பிரஜைகளுக்கும் நன்ருய்த் தெரியும்படிக்கு, களிகூர்ந்து, ஒரு பிரகடனப் பத்திரிகையை கம்பீரமாய் வெளிவிடுவித்தார். இப்பத்திரிகைமூலமாய், சக்கிரவர்த்தியார் நமக்குப் பிரஸித்தப்படுத்துவது யாதெனில், "இந்திய அரசாக்ஷிவிஷயமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சீர்திருத்தம் இந்தியாவிற்கு ஒரு நூதன சகமாகும்" என்பது.

அந்நூதன சகம் என்ருல் என்ன? 'நாம் சாதாரணமாய், இப்பாதகண்டத்தில் கலிமுடியப்போகிறது! புதுயுகம் ஆரம்பமாகப் போகிறது!' என்று பேசிக்கொள்வதுபோலவும், 'ஒருவன் புனர் ஜன்மமடைந்து ஸுகம் பெறுவான்' என்று கூறுவதுபோலவும், இந்தியாவில் தற்காலத்தில் நடைபெற்றுவரும் ராஜாங்கமுறை மாறி, இதுவரையிலும் இருந்துவந்ததைவிட மிகச் சிரேஷ்டமாய், ராஜ்ஜியத்திற்கும் ஜனங்களுக்கும் வெகு அநுகூலமாய், நன்மை பயக்கும்படி, ஒரு நூதனமாதிரியான துரைத்தனம் இந்தியாவில் ஏற்பட்டு, அது இந்தியாவிற்கு ஒரு நூதன சகமாகி, இந்தியாவை புனர் ஆவிர்ப்பவித்து, நூதனஸ்திதிக்குக் கொண்டுவரப்போகிறது. அப்பேர்ப்பட்ட துரைத்தனமுறையை, இங்கிலாந்திலுள்ள பார்லிமெண்டு மகாஸபையார், சிலசீர்திருத்தங்களால் ஏற்படுத்தி, அவைகளை சட்டமாக்கி பிரசுரித்துவிட்டபடியினலே, நமது சக்கிரவர்த்தியவர்களும், "இந்தியாவிற்கு யோகம் வந்துவிட்டதென்றும், இந்தியா, அடுத்தவருஷம் முதல் புனராவிர்ப்பவித்து நூதனஸ்திதியை அடையப்போகிறது" என்பதையும் காட்டவே "இந்தியாவிற்கு ஒரு நூதன சகம் வந்திருக்கிறது என்று மேல்கூறிய பிரகடனப்பத்திரிகையால் வெளியிடுகிருர். இப்படி பார்லிமெண்டாரால் அங்கீகரிக்கப்பட்ட சட்டத்தில் அடங்கியுள்ள சீர்திருத்தங்கள்தான் அடுத்தவருஷம் முதல் அநுஷ்டானத்திற்கு வரப்போகின்றன. அச்சீர்திருத்தங்களும், மாக்ஷிமைதங்கிய நமது சக்கிரவர்த்தியாராலும் அங்கீகரிக்கப்பெற்று, அதற்கு அத்தாக்ஷியாய், அவருடைய திருமுகரும் பெறறுள்ளன. இவ்விதமான சட்டம் ஒன்றை ஏற்படுத்தி, அதில் இந்தியா ஸம்பந்தமாய் சீர்திருத்தங்களை அடக்கி, அவைகளை எல்லாம் தானே அங்கீகாரம்செய்த பிறகுதான், நமது சக்கிரவர்த்தியார் தமது பிரகடனப்பத்திரிகை பிறப்பித்து, அதுமூலமாய் இந்திய ஜனங்களுக்கு சிலாக்கியமான அரசாக்ஷிகிடைத்துச் சுகம் உண்டாகப்போகிறது" என்று பிரஸித்தப்படுத்தியது.

'இப்பேர்ப்பட்ட பாக்கியம் இந்தியாவிற்கு எப்படி வந்திருக்கிறது' என்பதை, நான் இனி விஸ்தாரமாய்க்கூறுவேன்.

இங்கிலாந்தில் பிரதான மந்திரியாகவாவது, அல்லது மந்திரிமார் ஸபையில் ஒருவராகவாவது இருந்து ராஜ்ஜியபாரம் வகித்து

வந்தவரும், இந்தியாவில் வைஸிராயாகவாவது, மாகாண கவர்ன ராகவாவது இருந்து துரைத்தனம் நடத்திவந்தவரும், ராஜ்ஜியத் தில் இன்னம் இதர பெரிய உத்தியோகமுறையை வகித்தவரும் ஆகிய ராஜ்ஜியதந்திர நிபுணர்களில் அநேகர், இந்தியா, இங்கி லீஷ் துரைத்தனத்தார் ஆளுகைக்குவந்தநாள் முதற்கொண்டு 'இங் கிலீஷ்க்காரர்கள், இந்தியாவை அரசாண்டுவருவதின் நோக்கம்' என்ன என்பதைப்பற்றியும், 'அவர்கள் எப்படி இந்தியாவை அரசாண்டு வரவேண்டும்' என்பதைப்பற்றியும், பல முறை பகிரங்கமாய் வற்புறுத்திக் கூறியிருக்கின்றனர். அதாவது, 'இந்தியர்களுக்கு, தங்கள் ராஜ்ஜிய பாரத்தைத் தாங்களே பரி த்து ஆண்டுவரும்படிக்குள்ள சக்தியை, உண்டாக்கி விட்டுவிட வேண்டும்' என்பதைத்தான் அவ்விங்கிலீஷ்க்கார நிபுணர்கள் அடிக் கடி கூறியுள்ளது. அந்நிபுணர்கள் யாவர்? என்று உங்களுக்கு விளக்க, அவர்களின் பெயர்களை எல்லாம் தெரிவிப்பது இப் பொழுது அனாவசியமானாலும், நீங்கள் திருஷ்டாந்தபூர்வமாய்த் தெரிந்துகொள்ளும்படி இரண்டு மூன்று மகான்களின்பெயரைமட் டும் தெரிவிக்கப்போகிறேன். சென்னை ராஜதானியில், ஜில்லா கலெக்டராக இருந்து, பிறகு அவ்விராஜதானி முழுவதற்குமே ஆதி பத்தியம்வகித்து கவர்னராக இருந்து நீதிசெலுத்திய ஸர் தாமஸ் மன்ரோ என்ற பிரபு முதன்மையாவர். அவர் ஜனங்களிடத்தில் மிக்க அன்புவாய்ந்தவர். ஜனங்களும் அவரிடம் பேரன்புபாராட்டி, அவர் ராஜ்ஜியாதிபத்தியத்தில் வெகுதிருப்தி அடைந்தவர்கள். இந்த ஜனங்களில் உழுது பயிரிடுவோருக்கு பிரத்தியேகமாய் அப் பிரபுவினிடத்தில் வெகுபக்தி விசுவாஸமுண்டு. அவர் குடிகளை எல்லாம், தன் பிள்ளைகளைப்போலப் பராமரித்து ரக்ஷித்து ஆண்டு வந்தபடியால், குடிகளுக்கு அவரிடத்தில் அன்புவெள்ளம் மேலிட்டு அவரை "எமது பிதாவே" என்று கூப்பிடலாயிற்று. அந்தப் பிரபு 120 வருஷங்களுக்கு முன்னரே சொல்லியிருப்பதாவது:— "(1) இங்கிலாந்து தேசத்தவர் இந்தியாவைக் கைப்பற்றி, தற்கால உபசாந்தியாக அதை ஆண்டுவருவது கூடாது. (2) அத்தேசத்தை ஆங்கிலர்கள் தங்கள் ஜன்மபூமிபோலவும், அதில் உள்ள குடிகளை தங்கள் சகோதரர்கள்போலவும் பாவித்து அக்குடிகளுக்கு, தங் கள் ராஜ்ஜியத்தைத் தாங்களே ஆளத் திறமை உண்டாக்கி, ராஜ் ஜியபாரம் வகிக்க அவர்களுக்கு துரைத்தனமுறைகளைக் கற்பித்து, அதினால் அநுகூலமாயுள்ள ராஜ்ஜிய நிர்வாக ஏற்பாடுகளும் சட்ட திட்டங்களும் தாங்களே ஏற்படுத்திக்கொண்டு, தங்கள் ராஜ்ஜியத் தை தாங்களே பாதுகாத்துவரும்படிக்குள்ள திறமையை, இங்கி லிஷ் துரைத்தனத்தார் இந்தியர்களுக்கு உண்டாக்கி, இந்தியா நீடூழிகாலம் நிரந்தரமாய் நன்கு வாழ்ந்திருக்கும்படிச் செய்யவேண் டும்" என்று மன்ரோபிரபு கூறியுள்ளனர். இவர் ஒருவர்மாத்திர மல்ல அப்படி அபிப்பிராயப்பட்டவர். மத்திய இந்தியாவை பரி பாலித்துவந்த ஸர் ஜான் மால்கம் என்கிற வேறொரு பிரபுவும் உண்டு; அவர், மத்திய இந்தியாவிற்கு அதிபதியாய் இருந்து, அத ற்குமேல் உள்ளபதவி அடைந்து, ஜனங்களால் அன்புபாராட்டப் பட்ட மகாநுபாவர். அவரும், இந்தியாவை ஆளும்விஷயத்தில் ஆங் கிலர் நோக்கம் மன்ரோ பிரபுபோன்றவர்கள் சொல்லியிருக்கிறபடி

யே, கூறியிருக்கின்றனர். தவிரவும், இங்கிலாந்தில் விக்டோரியா மகாராணியாருக்கே பிரதான மந்திரியாக இருந்து சிலகாலம் இங்கிலாந்து ராஜ்ஜியபாரத்தை வகித்துவந்த வேறொரு மகானும் உண்டு. அவர்தான் கிளாட்ஸ்டன் பிரபு ; அவரும்கூட " இந்தியர்கள், தங்கள் ராஜ்ஜியத்தை தாங்களே ஆளும் திறமை அடையும்படி, அவர்களுக்குக் கொஞ்சம்கொஞ்சமாய் ராஜ்ஜியபாரம்வகிக்க இடம் கொடுத்துக்கொண்டேவந்து, அவர்களே, அவ்விராஜ்ஜியபாரத்தை நிரந்தரமாய் பூராவும் பரித்து ஆண்டுவர ஏற்பாடுகள் செய்துகொண்டுவருவதுதான் இங்கிலீஷ் துரைத்தனத்தாரின் கடமை" என்று வற்புறுத்தியுள்ளார்.

இங்ஙனமிருந்தும், இங்கிலீஷ் துரைத்தனத்தார், " இந்தியர்களுக்கு சுய அரசாக்ஷி கொடுத்துவிடுவதுதான், தாங்கள் இந்திய ராஜ்ஜியம் வகிப்பதின் உட்கருத்து " என்பதையும், " அது தான் கடைசியாக இந்தியர்களுக்குத் தாங்கள் செய்யும் நன்மை " என்பதையும் ஒரு காலத்திலும் இங்கிலாந்தில் சட்டபூர்வமாய், ஆங்கிலர்கள் வெளிப்படுத்தவே இல்லை. தவிரவும், இங்கிலாந்திலுள்ள பார்லிமெண்டு மகாஸபையாரும், மேற்சொல்லியபடிதான் இங்கிலீஷ் கவர்ன்மெண்டாரின் நோக்கம் என்பதை ஊர்ஜிதப்படுத்திப் பகிரங்கமாய்ச் சொன்னதும் இல்லை. இங்கிலீஷ் ராஜ்ஜியம் முழுவதையும் பராமரிக்கும் நடுநாயகமாயுள்ள நம் இறைவராகிய சக்கிரவர்த்தியும்கூட, இந்த உட்கருத்தை, இப்பொழுது வெளியிட்டிருப்பதுபோல், இதற்குமுன் வெளியிட்டதும் இல்லை. பார்லிமெண்டார் இந்திய அரசாக்ஷி விஷயமாய் மேல்சொல்லப்பட்ட உட்கருத்தை வெளியிட்டு, சீர்திருத்தங்கள் அடங்கிய ஒரு ஆக்டைப் பிறப்பித்தது இந்தவருஷம்தான். அதை நமது சக்கிரவர்த்தியாரும் அங்கீகரித்தது இப்பொழுதே. அந்தச் சட்டத்தின் முகவுரையில், ஆங்கில துரைத்தனத்தார் இந்தியாவை இதுகாறும் ஆண்டுவந்ததின் கருத்து பூராவாக மேல்சொல்லியபடிக்குத்தான் என்பது வெளிப்படையாய் எழுதப்பட்டிருக்கிறது. ஆங்கில துரைத்தனத்தார் இந்தியாவை ஆண்டுவரும் உள்நோக்கம் மேற்சொல்லியபடியா? இல்லையா? என்பது வெகுகாலமாய் தர்க்கிக்கப்பட்டு வந்தது. அந்நோக்கம் சரி என்று அநுவாதித்தவர் சிலர். அதை ஆக்ஷேபித்தவரும் சிலர். ஆகிலும் தற்காலத்தில் இந்த வாக்குவாதங்களெல்லாம் அடியோடு முடிவுபெற்று, கடைசியாக இந்தியாவை இனிமேல் சரியாக ஆளவேண்டிய நிமித்தமாய் மேற்கூறியுள்ள ஒரு புதிய ஆக்ட்டு ஏற்பட்டுவிட்டது. இதினாலே, இந்திய அரசாக்ஷி பழைய நிலைமையினின்றும் மாறுபட்டு, ஒரு நூதன ஸ்திதியை அடைந்து, முதல் முதலாய் இந்தியர்கள், தங்கள் ராஜ்ஜியத்தை, தாங்களே பரிபாலித்து, தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ளும் சுதந்திரம் உண்டாயிருக்கிறது.

இதனால்தான், நமது மாக்ஷிமைதங்கிய சக்கிரவர்த்தி அவர்களும், " இந்தியாவிற்கு நூதனஸ்திதி வந்துவிட்டது, இந்தியா புனராவிற்பவித்துவிட்டது " என்றும், " இனி இந்தியாவிற்கு வெகு சிரேஷ்டமான அரசுரிமை உண்டாகி இருக்கிறது " என்றும், இது முதற்கொண்டே இந்தியர்களுக்கு க்ஷேமகாரம் என்றும், கூறியிருக்

கிறுர். ஆகவே, இந்தியாவில் ஆங்கில அரசாக்ஷி ஏற்பட்டநாள் முதற்கொண்டு, இப்பொழுதுதான், முதல் முதலாய் இந்தியர்க ளுக்கு தங்கள் ராஜ்ஜியத்தை தாங்களே ஆண்டுவருவதற்குள்ள உரிமையை, ஆங்கில துரைத்தனத்தார் மனப்பூர்வமாய் ஸர்வசா க்ஷியாய் அளிக்க தலைப்பட்டிருக்கிறுர்கள். இதுகாறும் ஆங்கில உத்தியோகஸ்தர்களாலேதான், இந்தியா ஆளப்பட்டுவந்திருக்கி றது. அவ்வுத்தியோகஸ்தர்களும், இங்கிலாந்திலுள்ள பார்லிமெ ண்டு மகாசபையாருக்கும், அவர்களை இந்தியர்களுக்கு எஜமானர்க ளாய் நியமித்த நமது சக்கிரவர்த்தியாகிய அரசருக்கு மாத்திரமே இந்திய அரசாக்ஷியைப்பற்றி ஜவாப்புசொல்லக் கடமைப்பட்டவர் கள். ஆனுலோ, மேற்சொல்லியபடி இந்திய அரசாக்ஷிவிஷயமாய் பார்லிமெண்டார் ஏற்படுத்தியுள்ள சட்டத்தின் பிரகாரம், இந்தி யாவை ஆளுவதற்கு உரிமை முதல்முதலாய் இப்பொழுது இந்தி யர்களுக்கே கிடைத்திருப்பதினுலே, தங்கள் ராஜ்ஜியத்தை முன் னைவிட மேன்மையோடு அரசாளத்திறமையுள்ள உத்தியோகஸ்தர் களை ஆங்கிலதுரைத்தனத்தாரையே தேர்ந்தெடுக்கவிடாமல், இந் திய மகாஜனங்களே, தங்களுக்கு அநுகூலமாயுள்ள உத்தியோகஸ் த்ர்களைத் தேர்ந்தெடுத்து, அப்படி நியமிக்கப்படுபவர்கள் இந்திய மகாஜனங்களுக்கே அடங்கி இனிமேல் உத்தரவாதியாய் இருக்கப் போகின்றனர்.

இவ்வித ஏற்பாட்டை "ஆங்கில துரைத்தனத்தார் இவ்வளவு காலமாய் சட்டபூர்வமாய் ஏன் ஏற்படுத்திக்கொடுக்கவில்லை?" என் றும், "இந்த சீர்திருத்தங்களெல்லாம் இதற்குமுன்னுடியே இந்தி யர்கள் நன்மைக்காக ஏன்கொண்டுவரப்படவில்லை?" என்றும், "இவ்வளவு காலதாமதம் எதற்கு?" என்றும் நீங்கள் யாவரும் ஸக்ஜமாய் இப்பொழுது கேட்கக்கூடும். இதற்குத்தக்கபடி உங்க ளுக்கு விடையளித்து விளக்கிச்சொல்ல, நான், முதல் முதலில் இந் தியா ராஜ்ஜியம் தொன்றுதொட்டு தற்காலம் வரையில் எவ்விதம் அரசாளப்பட்டு வந்திருக்கிறது என்பதைக்குறித்து முக்கியமான இரண்டு விஷயங்களை உங்களுக்கு எடுத்துச்சொல்லப்போகிறேன். நீங்கள் கவனித்துக்கேட்பீர்களாக:

முதலாவது விஷயம்.—நமது தேச மாதாவானவள், தன்னுள் அடங்கியிருக்கும் ஜனங்கள் யாவரையும் ஒருங்கு சேர்த்து ஒருநிர ளாக்கி, அவர்கள் ஓரே மனத்தராகி, ஒரு கொற்றவன் குடைநிழ லின்கீழ் ஆளப்பட்டுவரும்படிக்கு, இந்துதேச சரித்திர ஆரம்பமுத லாக நாளதுவரையிலும், முயற்சி செய்துகொண்டே வருகின்றனள். அவ்விதம் செய்யப்பட்ட முயற்சி வெகுகாலம் முன்னரே பலபிராப் திக்கு வந்தது. கிரிஸ்து பிறக்க 300 வருஷங்களுக்கு முன்பு, இந் தியாவை அரசு புரிந்துவந்த அசோக மகாராஜாவின் வெண்கொற்றக் குடையின் கீழ், இந்தியப் பிரஜைகள் அனைவரும் ஒருங்குசேர்ந்து ஓரே மனத்தினராய் ஆளப்பட்டுவந்து நன்குவாழ்ந்திருந்தனர்.

அவ் வசோக மகாராஜா பௌத்தமதத்தைத் தழுவி அதை ஆதரித்து வந்தவர். அவர் காலத்தில் இந்திய ராஜ்ஜியம் நன்கு ஆளப்பட்டு வந்தது என்றாலும் அசோக மகாராஜா காலம்சென்ற பின், அவர் ராஜ்ஜியம் அப்படியே சீர்குலையாமல் வெகுநாள் நீடித்

திருக்கவில்லை. அசோகர் காலத்திற்குப்பிற்பாடு, இந்திய ராஜ்ஜியம் ஒரு கட்டுப்பாட்டில் இருந்தது மாறி, பல சிறு ராஜ்ஜியங்களாய்ப் பிரிவுபட்டு, ஒவ்வொன்றும் மற்றொன்றோடு சதா போர் புரியலாயிற்று. இங்ஙனமிருக்க, இந்தியாவில் மதாசாரியராய் ஒரு மகான் ஆவிர்ப்பவித்தனர். அவர் இந்தியாவில் நிலைபெற்றிருந்த பௌத்த மத ஆதிபத்தியத்தை வேரறுத்து, அதை அடியோடே இந்தியாவினின்றும் வெளியேற்றி, இந்தியாவில் முன்போலவே ஹிந்து மதத்தை ஸ்தாபனம் செய்தவர். ஐரோப்பாவில் கிறிஸ்து மதஸ்தினருக்கு குருவாகிய, இத்தாலியாவிலுள்ள "போப்" என்னும் புண்ணிய புருஷரைப்போல, இந்தியாவில் இந்த மதாசாரியாரும், லோக குருவாய் விளங்கா நின்றவர். அப்புண்ணிய புருஷர்தான் ஸ்ரீ சங்கராச்சாரியார் என்று வழங்கப்பெற்றவர். அவர் இந்தியாவிலுள்ள ஜனங்கள் யாவரையும் எங்ஙனம் ஹிந்து மதத்தை அவலம்பிக்கும்படி ஒருங்குசேர்த்து ஒரு மனப்படுத்தினரோ, அதுபோலவே இந்தியர்களை ராஜ்ய விஷயங்களிலும் ஒரு மனப்படுத்தி, ஏக சக்கிராதிபதியின் குடைநிழலின் ஆளுகைக்குள் கொண்டுவரவேண்டுமென்று கடைப்பிடித்திருந்தனர். மதஸம்பந்தமாய் அவர் எண்ணம் இந்தியாவில் நிறைவேறினதுபோல ராஜ்ஜிய விஷயமாய், மேற்சொல்லியபடி அவர் மேற்கோளாகக்கொண்டவண்ணம் அவர் காலத்திலும் அவருக்கு பிறகு வெகுகாலமாகவும் நிறைவேறக்கூடாமல் போயிற்று. இந்த லோக குரு காலஞ்சென்றபின், மோகலாயர்கள் என்னும் மகம்மதிய ஜாதியார் இந்தியாவைக்கைப்பற்றி, அரசாளத்தலைப்பட்டனர். அம்மோகலாய அரசர்களும், இந்திய ஜனங்களை ஒருங்கு படுத்திவரவெகுவாய் முயன்று, அவர்களை ராஜாங்க முறையில் ஒரே மனத்தராகும்படிக்குளள ஏற்பாடுகள் செய்துவைக்கும் முன்பே, மோகலாய ராஜ்ஜியமும் க்ஷீணதசையை அடைந்துவிட்டது. அம்மோகலாயருக்குப் பிறகுதான் ஆங்கில துரைத்தனம் இந்தியாவிற்கு வரலாயிற்று. இவ்வாங்கில அரசர்களும், அந்த நாள் முதலாக இந்த நாள் வரையிலும், இந்தியாவில் தலைவாறற்றுச் சிதறிக்கிடந்த தேசங்களையும், அத்தேசங்களிலுள்ள பலபலஜாதி வருணாச்சிரமத்தாரையும் ராஜ்ஜிய விஷயமாய் ஒருங்கு சேர்த்து, பலவகைப்பட்டவர்களாயிருக்கும் இந்தியர்களை ஒருவகைப்படுத்தி ஒருங்கு சேர்த்து, ஒரு கட்டுப்பாட்டுக்கு உள்ளடக்கி ஒரே ஒருவகையான ராஜ்ஜியாபிமானிகளாக்கவேண்டும் என்று பலவாறு முயன்றுவந்திருக்கின்றனர். "இந்தியாவை அரசு புரிவதில் இந்தியர்கள் ஒரு மனத்தினராயிருந்து ஒருங்கு சேர்ந்திருப்பது தான் இந்தியர் ஸ்வராஜ்ஜியாதிபத்தியம் அடைய மூலாதாரம்". அதுதான் இந்தியர்களுக்கு மூல ஸாதனம். இதைத்தான் உங்களுக்கு நான் முதலாவது விஷயமாய் இதுகாறும் விளக்கிவந்தது. ஆனதுபற்றியே இந்திய நூதன சீர்திருத்தங்கள், இந்தியர்கள் ஸ்வராஜ்ஜியாதிபத்தியம் பெறப்பிரகிருதமாகி, இந்திய ராஜ்ஜியம் புனராவிர்ப்பவித்து, நூதன நிலைமையை அடைய இவ்வளவு வருஷகாலம் பிடித்திருக்கிறது :

இரண்டாவது விஷயம்.—இங்கிலீஷ்க்காரர் இந்தியாவை அரசாளத்தலைப்பட்டபோது, இந்திய ராஜ்ஜியம் ஒழுங்கின்றிக்கலகப்

பட்டிருந்ததினால், அது ஒழுங்கும் அமைதியும் பெற்று, பிரஜை
களுக்கும் தங்களுடைய ஆஸ்தி பறிபோகாமல் பாதுகாத்து, அவர்
களுக்குப் பிராணாபாயமில்லாமலும், இந்தியாவைக் காப்பாற்றுவதே
தங்கள் முதல் கடமையாக ஆங்கிலதுரைத்தனத்தார் கடைப்பிடித்
திருந்தனர். அக்காலத்தில், இந்திய ராஜ்ஜியம் ஒரு அரசன் கீழி
ருந்து ஆளப்படாமல், பலதேசங்களாய்ப் பிளவுபட்டு, சிற்றசர்மி
க்கு, கலகம்மேலிட்டு, ஒருவரோடொருவர் போர்செய்து, ராஜ்ஜியம்
இடுக்குண்டதும் தவிர, வெளிப்பிரதேசங்களிலிருந்தும் ஜனங்கள்
இந்தியாவைக் கொள்ளையிட்டுப் படையெடுத்தும், இந்தியர்களுக்கு
ப்பலவிதமான துன்பமும் கிலேசமும் உண்டாக்கிவந்தனர். இவ்வி
தம் தலைவாரற்று ஒழுங்கின்றிச் சிதறித்திகைத்த இந்தியர்களை எல்
லாம் ஒருங்குசேர்த்து, தாங்கள் இந்தியாவை அரசாக்ஷி செய்வதில்
அவர்களுக்கு நன்மை உண்டாகும் என்கிற நம்பிக்கையை இந்தியர்
கள் மனத்தில் இருத்தி, அவர்களை உத்ஸாகப்படுத்துவதுதான் தாங்
கள் முதலில் செய்யவேண்டிய விஷயம் என்று ஆங்கில துரைத்
தனத்தார் தீர்மானித்து, இந்தியர்களுடைய உரிமைகளைப் பாது
காக்கச் சட்டங்களை ஒழுங்குபட ஏற்படுத்தவேண்டும் என்றனர்.
ஆனதுபற்றியே, இந்தியாவில் ஒற்றுமையும், ஒழுங்கும், அமைதி
யும், சத்துருபயமின்மையும், இருக்குமாறும், இந்தியர்கள் தங்கள்
தேச ஸ்திதியை அறியுமாறும், அவர்களுக்கு ஞானத்தை உண்
டாக்கி நல்ல புத்தியைக் கற்பிப்பதுதான் தாங்கள் செய்யவேண்டிய
முதல் காரியம் என்று ஆங்கில துரைத்தனத்தார் தெரிந்துகொண்டு,
இந்தியாவில் பள்ளிக்கூடங்களையும், கலாசாலைகளையும் ஏற்படுத்தி
னர். அங்ஙனம் ஏற்படுத்தப்பட்ட கல்லூரிகள் மூலமாய் ஆங்கி
லருக்கு ராஜாங்க விஷயமாய் வெகுகாலமாய்த் தெரிந்துள்ள சட்
டத்திட்டம், சுயாதீனம், சுதந்தரம், பொதுஜன அபிப்பிராயம்,
ஆகிய ராஜநீதி நெறி முறைகளை இந்தியர்கள் கற்கலாயினர்.

இங்ஙனம் ஆங்கில அரசாக்ஷி இந்தியாவில் ஏற்பட்ட நாள்
முதல், இவ்வளவு வருஷகாலமாய் கற்றதனாலாய பயன்தான், இப்
பொழுது இந்தியர்கள், தங்கள் உரிமைகளை விடாமல், சுய அர
சாக்ஷி செய்ய தங்களுக்கு ஆதிபத்தியம்வேண்டும் என்று பிரேரே
பித்து, இந்தியாவும் புனராவிற்பவித்ததுபோல் ஒரு நல்ல நூதன
அரசியலைப்பெற்றிருப்பது. ஆங்கிலேய ராஜ்ஜியத்தில் இந்தியாவும்
இங்கிலாந்தைபபோலவே ஒரு பாகம் என்றும், ஆங்கிலர்களைப்
போலவே, இந்தியர்களும் ஆங்கிலருக்குக் கீழடங்கி இருந்து வரு
தல் மாறி, பிரிட்டிஷ் ராஜ்ஜியத்திற்கு ஆங்கிலர்களைப்போல் தாமும்
ஒரு அங்கத்தினராய் இருக்கத் தலைப்பட்டிருப்பதும், அவர்களுக்கு
ராஜ்ஜிய தந்திர விஷயங்களில் ஊக்கமும் உத்ஸாகமும் உண்டாகி,
தங்கள் ராஜ்ஜியத்தைத் தாங்களே சுயமாய் ஆக்ஷிசெலுத்துவ
தற்கு ஸ்வதந்திரமும் கிடைத்து, அதற்கு அநுகுணமாயுள்ள சட்
டத்தையும் பெற்று, அச்சட்டத்தினால் இந்தியாவிற்கு வேண்டிய
சீர்திருத்தங்களும் உண்டாகி, இந்தியாவை பழைய ஸ்திதியி
லிருந்து ஒரு நூதன நிலைமைக்கு வருவித்து இருப்பதும் ஆகிய இவை
கள்தான், இவ்வளவு காலமாய் இந்தியாவை ஆங்கிலர் ஆண்டுவந்த
தற்குச் சரியான பரிசுபோலாகும்.

ஆகவே, இதுகாறும் இந்திய துரைத்தன விஷயமாய் எடுத்துரைத்த சீர்திருத்தங்கள் அடுத்த நவம்பர்மாதம் முதற்கொண்டே அனுஷ்டானத்திற்கு வரப்போவதால், அச்சீர்திருத்தங்களின் உள் கருத்தையும் நோக்கத்தையும் ஒருவாறாய்க் கடைசியாகச் சுருக்கிப் பின்வருமாறு அடக்கி, உங்களுக்கு ஞாபகம் இருக்கும்படிச் சொல்லி விடுகிறேன் :

1-வது.—ஆங்கில ராஜ்ஜியத்திற்கு இந்தியாவும் ஒரு அங்கமாகி, இந்தியர்களும் சுய அரசாக்ஷி செய்துகொள்ள ஏற்படுவதற்கு மூலஸாதனம் இந்நூதனச் சீர்திருத்தங்களே.

2-வது.—அச்சீர்திருத்தங்களே இந்தியர்கள் ஸ்வய அரசாக்ஷி செய்ய அங்குரார்ப்பணம் என்றறிஞலே நீங்கள் இந்தியர்களில் பிரத்தியேகமான சில ஜாதி வருணச்சிரமத்தினரும், அந்தஸ்தும் யோக்கியதையும் உள்ளவர்களுமே அவ்வித ஸ்வய அரசாக்ஷிசெய்ய உரிமை பெற்றிருக்கிறவர்கள் என்று கொஞ்சம்கூட எண்ணமல், இந்தியாவிலுள்ள ஸகல விதமான ஜாதி மதத்தினரும், எல்லாவித யோக்கியதையும் அந்தஸ்தும் உள்ளவரும், கிராமத்தார்களும், குடியானவர்களும், பட்டணங்களில் கூலிவேலைசெய்து பிழைக்கும் ஜனங்களும், இன்னம் இதர தாழ்ந்த ஜாதியார்களும் ஆகிய நானாவித இந்திய ஜனங்களுமாகத்தான் இனிமேல் இந்திய ராஜ்ஜியாதிபத்தியம் இப்புதிய சீர்திருத்தங்களால் நடத்திவரப்போகிறது என்பதை நீங்கள் நன்கு உணரவேண்டும்.

இவ்வித ராஜஜியாதிபத்தியத்தால் இந்தியாவிற்குக் கிடைக்கும் பயனாவது :— இந்தியாவை இனிமேல் ஒரே ஒரு அரசன் தன்மனே பீஷ்டப் படிக்கும், தான் நினைக்கும்படிக்கும் ஆளமுடியாது. ஆனும் அரசர் ஜனங்கள் சுகத்தை நாடி, எவ்வளவு நல்ல சிந்தனையோடு பரிபாலிப்பவராயினும், இனி இந்தியா அப்பேர்ப்பட்ட அரசன் கீழ்பட்டிருக்கும் நிலைமையும் மாறிவிட்டது. தவிரவும், பிரத்தியேகமாயுள்ள சில ஜாதி மதஸ்தினரும் இந்தியாவை இனி ஆண்டுவருவதும் போய்விட்டது. இனி இந்தியாவை யார் ஆண்டுவரப்போகிறார்கள் என்றால், இந்தியாவில் ஆயிரக்கணக்காய் நிறைந்துள்ள எல்லாவிதமான ஜனங்களுமே தவிர வேறில்லை. இந்தியர்கள், தங்கள் ராஜ்ஜியத்தை தாங்களே, தங்கள் சுய நன்மைக்காக, அரசுபுரிதல் தான் இந்தியாவிற்கு இனிமேல் சுபீக்ஷமாம். இந்தியாவும் மேன்மேல் நல்ல பதவிக்குவந்துவிடும். "முதல் கோடு முற்றும் கோடு" என்று போகவிடாமல் இந்தியர்கள் தங்கள் ராஜ்ஜியத்தை சரியாய் இப்பொழுது முதலே பரிபாலித்து வருவார்களாகில், அவர்களுக்கு நாளாவர்த்தியில் ராஜ்ஜிய பாரம் வகிப்பதில் கொஞ்சமேனும் இடையூறும் சிரமமுமின்றி, "கடைகால் சரியாய்ப் போட்டுவிட்டால் வீடு பாதி கட்டியாய்விட்டது" என்னும் பழமொழிபோல் இந்திய சுயராஜாங்கம் சம்பூர்ணமாய் மேன்மேல் விளங்கும் என்பது உங்களுக்கு விசதமாகும்.

2-ம் அத்தியாயம்.

முதல்படி—கடைகால்போடல்.

இங்கிலீஷ் ராஜாங்கத்தார், இந்தியர்களுக்கு ஸ்வராஜ்ஜியாதிபத்தியம் வகிக்கத் திறமை வரும்படி முதலில் சீர்திருத்தங்கள் உண்டாக்கி, அவைகளால் இந்திய சுய அரசாக்ஷிக்கு நல்ல உறுதியான கடைகால் போட்டிருக்கிறார்கள் என்று முதல் அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இனிமேல் ஜனங்கள் சாதாரணமாய் பின்வருமாறு கேட்கக்கூடும் :—

"ஆங்கிலதுரைத்தனம் இந்தியாவில் உண்டாகி, நிலைபெற்று, இவ்வளவு வருஷங்களுக்குப் பிறகுகூட, இந்திய சுய அரசாக்ஷிக்கு கடைகால்மட்டும் தானா போடலாயிற்று ? இங்கிலாந்திலுள்ள பார்லிமெண்டு மகா சபையாரும் நமது சக்கிரவர்த்தியாரும் அச்சுயாக்ஷிக்கு ஏன் கடைகாலோடே விட்டுவிட்டனர்? எப்பொழுது முழு வீடாகக்கட்டிமுடிவது? எப்பொழுது பூர்ணபலனும் கிடைக்கும்? இந்தியர்களுக்கு இப்பொழுதே அச்சுயாக்ஷி முழுவதையும் கொடாதது யாது காரணம் பற்றி? இந்தியர்கள் ஸ்வராஜ்ஜியாதிபத்தியத்தை கொஞ்சம் கொஞ்சமாகத்தான் நிர்வகித்து வந்து கடைத்தேறவேண்டுவது ஏன்? அவர்கள் ஸ்வராஜ்ஜியம் முழுவதையும் ஓரே மூச்சில் நிர்வகிக்கமுடியாதவர்களா ?"

இவ்விதக் கேள்விகளுக்கு நீங்கள் திருப்திகரமாய்ப் பதில் தெரிந்துகொண்டால்தான், இந்திய அரசாக்ஷியைக்குறித்து ஏற்படுத்தப்பட்டிருக்கும் சீர்திருத்தங்கள், இந்திய ஸ்வராஜ்ஜியாதிபத்தியத்திற்குக் கடைகால்போலானாலும், அக்கடைகாலினாலேயே இந்தியாவிற்கு என்ன நன்மை விளையப்போகிறது என்பதை நீங்கள் பரிஷ்காரமாய்த் தெரிந்துகொள்ளலாகும்.

மேல்கண்ட வினாக்களுக்கு நான் விடைகொடுக்கப்புகும்போது, உங்கள் மனதில் நன்றாய்ப்பதியும்படி ஞாபகத்தில் இருத்தவேண்டியது ஒன்று உண்டு. அதாவது, "இந்தியா விஷயமாய் ஏற்பட்டிருக்கும் இச் சீர்திருத்தங்கள் யாவும் ராஜாங்கநீதி அமைப்பைத் தழுவியது" என்பதே. ஆகவே, 'ராஜாங்கநீதி அமைப்பு' என்பதன் தாத்பரியம் என்ன என்றால், "ஒரு ராஜ்ஜியத்தை ஆளுகையில் பிரஜைகளுக்கு அநுகூலமாய் ஏற்பட்டிராத சட்டதிட்டங்களைப்போக்கி, அவர்களுக்கு ஸுகம் உண்டாக்கும் வண்ணம், ராஜ்ஜிய தந்திர ஏற்பாடுகளைச் செப்பனிட்டு, சிலாக்கியமான நீதிமுறைகளையும் புதிதான சட்டதிட்டங்களையும் ஏற்படுத்துவதாகும்." என்று அறியவேண்டும். இதோ ஒரு திருஷ்டாந்தம் பாருங்கள்.

ஒவ்வொருவருக்கும் தன் தன் தேக அமைப்புத் தெரிந்திருக்குமல்லவா? நம் சரீரம் எவ்வளவு உறுப்புக்களால் கட்டுண்டது! ஒவ்வொரு உறுப்பும் மற்றொன்றோடு சரிவரப் பூட்டப்பட்டிருந்தால்தானே பார்ப்பதற்கு சரீரமாகும். அவ்வுறுப்புக்கள் யாவும்,

மாறின்றி, ஒன்றுக்கொன்று சகாயித்து வேலை செய்தால்தானே சரீரமும் சௌக்கியமடைந்து வலுப்படும். அங்ஙனமின்றி, உறுப்புகள் தங்கள் தங்கள் இஷ்டப்படி தாறுமாறாய் நடந்து வந்தால் சரீரம் பிணியுண்டு பரகதி யடையுமன்றோ! மேலும் இச்சரீரமே இளமைப் பருவமடைந்து, அவ்விளமை முற்றி வாலிபமாகி, வாலிபம் முற்றி மனிதனாகி, ஆண்மையடைவதையும் நாம் கண்டதில்லையோ!! சரீரம், இவ்வளவு பருவங்களையும் நாளாவர்த்தியில் அடையாமல் திடீரென்று கொஞ்சம் நாளிலேயே பூர்ண வளர்ச்சியடைந்து, மனிதனாய் ஆண்மையடைதலும் உண்டோ!!!

ஆகவே, சரீரம், படிப்படியாய், மெள்ளமெள்ள, சாவதானமாயும், அமரிக்கையாயும், நாளடைவில்தானே இளம்பிராயமிருந்து பூரண மானிடத்தன்மையை அடைவது சகஜம். இவ்விதமாய் மானிடசரீரம் இளமை முதல் மேற்சொல்லிய மாறுபாடுகளை மெள்ளமெள்ள அடைந்தால் மாத்திரமே, தேக அவயவங்கள் பலவும், தனித்தனியே நன்றாக வளர்ச்சிபெற்று, அவைகள் யாவும் ஒருமைப்பட்டு, ஒருங்குசேர்ந்து, தந்தம் வேலையைச் செய்தால் அல்லவோ அவ்வவயவங்களால் கட்டுண்ட தேகமும் வலுவடைந்து, தீர்க்க காயமாய் நீடித்து இருக்கும். மானிட உறுப்புக்களின் இத்தகைய மாறுபாடுகளையே, மானிட சரீரமாகிய ராஜ்ஜிய அமைப்பில் உண்டாகும் சீர்திருத்தங்கள் என்று சொல்லலாம். சரீரம் எப்படி மெள்ள மெள்ள மாறுதல்களைப் பெற்றுத் தளர்ச்சியின்றி வளர்ச்சிபெற்று வருகிறதோ, அப்படியேதான் அரசியலும். 'அரசியல்' அல்லது ராஜாங்கநீதி மானிடசரீரத்துள் அமைக்கப்பட்டுள்ள பல உறுப்புக்கள் போலவே, ராஜ்ஜியத்தைப் பராமரிக்க பல உத்தியோகஸ்தர்களாகிய உறுப்புக்களால் கட்டுப்பட்டிருக்கும் ஒரு காயம் என்று சொல்லலாகும் (காயம்—சரீரம்). ஆகவே, அரசியல் அல்லது ராஜாங்கநீதி விஷயமாய் ஏற்படுத்தப்படும் சீர்திருத்தங்களும் ராஜ்ஜியத்திலுள்ள பிரஜைகளுக்கு நன்மைபயிற்றி, அவர்களுக்கு ஸௌக்கியத்தைத் தந்து, ராஜாங்கத்தை நிலைபெற்றிருத்த வேண்டுமானால், மானிடசரீர அமைப்பில் தேகசௌக்கிய நிமித்தமாய் ஏற்படும் மாறுபாடுகளை ஒத்து, நாளாவர்த்தியில் சீர்திருத்தங்கள் ஏற்பட்டுச் சுகம் விளைவிக்கவேண்டும்.

ஆகவே, ஒருதேசத்தின் நன்மைக்காக ஏற்படும் ஒவ்வொரு அரசியல், அல்லது ராஜாங்கநீதி மனிதர்களால் திடீரென்று நிர்மாணிக்கப்படாமல், "தானாகவே, நாளடைவில் உண்டாகி வருவது" என்பது யாவரும் அறிந்திருக்கும் சித்தாந்தமாகும். பிரஜைகளுக்கு நலம்புரிந்து, அவர்கள் நன்மையே நாடி, மேன்மேலும் அபிவிருத்தியடையத்தக்க அரசியல், மேல் எடுத்துக்காட்டியபடி திடீரென்று மாறுதல் அடையாமல், ஸமயோஜிதமாய், படிப்படியாய், காலக்கிரமத்தில், தானாகவே உண்டாகி வருவதுதான் நல்லரசியலின் அமைப்பு என்பது இந்தியர்களுக்கு மனுவாதிகாலமுதல், தொன்றுதொட்டுத் தெரிந்தவிஷயம். ஆனதுபற்றியே, இந்தியாவில், இவ்வித அரசியலாகிய கலாசாஸ்திரத்திற்கு ஆதிகாலம் தொட்டு, "ராஜ்ஜியநீதி சாஸ்திரம்" என்று பெயர் வழங்கிவருகிறது. இதைத்தான், ஆங்கிலபாஷையில் "ராஜாங்க அபிவிர்த்தி

விஷயமாய் ஏற்படும் நீதிநூல்'' என்று சொல்லுவதுண்டு. 'நீதி சாஸ்திரம்' என்னும் சப்தத்தை நன்கு உணரவேண்டுவது அத்தியாவசியம். நீதி (नीति) என்பது ஸம்ஸ்கிருத பதம். அது नी, (नथू) என்றும் வினைப்பகுதியினின்றும் உண்டாகியது. नी, (नथू) (நீ) = 'நடத்துவது' என்று பொருள். ஆகவே, 'நீதி சாஸ்திரம்' என்பது ராஜ்ஜியத்திலுள்ள பிரஜைகள் 'ராஜ்ஜியவிஷய முறைகளை நடத்தும் நூல்' என்பது விசதமாகும். இன்னமும் (நீ) नी என்னும் பதத்தை உற்று நோக்குங்கால், "நடத்துகிறது" என்று விளங்குமே யல்லாது "துரத்தி ஓட்டுகிறது" என்று பொருள் படாமல், "மெள்ளமெள்ள அடிமேல் அடிவைத்துச் செல்லுவது தான்" என்று யாவரும் அறியவேண்டும். "ஒருவனை மெள்ள மெள்ள நடத்திக்கொண்டு வந்தால் கரை ஏறி காரியஸித்தியாகுமே தவிர அவனைத் துரத்தியடித்தால், கரை ஏறுவதும் காரியம் கைகூடுவதும் எப்படி?" என்பது யாவருக்கும் தெரியாத விஷயமல்லவே! ஆகவே, அரசியலும், பிரஜைகளுக்கு நன்மை பயக்கவேண்டுமானால், மெள்ள மெள்ள சாவதானமாய் நடைபெற்று, நாளாவர்த்தியில் ஓங்கிவளர்ந்து, பூரண பலபிராப்திக்கு வரவேண்டுமே யல்லாது, திடீரென்று ஒரு முழுக்கில் மண்ணெடுப்பதுபோல், ஒரே ஒரு பாய்ச்சலில் முழுபலனையும் அடைவதானால் அவ்வரசியல் சோர்வுற்று, பிணியடைந்து நீடித்திராமல் அல்பாயசாய் மாண்டுவிடும். அங்ஙனமின்றி, அரசியல் ஸிரந்தரமாய் வலிவுற்று, ராஜ்ஜியத்தில் செழித்தோங்கியிருக்க வேண்டுமானால், அது மானிட அமைப்பைப்பற்றி மேற்கூறிய திருஷ்டாந்தத்தைப்போல, அடிமேலடியாய், அமரிக்கையாய்த்தான், வளர்ச்சியடைந்து வர வேண்டும்.

இந்தியாவில் ஞானவான்களாயிருந்த நம்முன்னோர்கள், ராஜாங்க விஷயமாய் ஏற்படும் சீர்திருத்தங்கள், திடீரென்று தோன்றி முளைக்காமல், நாளாவர்த்தியில் சமயத்திற்குத் தக்கபடி உண்டாக்கப்பெற்று, மெள்ளமெள்ள, அடிமேலடியாய், நிதானமாய் நடைபெற்று வளர்ந்து வலுவுற்று, நிலைபெற்று, பிரஜைகளுக்கு நன்மை பயக்கி, செழித்தோங்குவதுதான் நல்ல அரசியலின் லக்ஷணம் என்று நன்குணர்ந்திருந்தனர். அதனாலேதான், அத்தீர்க்கதரிசிகள் அவ்வரசியலுக்கு 'ஸம்ஸ்தா', 'ஷிரஸ்தா', 'மாமூல்', 'ராஜநீதி' என்று பல பெயர் வைத்தனர். 'ஸம்ஸ்தா' என்பது सम् (ஸம்) = நன்றாக, स्था, (तिष्ठ्) = நிற்பது. (Cf. संस्थानम् ஸம்ஸ்தானம்). நன்றாக ஊர்ஜிதமாய் நிலைபெற ஏற்படுவது என்று பொருள்படும். ஊர்ஜிதமாய் நிலைபெற்று ஏற்படுவது அரசியல் என்றதினாலே, நீங்கள், "வஸ்துக்களை ஒன்றோடொன்று ஆணிபோட்டு இப்புறம் அப்புறம் அசையவொட்டாமலும், ஒருகாலும் திருப்பவே முடியாமலும் அறையப்பட்டிருப்பது போல் இருக்கும் அரசியல்" என்று அர்த்தம் கொள்ளாமல், "எங்ஙனம் ஒரு விருக்ஷம் ஆணிவேர் ஊன்றி, வலிமைபெற்று, காலாகாலங்களில் உண்டாகும் மாறுபாடுகளுக்கெல்லாம் இணங்கி, இடம் கொடுத்துக்கொண்டு, வாடிவதங்கிச் சோர்வடையாமல், செழித்தோங்கி நிலைபெற்று வருகிறது

போல" ஸமயத்திற்குத் தகுந்த வேறுபாடுகளுக்கெல்லாம் இணங்கிவந்து, நன்றாக நீடித்து, நிலைபெற்று ஸ்திரப்பட்டிருக்கும் அரசியல் என்று நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுவது அவசியம். அதுவுமன்றி, அவ்வரசியலுக்கு "ஷிரஸ்தா" என்றும், "மாமூல்" என்றும் பெயர் உண்டாயிருப்பது, "தொன்றுதொட்டு நடப்பில் வழக்கமாய் வழங்கி வந்திருப்பது" என்கிற வேறு காரணத்தினாலேதான். மகாராஷ்ட்ர மன்னனாய் விளங்கிய ஸிவாஜி மஹாராஜ சத்திரபதியும், மகாராஷ்ட்ர ராஜ்ஜியத்தை ஸ்தாபித்த காலத்தில், அவ்விராஜ்ஜியத்தை ஆள ஒரு ராஜ்ஜிய நீதிமுறை ஏற்படுத்தியிருந்தனர். அதற்கு அவர் "ஷிரஸ்தா" என்கிற பெயர் வைத்தனர். ஏனென்றால், இந்தியாவில் ஆதிகாலம் தொடங்கி படிப்படியாய், நடப்புக்கு காலக்கிரமத்தில் மெள்ளமெள்ள வந்திருக்கும் வழக்கங்களை எல்லாம் முன்னிட்டுத் தான், ஏற்படுத்திய ராஜ்ஜிய நீதியாகையால் அதற்கு அவர் ஷிரஸ்தா என்று பேரிட்டார் (Cf. Sheristadar).

ஆங்கில நாட்டிலுள்ள அரசியல் அல்லது ராஜாங்க அமைப்பும்கூட, இங்ஙனமேதான் வெகுகாலமாய் காலக்கிரமத்தில் படிப்படியாய் நடைபெற்று வளர்ந்து ஓங்கி வந்திருக்கிறது. இங்கிலாந்திலும் ஜனங்கள் அரசுரிமை பெற்றிருப்பதும் ஒருநாளில் உண்டானதல்ல. முன்பின் யோஜனையில்லாமல் திடீரென்று தோன்றிமுளைத்ததுமல்ல. ஆயிரம்நாளில் செய்யவேண்டிய காரியத்தை ஒருநாளில் செய்யத் தலைப்பட்டுக் காலை ஒடித்துக்கொண்டுவிடாமல், படிப்படியாய் சாவதானத்துடன் நடந்தேறும் மார்க்கத்தையே, இந்தியாவில் 'நீதி' என்று வழங்குவதுபோல, ஆங்கிலரும்,அரசுரிமை பெற்றிருப்பதும் படிப்படியாகத்தான். அவர்களுக்கு அவ்வரசுரிமை முழுவதும் ஒரேநாளில் கிடைத்ததில்லை. அவர்களுக்கு ஸ்வய அரசாக்ஷி காலக்கிரமத்தில் படிப்படியாகத்தான் ஸம்பூர்ணமாய்க் கிடைத்திருக்கிறது. ஆகையினாலேதான் அவ்வரசாக்ஷி பங்கப்படாமல் நிலைபெற்று நீடித்து, ஜனங்களுக்கு நன்மை பயக்கலாயிற்று. இன்னமும் கேளுங்கள். ஏற்கனவே உங்களுக்கு கிளாட்ஸ்டன் பிரபுவைப்பற்றி கொஞ்சம் கூறியிருக்கிறேனல்லவா? ஆங்கிலருக்கு ஸ்வராஜ்ஜியம் கிடைக்கவேண்டிய நிமித்தமாயும், மானிடர்களும் ஸ்வாதந்திரம் பெற்று, தங்கள் தங்கள் உரிமைகளை அடையும் நிமித்தமாயும் இங்கிலாந்தில் அம்மகானைப்போல போராடிப் பாடுபட்டவர், யாரும் இலர். அப்பிரபுவும் ஸ்வய அரசாக்ஷி ஜனங்களுக்குப படிப்படியாய்த்தான் ஏற்படவேண்டும் என்பதை மேற்கோளாக்கொண்டவர் என்று முதல் அத்தியாயத்திலேயே திருஷ்டாந்தமாய்க் கூறப்பட்டுள்ளது. ராஜ்ஜியதந்திரசிகாமணியாகிய இந்த கிளாட்ஸ்டனைப்பற்றி, மார்லி ப்ரபுவும் எழுதிய சரித்திரத்தில் விளங்குவதாவது: "ராஜாங்க விஷயமாய் பிரஜைகள் தங்கள் தங்களுக்கு வேண்டுவன எல்லாவற்றையும் ஏககாலத்தில் விரும்பிக் கேட்பது ஒருநாளும் யுக்தமன்று. தங்களால் எதெது செய்யக் கடைப்படுமோ அதனைக்கேட்டு வாங்கிக்கொள்வதே யுக்தம்" என்று சொல்லியிருப்பதும் தவிர, தானும், 'மார்கஸ் அரீலியஸ்' என்பவரின் நீதிவாக்கியத்தையே ஆரோபித்து,

மேல்சொல்லியபடி நடந்துவந்தனர். 'மார்கஸ் அரீலியஸ்' சொன்னதாவது :—" ஜனங்கள் முன்னுக்குவரும் விஷயமாய்க் கிடைத்திருக்கும் லாபம் எவ்வளவு ஸ்வல்பமாயினும், தாங்கள் முன்னுக்கு வருவதை உத்தேசித்து, சிறுதுரும்பும் பல்லுக்குத்த உதவும் என்கிறபடி, அதை ஆசையுடன் அங்கீகரித்து, அதிலிருந்து இன்னம் மேன்மேலும் லாபகரத்தை அடைய யத்தனப்படவெண்டும்" என்பது.

கிளாட்ஸ்டன் எடுத்துரைத்த புத்திமதியை ஆங்கிலர்கள் அங்கீகரித்து, அதையே மேற்கொளாகக் கொண்டு, தங்கள் அரசுரிமைகளை நாளாவர்த்தியில்தான் கைப்பற்றியிருக்கின்றனர். கிளாட்ஸ்டன் பிரபுவோ, தன் தேசஸ்தராகிய ஆங்கிலர் மட்டும் ஸ்வய அரசாக்ஷி அடைய பாடுபட்டவரல்லர். அவருக்கு இந்தியாவில் இருந்த அபிமானமோ அதிகம். அவர் எப்பொழுதும் இந்தியர்களுக்காகவும் பாடுபட்டு உழைத்திருக்கிறவர். அவர் சொல்லியிருப்பதாவது, "இந்தியாவை யார் அரசாளுவது இந்தியாவுக்கு அநுகூலம்" என்பதை இந்திய மகாஜனங்களே தீர்மானித்துக்கொள்ளவேண்டிய விஷயமே அல்லாது அந்நியதேசத்தவர் அவர்களுக்கு ஆரோபிக்கவேண்டிய விஷயம் அல்ல" என்று பரிஷ்காரமாய்க கூறியுள்ளார். தவிரவும், ஞானசிகாமணியாகிய நம்முன்னோர்களும்கூட, இவ்விஷயத்தையே நமக்கு கட்டுரை கூறியிருப்பதினாலே, இந்திய அரசாக்ஷி பழைய ஸ்திதியிலிருந்து வந்ததுபோல் இராமல், நூதனஸ்திதியை அடைந்து நாமும் நன்மையடையும் பொருட்டு, தற்காலம் நம் அரசாக்ஷிவிஷயமாய் பிரிட்டிஷ் பார்லிமெண்டுமகாசபையார் ஏற்படுத்திய சட்டதிட்டங்களினால் நம் தேசத்திற்கு கிடைத்துள்ள சீர்திருத்தங்களை, நாம் ஆவலோடு ஸ்வீகரித்து, இச்சீர்திருத்தங்களையே மூலாதாரமாய்க்கொண்டு, இனிமேல் நாளாவர்த்தியில் மேன்மேலும் பலசீர்திருத்தங்களை படிப்படியாய்ப்பெற்று, நாம் ஸ்வராஜ்ஜியத்தின் பூரணபலனை அடையவேண்டும்.

இந்த ஒரு விஷயத்தையே, நான் அடிக்கடி பலவார்த்தைகளால் உங்களுக்கு வற்புறுத்திக் கூறுவதினாலே, நீங்கள் மனஸ்தாபப்படாதீர்கள். பிரிட்டிஷ் பார்லிமெண்டாரால் நமக்கு தற்காலம் ஏற்பட்டிருக்கும் சீர்திருத்தங்கள், "நமக்கு வேண்டிய அளவு நன்மை பயக்கப்போவதில்லை" என்றும், "நாம் கோறிக்கொண்ட அளவு அச்சீர்திருத்தங்கள் ஏற்படாமற்போயின" என்றும், "இந்தியர்கள் தற்காலத்திலேயே தங்கள் அரசுரிமைகள் முழுவதையும் ஸம்பூர்ணமாய் வகிக்க அர்கதையுள்ளவர்கள்" என்றும் பலவிதமாய் நம்மவரில் சிலர், இச்சீர்திருத்தங்களைப்பற்றி தோஷாரோபணம் செய்கின்றனர். ஆகையினால்தான் இங்ஙனம் கூறப்பட்டுள்ள பேச்சைக்கேட்டு, இந்திய மகாஜனங்கள் தடுமாறக்கூடாது என்று நான் உங்களுக்கு இந்த விஷயத்தை பலவிதமாயும் அச்சுறுத்துகிறேன்.

இச்சீர்திருத்தங்களைப்பற்றி இவ்விதம் தோஷாரோபித்தவர்கள் பேரில் எனக்கு ஆங்காரம் இல்லை. அவர்களிடத்தில் எனக்கு பிரீதி

அதிகம். நான் அத்தகையினேருக்கு வைத்திருக்கும் மரியாதையும் மிகுதி. ஏனெனில், ஒருவனுக்கு கிடைக்கவேண்டிய உரிமைகள் யாவத்தையும் ஏககாலத்தில் கேட்டு வாங்கிக்கொண்டு சுகம்பெற நினைப்பதுதானே உலகத்தில் வழக்கம். அழுதபிள்ளைக்கல்லவோ பால்கிடைக்கும்! முழுப்பூசனிக்காய் வேண்டுமென்று கேட்டால் தானே, அதில் ஒரு பகுதியாகிலும் கிடைக்கும்!! இப்படி சாதாரணமாய் வழங்கும் பேச்சைக் கொண்டுதான், நம்மில் சிலர் இச்சீர்திருத்தங்களைப்பற்றி திருப்தி இல்லாமல் இருக்கிறார்கள். இப்படிச் சொல்லுவதுதான் அவர்களுடைய கக்ஷியும். பூசனிக்காய் முழுசாய்வேண்டும் என்று கோரிக்கொள்வது ஸகஜம்தான். அது அப்படியே கிடைத்துவிட்டால், அதை முழுவதும் அப்பொழுதே மென்றுதின்று ஜரிமானத்திற்கு வரச்சக்தியிருந்தால் அல்லவோ, முழுப்பூசனிக்காய்வேண்டும் என்று வேண்டிக்கொள்வதன் பயன்; அங்ஙனமின்றி, பூசனிக்காய் முழுசாகவே பெற்று, அதை அப்படியே தின்று ஜரித்துக்கொள்ள சக்தியிராமல் போனால், முழுப்பூசனிக்காயே வேண்டுமென்று நாம் ஏன் கூக்குரலிடவேண்டும்!! இங்ஙனம் இடும் கூக்குரல் பிதற்றல் அல்லவா? பூசனிக்காய் முழுவதையும் ஒரேதடவையில் விரும்பிக்கேட்காமல் அதிலிருந்து துண்டுதுண்டாய் வாங்கி, ஒவ்வொன்றாய் மென்றுதின்று ஜரிமானத்திற்கு கொண்டுவந்து, தேகம் வலிவுற்று, அப்படியே இன்னம் அநேக பாக்கித் துண்டுகளையும் கொஞ்சம் கொஞ்சமாய் கிரகித்து, அவைகளையும் தின்று ஜரிமானப்படுத்திக்கொண்டுவந்தாலல்லவோ, தேகம் திடம்பெற்று, சுகம் பெறலாகும். கொடுப்பவர்களும், "வாங்கித் தின்போருக்கு ஜரித்துக்கொள்ளும் சக்தி உண்டாகி இருக்கிறது" என்று தெரிந்துகொண்டு, மேன்மேலும் அதிகமாய்த் தின்பதற்குக்கொடுக்க ஆசை பிறக்கும். ராஜ்ஜியாதிபத்தியத்திலும் ஜனங்கள், ஸ்வதந்திரங்கள் அடைந்து முன்னுக்கு வருவது இம்மானிடவாழ்க்கையின் தகைமைத்து. யாதாமொரு தேசத்தில் கலகமில்லாமலும், ஒழுங்கு தவறி நடவாமலும், பிரஜைகள் தங்கள் தங்கள் ஸ்வாதந்திரியத்தை விடாமலும் பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டுச் செலுத்தும் அதிகாரமே, ராஜ்ஜியாதிபத்தியமாகும். ஆளப்படும் ஜனங்களுக்கு அவ்வாதிபத்தியம் நன்மை பயக்கவேண்டுமானால், அது காலக்கிரமத்தில் ஏற்படும் அனுபவத்தையும், நடவடிக்கையும் ஒட்டி, ஸமயோஜிதமான புத்தியை மேலிட்டு, படிப்படியாய் பரிபக்குவப்பட்டு விருத்தி யடைந்துவரவேண்டும். ஒருவன் பிறரை ஆளுவது இருக்கட்டும். தன்னைத்தானே அடக்கி ஆளுவது எவ்வளவு துர்லபமாயிருக்கிறது! இன்னமும் பாருங்கள். ஹிந்து மதஸ்தினர், 'பகவத்கீதை' என்கிற கிரந்தத்தை எவ்வளவு தெய்வபக்தியோடு ஆதரித்து வருகின்றனர்! அதில் மானிடவாழ்க்கையைப் பற்றியும், மானிடகுணகுணங்களைப் பற்றியும் அடங்கியுள்ள நுண்ணிய விஷயங்களை ஆராய்ந்துபார்த்து, அயல்நாட்டு அரியபெரிய கல்விமான்கள் அநேகரும் அப்புஸ்தகத்தை சிலாகித்துக் கொண்டாடுகின்றனரன்றே!! அப்பேர்ப்பட்ட கிரந்தமும், ராஜாங்கவிஷயமாய் என்னதான் அறைகிறது பார்ப்போம். "ஒவ்வொரு மனுஷியனும், பிறனுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் சரியானபடி, ஒருவித லாபத்தையும் கருதாமல்

செய்துமுடிக்க அருகதை உள்ளவனுக இருப்பது அவசியம்?' என்றும், "அங்ஙனம் பிறருக்குச்செய்ய அருகதையை அடையவேண்டுமாயின், முதல்முதலில் தான் தன்னையே வசப்படுத்தி அடக்கிஆளத் திறமை வாய்ந்திருத்தல் பிரதானம்" என்றும், அங்ஙனம் தன்னைத்தானே அடக்கியாளச் சக்திவேண்டுமாயின் ஒரே நாளில் அச்சக்தியை அடைவது அசாத்தியமான காரியம்" என்றும் "அச்சக்தியைப் பலவித யோகாதிகளால் அநேககாலம் தன் இந்திரியம் முதலியவைகளை அடக்கிப், படிப்படியாய் அவைகளைத் தன்வசமாக்கி பரிபக்குவம் மிருந்தால்தானே, தன்னைத்தானே அடக்கி ஆளும் யோக்கியதையை அடையலாகும்" என்றும் அப்பகவத்கீதை முறையிடுகிறது. ஆகவே, அங்ஙனம் யோகாதி மூலியமாய்ப் பரிபக்குவப்பட்டு அடையக்கூடிய சக்தியையே, தன்னைத்தானே ஆளுவதற்கு உள்ள அருகதையாகும் என்று அந்நீதிவாக்கினின்றும் ஏற்படுகிறதல்லவா? இன்னமும் ஒரு திருஷ்டாந்தம் காட்டுகிறேன் பாருங்கள். மகாராஷட்டிர ஜாதியாரால் கொண்டாடப்பெற்று அவர்களுக்குக் குலமகனுய் உதித்தோங்கிய, ஸ்ரீ ஞானேசுவரர் என்னும் மகானும் என்ன சொல்லுகிறுர் என்றுல், "ஒருவன், தன்னையோ, அல்லது பிறனையோ, அடக்கிஆளச் சக்திவந்தனுகவேண்டுமாயின், அவன் தனக்கு இடப்பட்டிருக்கும் யாதாமொரு காரியத்தை தனக்கு தற்காலத்துள்ள திறமையையே உபயோகித்து, அக்காரியத்தை பஞ்சபூத சாக்ஷியாய்ச் செய்ய ஆரம்பித்து, தனக்கு இருக்கும் திறமை அக்காரியத்தைவிட இன்னம் மேன்மேலான காரியங்களையும் சாதிக்கப் போதுமானது என்று அகம்காரம் அடையாமல், செய்துமுடிப்பானுயின், அது அவனுக்கு நல்லபலனைத் தந்து, அதிலிருந்து அஜ்ஜன்மா, இன்னம் மேலான காரியத்தையும் செய்துமுடிக்கத் திறமைவாய்ந்தது என்பதை ருஜுப்பிக்கக்கூடிய சாதனமாய் இருக்கும்." மேலும் மார்லி பிரபு கிளாட்ஸ்டனைப்பற்றி எழுதிய ஜீவியச்சரிதத்தில், கிளாட்ஸ்டன் மகானும் இவ்விஷயத்தைத் தானே எடுத்து உரைத்திருக்கின்றனர் என்று நான் ஏற்கனவே, உங்களுக்கு, கூறியிருக்கிறேனல்லவா?

ஆகையினுலே, இந்திய ராஜாங்க விஷயமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சீர்திருத்தங்கள், நாம் ஸ்வராஜ்ஜிய உரிமை முழுவதையும் அடைவதற்கு இப்பொழுதே இடங்கொடாமல், அவ்வுரிமைகளில் ஒரு பகுதிமாத்திரம்தானே நமக்கு தற்கால உபசாந்தியாகக் கிடைத்துள்ளது என்றும், ஆனதுபற்றி 'அச்சீர்திருத்தங்களால் நமக்குப் பலனே இல்லை' என்றும், 'அவைகள் நமக்கு திருப்திகரமாகவே இல்லை' என்றும், 'நாம் வேண்டிக்கொண்டபடி அச்சீர்திருத்தங்கள் நம் தேசத்திற்கு ஏற்படுத்தப்படவில்லை' என்றும் ஆத்திரப்பட்டு வருந்தாதேயுங்கள். உலகத்தில் பொதுவாய் மகத்தான காரியங்களில் ஸித்தியடைய வேண்டுமானுலும் சரி, பிரத்தியேகமாய் ராஜீயவிஷயங்களில் பிரஜைகளுக்கு ஊக்கம் மேலிட்டு, அவர்கள் ராஜ்ஜியாதிபத்தியம் வகித்து, ராஜ்ஜிய தந்திர காரியங்களில் ஸித்தியடையவேண்டுமானுலும் சரி, அங்ஙனம் ஸித்திபெறுவதற்குச் செய்யவேண்டிய முதல் காரியம்தான் மூலாதாரம். அக்காரியமே வெகு நன்றுய் ஒழுங்குபெறச் செய்யப்பட

வேண்டும். அம்முதற்காரியம் செய்வதில் மன உத்ஸாகமும், ராஜ்ஜியபக்தி சிரத்தையும் அதிகமாய்வேண்டும். அப்படிப்போடும் முதலடிதான் முட்டற முற்றும் செவ்வனே போடப்படவேண்டும். "முதல் கோணல் முற்றும் கோணல்" என்பதும் "கடைகால் சரியானபடி போட்டால்தானே வீடும் சரிவரக் கட்டிமுடியும்" என்பதும் ஜனங்களுக்குத் தெரிந்திராதவிஷயமல்லவே? ஆகவே, நாம் ஸ்வராஜ்ஜியாதிபத்தியத்தை 'முற்றிலும் இடையூறின்றி அதிசீக்கிரமாய் அடைந்து ஸித்தி பெறவேண்டுமாயின் தற்காலம் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சீர்திருத்தங்களையே நமக்கு முதலடியாகவும், மூலாதாரமாகவும் கொண்டு, அவைகளை முழுமனதோடு ஸ்வீகரித்து, யாவரும் ஒரு மனத்தராய் விரோதமின்றி ஒருங்கு சேர்ந்து, அச்சீர்திருத்தங்களை அநுஷ்டானத்திற்குக் கொணடுவந்து, அவைகளை தோஷாரோபணம் செய்துச் சிதைக்க முயலாமல், அவைகளினின்றும் நாம் படிப்படியாய் நிரந்தரமாய் நீடித்திருக்கக்கூடிய ஸ்வய அரசாக்ஷியை மென்மேலும் பெற யத்தனிப்பதுதான் உத்தமோத்தமமாகும். இவ்விஷயங்கள் யாவத்தையும், காலம்சென்ற நம்முடைய கோபாலகிருஷ்ண கோக்ளே என்பவரும் தீவிரமாய் வெளியிட்டு, தானும் அங்ஙனமே நடந்துவந்தார். ஜனங்களும் அவர் நடந்து வந்ததைச் சிலாகித்து அவரை மேன்மைப்படுத்தி இருக்கின்றனர். இதுகாறும், நாம் கவர்ன்மெண்டார் செய்யும் காரியங்களில் குற்றம் குறைகளை மட்டும் எடுத்துச் சொல்லிவந்தோமே தவிர, நாமே அக்குற்றங்களின்றி ராஜ்ஜியாதிபத்தியம் வகித்தவரல்லேம். இப்பொழுதோ நமக்கு அவ்வித ராஜ்ஜியாதிபத்தியம் வகிக்க முதல் முதலாய் ஒரு அதிகாரம் கிடைத்திருக்கிறது. அவ்வதிகாரத்தை நாம் இதுமுதற்கொண்டு நன்றாய் பரித்து, ராஜ்ஜியாநுபவம் மிக்கு, பரிபக்குவம் வாய்ந்து, வருஷந்தோறும் ராஜ்ஜிய பாரத்தை மென்மேலும் அதிகமாய்த் தாங்கிவரத் திறமை அடைந்திருக்கிறோம் என்பதை வெளிப்படுத்திக் காட்டுவதல்லவோ நமது கடமையாகும்.

3-ம் அத்தியாயம்.

நூதன அரசாக்ஷியின் சரித்திர வரலாறு.

முதல் இரண்டு அத்தியாயங்களிலே இந்தியா விஷயமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சீர்திருத்தங்களின் முக்கியமான ஸாராம்சங்களைப் பொதுவாகவே, நான் உங்களுக்கு எடுத்துரைத்து, அச்சீர்திருத்தங்கள் இதற்கு முன்னடியே ஏற்படாமலிருந்துவந்த காரணத்தையும் உங்களுக்கு விளக்கிக்காட்டி, இந்தியர்கள் ஸ்வராஜ்ஜியாதிபத்தியம் முற்றிலும் அடைந்து நிர்வகிக்க, அச்சீர்திருத்தங்களே கடைகால் போட்டதுபோல் முதல்படி என்றும், அவைகள் எவ்வளவு மூலாதாரமாய் நின்று செழித்தோங்கி, இந்தியர்களுக்கு ஸ்வராஜ்ஜியம் நீடித்து நிலைபெற்று வாழ அத்தியாவசியகமானவை என்றும், அவைகளின் பலனைத் தெரிந்துகொள்ளவேண்டியது ஒவ்வொருவனுடைய கடமை என்றும் உங்களுக்கு விரித்துக்காட்டி, அச்சீர்திருத்தங்களால் நமக்கு நிஷ்பலன் என்று அவைகளை அலக்ஷியம்பண்ணிச் சிதைத்துவிடாமல், அவைகளை முழுமனதோடும் யாவரும் ஒருங்குசேர்ந்து ஸ்வீகரித்து, அவைகளையே மூலாதாரமாய்க்கொண்டு, ஸ்வராஜ்ஜியாதிபத்தியம் இனிமேல் மென்மேலும் நாம் பெற முயல்வதே நமது கடமையாகும் என்றும், நான் உங்களுக்கு விரித்து ருஜுபித்திருக்கிறேன். இந்த அத்தியாயத்திலே, ஆங்கில அரசாக்ஷி இந்தியாவிற்கு வந்தநாள் முதலாக, இந்தநாள் பரியந்தம் இந்திய அரசாக்ஷி சம்பந்தமாய் என்ன என்ன விஷயங்கள் ஏற்பட்டுவந்து, இப்பொழுது இச்சீர்திருத்தங்கள் உண்டாயின என்பதை உங்களுக்கு ஆநுபூர்வமாய் எடுத்துச் சொல்லப்போகிறேன்.

இவ்விஷயங்கள்தான், இச்சீர்திருத்தங்களுக்காகிய சரித்திர வரலாறு ஆகும். இச்சரித்திர வரலாற்றை நீங்கள் நன்றாய்த் தெரிந்துகொண்டால் சீர்திருத்தங்களின் பலனை நன்கு உணர்ந்து அவைகளை மதிக்கலாகும். ஒரு தேசத்தில் சீர்திருத்தம் உண்டாவது ஓரேநாளில் திடீரென்று ஏதோ தற்செயலாய் ஏற்படக்கூடியதல்ல. காலாந்திரங்களில் உண்டாகும் அநுபவத்தை தழுவித்தான் சீர்திருத்தம் ஒரு தேசத்தில் ஏற்படக்கூடியது. அக்காலங்களில் அடைந்துள்ள அநுபவமே அச்சீர்திருத்தத்திற்கும் மூலாதாரம். அப்பேர்ப்பட்ட அநுபவந்தான், தற்கால ஸ்திதியை அடைய வழிகாட்டலாகி, தற்கால ஸ்திதியோடு ஐக்கியப்பட்டு பிற்கால ஸ்திதி எப்படி இருக்கும் என்பதை தீர்மானிக்கலாகும். இங்ஙனந்தான் ஒரு ராஜ்ஜியத்தில் ஸ்வய அரசாக்ஷி ஸம்பூர்ணமாய் ஒருவித ஆரவாரமின்றி உண்டாவதற்குச் சரியான மார்க்கம்.

ஆனதுபற்றி, இச்சீர்திருத்தங்களின் மூலாதார விருத்தாந்தங்களை உங்களுக்கு விளக்கிச் சொல்வது முக்கியமாகையால், நீங்கள், இங்கிலீஷ் ஈஸ்டு இந்தியா கம்பெனியார் இந்தியாவுக்கு வந்தநாள் முதலாக 1858-ம் வருஷம் வரையில் 258 வருஷமாய் உள்ள இந்தியாவைப்பற்றிய சரித்திரம் அறிந்துகொள்ளவேண்டும். இக்கம்பெனி

யார் காலத்திலேதான் இந்தியர்கள் ஸ்வராஜ்ஜியாதிபத்தியம்பெற விதை ஊன்றப்பட்டது. ஒரு தேசத்தில் சட்டம் ஏற்பட்டு, அச் சட்டத்தை, ஜனங்களில் ஒருவருக்கு ஒருமாதிரியாகவும், மற்றவ ருக்கு வேறுமாதிரியாகவும், ஏற்ற வித்தியாசமாயும், யாவரையும் ஒன்றுபோல் பாவித்து ஒரேமாதிரியாய், அச்சட்டத்தை பரிபாலிக் காமல் போனால், அத்தேசத்தில் ஸ்வராஜ்ஜியாதிபத்தியம் என்பதே கொஞ்சமேனும் ஏற்படாது.

கார்ன்வாலிஸ் என்ற பிரபு இந்தியாவை ஆண்டுவந்த காலத் தில் இந்திய அரசாக்ஷி சம்பந்தமாய் ஒரு புதிய ஏற்பாடு செய்து, அதற்கு "இந்திய ராஜாங்கத்தை ஒழுங்குபடச்செய்த சீர்திருத் தம்" என்று பெயர்வைத்து, அதினாலே இந்திய பிரஜைகள் யாவரை யும் சமமாகவே அவ்வொழுங்கின்கீழ் அடக்கிப் பரிபாலித்துவந்தார். சென்ற 1919-ம்ஞு நவம்பர் மாதத்திலும், மாக்ஷிமைதங்கிய நமது சக்கிரவர்த்தியவர்களும் தமது பிரகடன பத்திரிகையினால் காம்பீரி யமாய் வெளிப்படுத்தியதாவது. "ஈஸ்டு இந்தியா கம்பெனியார் காலத்தில் 1773—1784-ம் வருஷங்களில் இந்திய அரசாக்ஷி சம்பந்த மாய் ஏற்பட்ட சட்டங்கள் இந்தியாவில் நியாய பரிபாலனம் சரிவர ஒழுங்காய் நடைபெற வேண்டியதை உத்தேசித்துச் செய்யப்பட்ட வைகள். 1833-ம் வருஷம் ஏற்பட்ட சட்டம் இந்தியர்களுக்கு ஸர்க் கார் உத்தியோகம் வகிக்க இடம்கொடுத்தது" என்பது.

ஆகவே இச்சட்டங்கள் முதல் முதலில் இந்தியர்கள் ஸ்வராஜ் ஜியம் அடைய வழிகாட்டிவைத்தவைகளாகும். 1858-ம் வருஷத் தோடு ஈஸ்டு இந்தியா கம்பெனியாருடைய ஆளுகை முடிந்து போய், நமது ஆங்கில அரசியர், தானே நேர் பார்வையில்வைத்து தம் தேசத்தை அரசுபுரிய ஏற்பட்டது, நாம் ஸ்வராஜ்ஜியம் பெறுவ தற்குக் காட்டிய அடுத்த வழியாகும். அக்காலத்தில் அரசுபுரிந்த விக்டோரியா மஹாராணியார் 1858-ம் வருஷத்தில் இந்தியா விஷய மாய் ஒரு பிரகடனப் பத்திரம் பிறப்பித்து, அதை காம்பீரியமாய் பிரசுரப்படுத்தி, இந்தியர்களுக்குள்ள ஸ்வாதந்திரியங்களேயும் அவர் களின் உரிமைகளேயும் தான் நன்குமதித்தவள் என்று ஸ்பஷ்டமாய் வெளிக்காட்டி இருக்கின்றனள். அந்த 1858-ம் வருஷம் வரையில் இந்தியாவில் சட்டதிட்டங்கள், இந்தியாவை ஆண்டுவந்த நிர்வாக சபையாராலேயே ஏற்படுத்தப்பட்டிருந்தன. மகாராணியார் நேர் பார்வையில் இந்திய அரசாக்ஷி வந்ததும் இந்தியாவைப் பரிபாலித்து வர சட்டநிரூபண சபைகளே ஏற்படுத்தி, அச்சபைகளில், சட்டங் களே உண்டாக்குவதற்கு இந்தியர்களிலிருந்து சில பிரதிநிதிகளேயும் நேமித்தனள். இச்சட்டசபைகள் 1861-ம்ஞு தான் முதல் முத லாய் ஏற்படுத்தப்பட்டன. அச்சபைகளில் சில இந்திய பிரதி நிதிகளே நேமித்த காரணம், இந்தியர்களுக்கு காலக்கிரமத்தில் தாங் களே அப்பிரதிநிதிகளேத் தேர்ந்தெடுத்துக்கொள்ள இடம் கொடுக்க வேண்டுவது, என்பதை மகாராணியார் பரிஷ்காரமாய் வற்புறுத்தித் தெரிவித்திருக்கின்றனள். இவ்விதமாகவே, 1892-ம்வருஷம் வரை யில் 30 வருடங்கள் கழிந்தன.

1892-ம் வருஷம் இதற்கு அடுத்தபடியான இன்னம் ஒரு மார்க் கமும் ஏற்பட்டது. இதுவே இந்திய ஸ்வராஜ்ஜியாதிபத்தியத்திற்கு மூன்றுவதுபடியாகும். இதினால், சட்டநிரூபண ஸபைகளும்

விரிந்து, அவைகளிலுள்ள அங்கத்தினரும் அதிகப்பட்டனர். வியாபாரச்சங்கத்தாரும், ஸர்வகலாசாலையும், குடித்தனக்காரர்களும், முனிஸிபாலிடிகளும், லோகல் போர்டுகளும், பிரத்தியேகமாய் மேல் சொல்லிய சட்டநிர்மாண சபைக்கு அங்கத்தினராகி, கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தினர் அல்லாத தங்கள் பிரதிநிதிகளை நேமிக்கும்படியான உரிமை கிடைத்தது. இங்ஙனமாகவே சட்ட சபைகளுக்கு நம்மவர்களும் அங்கத்தினராகி நமக்குள்ள உரிமைகளைக் கேட்பதற்கு இடம் உண்டாகிவந்தது. அவ்வங்கத்தினர்களும் ராஜாங்க சம்பந்தமாயுள்ள கேள்விகளைக் சட்டசபைகளில் கேட்கவும், அவைகளுக்கு விடைகள் பெறவும் உள்ள ஸ்வாதந்திரமும் கிடைத்தது. மேலும், ராஜ்ஜிய விஷயமாய் நேரிடும் வரவுசெலவுக் கணக்கையும் பரிசோதித்து ஆராய்ந்து தெளிய இடமும் நமது கவர்ன்மெண்டாரால் கிடைத்தது.

இவ்விதமாக 1892-ம் வருஷம் முதல் 1909-ம் வருஷம் வரையில் 17 ஸம்வத்ஸரகாலம் நடந்தேறிய பின்னர், இந்திய ராஜாங்க விஷயமாய் 'மார்லி-மின்டோ' என்று பெயர் பெறும் சீர்திருத்தம் ஏற்பட்டது. இதினால், இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாகாணத்திலும் கவர்னரோடு கலந்த நிர்வாக சபையிலும் இந்தியர்களில் ஒருவர் நியமிக்கலாயினர். சட்டநிரூபண சபைகளுக்கும் அதிகாரம் மேன்பட்டு, அவைகளில் இந்தியர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினரும் அதிகமாயினர். மேலும் கவர்னர்ஜனரல் நடத்தும் சட்டநிரூபண மகாசபையிலும் அங்கத்தினர்கள் அதிகரித்து, 68 நபர்களாகி, அவர்களில் 28 நபர்களுக்குமேல் ஸர்க்கார் உத்தியோகம் வகித்தவர்கள் அங்கத்தினராக இருக்கக்கூடாது என்றும் ஏற்பட்டுப் போய்விட்டது. இந்த மகா சபைக்கு ஸர்க்காரால் நேமிக்கப்படுவதற்கு இன்ன இன்ன ஸ்தானத்தவர்கள்தான் பிரதிநிதிகளைத் தேர்ந்து எடுத்து அனுப்பவேண்டுமென்று பிரத்தியேகமாய் தேர்ந்தெடுக்கும் தொகுதிகளாகிய ஸ்தானங்களும் ஏற்பட்டு, அத்தொகுதிகளிலிருந்து அங்ஙனம் 27 பேர்கள் ஷை சபைக்கு அங்கத்தினராயும் நேமிக்க இடமாயிற்று. இதேமாதிரியாகவே, மாகாணச் சட்டநிரூபண சபைகளும் விரிவு அடையவாய், அவைகளுக்கும் ஸர்க்காரால் நேமகம் அடைவதற்கு அருகதையுள்ள நபர்களைத் தேர்ந்து எடுத்தனுப்பக்கூடிய சில வேறு தொகுதிகள் ஏற்படுத்தப்பட்டன. இந்த நூதன தொகுதிகளாவன :—குடித்தனக்காரர்கள், அல்லது நிலத்திற்குடையவர்கள் - மகம்மதியர்கள், பஞ்சாபிலுள்ள சீக்கிய ஜாதியார்-ஒவ்வொரு மாகாணத் தலைநகரிலுள்ள முனிஸிபாலிடி-சர்வகலாசாலைகள்-மாகாண வர்த்தகச் சங்கத்தினர்கள் - முனிஸிபாலிடிகளும், ஜில்லா போர்டுகளும் ஒருங்குசேர்ந்த ஸ்தானம் - ஆகிய இவைகளே.

ஆகவே, மாகாணச் சட்டநிரூபண சபைகளில் ஸர்க்காரார் உத்தியோகஸ்தனராகிய அங்கத்தினர் குறைவுபட்டுப் போனதுவும் தவிர, சட்டநிரூபண சபை அங்கத்தினர்களுக்கு தங்கள் ராஜ்ஜிய சம்பந்தமாயுள்ள பொது நன்மையைக்குறித்த தீர்மானங்களை சட்ட சபைகளில் கொணர்ந்து, ராஜ்ஜிய காரியங்களைப் பலவிதத்திலும் ஆராய்ந்து அறிவதற்குள்ள உரிமையும் கிடைத்தது. அப்பேர்ப்பட்ட தீர்மானங்கள் சட்ட சபை அங்கத்தினரில் மெஜாரடியாரால்

அங்கீகரிக்கப்பட்டுப் போனாலும், ஸர்க்காருக்கு அவைகளை அமு லுக்குக் கொண்டுவராதபடி நிறுத்திவைக்க அதிகாரம் மாத்திரம் இருந்து வந்தது.

ஆகவே, இந்தியாவில் ஆங்கில அரசாக்ஷி தொடங்கின நாள் முதலாய், இந்திய அரசாக்ஷி படிப்படியாய் நான்கு முக்கியமாயுள்ள ஸ்திதிகளை அடைந்து வந்து, ஒவ்வொரு ஸ்திதியினின்றும் அடுத்த ஸ்திதிக்கு அநுகூலமாயுள்ள சீர்திருத்தங்கள் ஏற்பட வழிகாட்டு வித்து, அச்சீர்திருத்தங்கள் அநுஷ்டானத்திற்கு வரப்பெற்று, அப்ப டியே படிப்படியாய் புதிது புதிதாய் சீர்திருத்தங்கள் வருஷா வருஷ மும் மேலிட்டு வந்திருக்கிறன என்பது உங்களுக்கு இப்பொழுது விசதமாகும்.

அந்த நான்கு ஸ்திதிகளில் நீங்கள் முக்கியமாய் ஐயம்திரிபு அற கவனிக்கவேண்டிய விஷயங்களாவன :—

முதலாவது ஸ்திதி.—இந்தியர்களுக்கு ஏற்பட்ட சட்டதிட்டங்கள் ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களாலேதான் செய்யப்பட்டன. அவ் வுத்தியோகஸ்தர்களும் ஆங்கிலரே. அவர்களில் ஒருவர்கூட இந்தியர் இல்லை.

இரண்டாவது ஸ்திதி.—இந்தியாவில் சட்டங்கள் ஆங்கிலேய ஸர்க் கார் உத்தியோகஸ்தர் பலராலும் உத்தியோக முறைமை இராத சில ராலும் செய்யப்பட்டன. அவ்வுத்தியோக முறைமையில் இராதவர் சட்டம் செய்யும் நிமித்தமாய் ஸர்க்காராலே நேமிக்கப்பட்டவர்கள். இங்ஙனம் நேமிக்கப்பட்டவர்களில் இந்தியர்கள் வெகு ஸொல்பம்.

மூன்றவது ஸ்திதி.—மேல்சொல்லப்பட்ட இரண்டு ஸ்திதிகளிலும் இந்தியாவிலுள்ள சட்ட நிர்மாண சபைகள், சட்டங்கள் மாத்திரம் உண்டாக்க ஏற்பட்டிருந்தனவே தவிர, இந்தியாவைக்குறித்த வரவு செலவு திட்டங்களைப் பரிசீலனைசெய்து பார்க்கவும், இந்திய அர சாக்ஷியைக்குறித்து ஸர்க்காரைக் கேள்வி கேட்பதற்கு உள்ள உரி மை ஒன்றும் இராமலிருந்தன. இந்த மூன்றும் ஸ்திதியில் இவ்விர ண்டு உரிமைகளும் வெகு கொஞ்சமாய் கிடைத்தன. தவிரவும் ஸர்க்காரால் சட்ட நிர்மாண சபைக்கு அங்கத்தினராக (மெம்பராக) இதுவரையில் நியமிக்கப்பட்ட ஸர்க்கார் உத்தியோகமில்லாதவரும், ஸர்க்கார் இஷ்டப்படி நேமிக்கப்படாமல், ஜனங்களுடைய சில ஸமூ கங்களாலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிலிருந்துதான், ஸர்க்கார் இது முதல்கொண்டு அவர்களை நியமிக்கலாயிற்று. ஆகவே இது முதல் தான் ஜனங்களுக்கு, தங்களுக்கு ராஜாங்க விஷயமாய் சட்ட சபைக்கு மெம்பர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு மூலஸாதனமாயுள்ள உரிமை கிடைத்தது.

நான்காம் ஸ்திதி.—இந்த ஸ்திதியில்தான் இந்தியா கவர்ன்மெ ண்டு நிர்வாக ஸபையிலும், ஒவ்வொரு மாகாண அரசாக்ஷி நிர்வாக சபையிலும், ஒவ்வொரு இந்தியரும் நியமிக்கலாயினர். ஸர்க்கார் ராஜாங்க ஸம்பந்தமாய் செய்யும் விஷயங்களை ஜனங்கள் ஆராய்ந்து பார்த்து அறிய உரிமை கிடைத்ததும் இப்பொழுது தான். மாகா ணச் சட்ட சபைகளிலும் ஸர்க்கார் உத்தியோகஸ்தர்கள் மேலாடி மெஜாரடியிலிருந்து வந்தது போய், காலம் சென்ற கோபால கிரு ஷ்ணகோக்லே போல பேர் பெற்ற இந்திய பிரபுக்கள் ராஜாங்க

விஷயங்களைப்பற்றிப் பரிசீலனை செய்யவும், ராஜாங்கத்திற்கு அநுகுணமாய் தங்கள் மனதில் உள்ளவைகளைத் தாராளமாய் வெளியிட்டு, தங்கள் அபிப்பிராயங்களைச் சட்ட சபைகளில் எடுத்துச்சொல்லவும் இடம் உண்டாயிற்று. இதுமாத்திரமல்ல. இச்சட்ட நிர்மாண ஸபைக்கு மெம்பராக ஜனங்களே தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு அநுகுணமாக இந்தியாவில் ஒவ்வொரு மாகாணமும் சில சில தொகுதிகளாய் பிரிக்கப்பட்டது.

ஆகவே, இங்கிலீஷ் ராஜாங்கமுறை, சுமார் 150 ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் ஈஸ்டு இந்திய வர்த்தக கம்பெனியாரால் ஏற்படுத்தப்பட்டிருந்த மூலாதாரச் சட்டத்தைத் தழுவி, ஜனங்கள் யாவருக்கும் ராஜாங்கத்தில் ஒன்றுபோல் சட்டம் நடைபெறவேண்டும் என்கிற ஸ்திதியிலிருந்து படிப்படியாய் தற்காலம் வரையில், முன்னுக்கு வந்துகொண்டேயிருக்கிறதல்லவா? ஜனங்களுக்கும் படிப்படியாய் தங்கள் ராஜ்ஜியத்தைத் தாங்களே பரித்து ஆளும்படியான இடமும் கிடைத்திருக்கிறதல்லவா? ஒவ்வொரு ஸ்திதியிலும், இந்திய ராஜாங்க விஷயமாய் பாடுபட்டு உழைத்த இந்திய சிரேஷ்டர்கள் ராஜீய விஷயங்களில் தாங்கள் வேண்டிக் கேட்ட உரிமைகளும் அதிகரித்து, அவைகளும் கை கூடி வந்தன அல்லவா? காலம் செல்லச்செல்ல, கவர்ன்மெண்டார், ராஜாங்க விஷயமாய்ச் செய்யும் காரியங்களில் குற்றம் குறைகள் கண்டுபிடித்து, ஸர்க்காரைத் திருத்திக்கொண்டுவர ஜனங்களுக்கு ஊக்கமும் அதிகரித்து வந்திருக்கிறதல்லவா? தற்காலம் கிடைத்துள்ள நூதனச் சீர்திருத்த விஷயமாய் ஏற்பட்டிருக்கும் ரிபோர்ட்டிலிருந்து தெரியவருவதாவது: ராஜாங்க ஸம்பந்தமாய் இந்தியர்கள் அடிக்கடி வற்புறுத்திக் கேட்டுக்கொண்டபடியே, இந்திய அரசாக்ஷி ஏற்பட்டு, இந்தியர்களே ஸ்வராஜ்ஜியாதி பத்தியம் வகித்து, இந்தியாவிற்கு எது அநுகூலமோ அப்படி இந்திய ராஜாங்கம் நடைபெறச் செய்வது தான் இந்தியர்களின் கோறிக்கை. அப்படிக்குக்கிடைத்திருக்கும் ஸ்வாதந்திரியம் எங்கும் பரவி, யாவராலும் எடுத்துப்பேசப்பட்டுமிருக்கிறது.

சென்ற 1914-ம் வருஷம் ஆகஸ்டுமாதம், உலகத்தில் உண்டாகிய யுத்தம் இந்தியர்கள் ஸ்வராஜ்ஜிய விஷயமாய்க் கோறிக்கொண்டதற்கு வேறொரு வகை வீரியத்தையும் கொடுத்துவிட்டது. தவிரவும் இந்திய ஜனங்களும், இந்திய அரசர்களும், ஆங்கில மன்னராகிய தங்கள் சக்கிரவர்த்தியாருக்கு, தங்கள் பணிவையும் அபிமானத்தையும் வெளிப்படுத்திக்காட்ட அந்த மகாயுத்தமே இடமாயிற்று. ஆகவே, இத்தியாதி காரணம்பற்றி, இந்தியர்களும் ஆங்கிலேயர்களைப் போலவே, ஆங்கில ராஜாங்கத்திற்கு அங்கத்தினர் என்றும், அவர்களுக்கு ஸ்வராஜ்ஜியாதிபத்தியம் படிப்படியாய்க் கிடைக்க வேண்டுவது ஆவசியம் என்றும், அங்ஙனம் படிப்படியாய் ஸ்வராஜ்ஜியாதிபத்தியம் அதிகரித்து, கடைசியில் ஸம்பூரணமாய், இந்திய அரசாக்ஷி முழுவதையும் இந்தியர்களுக்கே கொடுத்துவிடவேண்டியது என்றும், இப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கும் நூதனச் சீர்திருத்தங்களால் உண்டாகி, மேற்சொல்லிய கோறிக்கைகள் சரிவர நடந்தேறி முடிவுபெற, இச்சீர்திருத்தங்களே தகுந்த ஜாமீன்போல் தலைகாக்கின்றன.

4-ம் அத்தியாயம்.

ஒரு ஜகப்பிரஸ்தமான விளம்பரம்.

இந்தியர்கள் ஸ்வராஜ்ஜியாதிபத்தியம் வகிக்க மூலாதாரமாயுள்ள நூதனச் சீர்திருத்தங்கள் ஏற்படும் விஷயமாய், சென்ற ஐந்து வருடங்களில் என்ன என்ன காரியங்கள் நடந்தேறின என்பதை இப்பொழுது நாம் கவனிக்கவேண்டியது அவசியம். இக்காரியங்களே இந்திய தேசத்துச் சரித்திரத்தை சிரோங்கி விளங்கச்செய்பவைகள். இவைகளே, இங்கிலாந்திற்கும் இந்தியாவுக்கும் ஏற்கனவே இருந்த அன்னியோன்னிய பாவத்தை அதிகப்படுத்த, நூதன ஸாதனங்களானவை. இக்காரியங்கள்தான் இவ்விரண்டு ராஜ்ஜியங்களும் ஒன்றுக்கொன்று அண்ணன் தம்பிபோல மித்திரபாவமடைந்து, ஸகாயம்செய்துக்கொள்ள இடங்கொடுத்திருப்பவைகள். இவைகளே, ஆங்கில அரசாக்ஷியில் இந்தியா எங்ஙனம் ஊக்கமடைந்து மேனோக்கி வருகிறது என்பதை வெளிப்படுத்தக்கூடியவைகள்.

1914-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் முதல் 1918-ம் வருஷம் நவம்பர் மாதம் வரையில் ஜகப்பிரஸ்தமாய் நடந்த மகாயுத்தம் உங்களுக்குத் தெரியாத விஷயமல்லவே. அந்த மகா யுத்தத்தில் இங்கிலீஷ்க்காரர், பிராஞ்சு தேசத்தவரோடும், தங்களோடு ஐக்கிய பாவமாயுள்ள இதர தேசஸ்தர்களோடும் ஒருங்குசேர்ந்து, ஜர்மானியரைத் தோற்கடித்து, அவர்களுக்குள்ள மமதையை அடக்கி, அவர்கள் வீராவேசத்தையும் சிதைத்துவிட்டனர். இங்கிலீஷ்காரர்கள், பெல்ஜியத்தார்போல ஆதரவு அற்ற, துர்பலமாயுள்ள தேசஸ்தர்களைக் காப்பாற்றும்பொருட்டு, ஜர்மானியரோடு போர்புரியத் தலைப்பட்டனர். ஜர்மானியர் ஏற்கனவே ஏற்பட்டிருந்த உடன்படிக்கைகளை நிராகரித்து, பெல்ஜிய தேசத்தார் செய்த ஆக்ஷேபனைக்கும் இடங்கொடாமல், முறை பிறண்டு பெல்ஜியத்திற்குள் தங்கள் ராணுவங்களோடு பிரவேசித்து, அங்கிருந்து பிரான்ஸையும் இங்கிலாந்தையும் படை எடுத்து வசப்படுத்திக்கொள்ள ஆயத்தப்பட்டிருந்தனர். ஜர்மானியாருக்கு தங்களுக்குள்ள சௌகரியத்தினால் மமதைமேலிட்டு, இதர தேசஸ்தவர்களுடைய சுயேச்சையையும், அவர்கள் ஆளுகையையும், உரிமைகளையும் பங்கப்படுத்தி, அவர்களை உபத்திரவிக்கத்தலைப்பட்டு, தங்கள் தங்கள் காரியங்களை அமெரிக்கையாய் நடத்திவராமலிருக்கும்படிக்குள்ள செய்கைகளைச் செய்ய முயன்றனர். ஆகையினால்தான், ஆங்கிலேயர்கள், தங்கள் மித்திரர்களுக்குக் கஷ்டம் உண்டாகாவண்ணம், அவர்களைக்காப்பாற்றும் பொருட்டு, லோக ஸம்ரக்ஷண நிமித்தமாயும், உலகத்தில் நாகரீகம் என்பது சிதைவடையாமல் காப்பாற்றும் நிமித்தமாயும், ஜர்மானியரோடு சண்டைசெய்ய நேர்ந்தது. அங்ஙனம் ஆங்கிலர் போர்புரியத் தயாரானபோது மாக்ஷிமைதங்கிய நமது சக்கிரவர்த்தியாகிய ஜியார்ஜ-மன்னவர், ஒரு பிரகடனப் பத்திரிகை பிறப்பித்து, அதன் மூலமாய்

இந்திய மகாஜனங்களுக்கும் இந்திய அரசர்களுக்கும் இந்த மகாயுத்தத்தில் நீங்கள் யாவரும் ஆங்கில அரசாக்ஷியில் பக்தியுள்ளவர்களாய், உங்களுக்குள்ள ராஜ விசுவாஸத்தை மேற்கொண்டு, ஆங்கிலர் பக்ஷமாக நின்று, ஜர்மானியரோடு போர்புரியவேண்டிய உபகரணங்களை நீங்கள் ஸகாயம்செய்து, ஆங்கிலர் வெற்றிபெற்று, ஆங்கில அரசாக்ஷி சீரோங்கி விளங்கச்செய்யவேண்டும் என்று சொல்லிக் கேட்டுக்கொண்டனர். இந்திய மகாஜனங்களும் இந்திய மன்னர்களும், தங்கள் சக்கிரவர்த்தியார் பிரேரேபித்த அபிப்பிராயங்களைச் சிரமேற்கொண்டு, அவர் பக்கமே வெகு பக்தி சிரத்தையுடன் நின்று, போர்புரிவதற்கு இந்தியர்களில் அநேகரை ஏராளமாய் ஸைன்னியத்தில் சேரச்செய்து, சண்டைக்காக ஏற்படுத்தப்பட்ட பண்டுக்கு தாராளமாய் திரவிய ஸகாயம் பண்ணினதும் தவிர, இன்னும் பலவிதமாயும் ஆங்கிலர் யுத்தத்தில் வெற்றிபெற்று, ஜயபேரி கொட்டவேண்டிய உதவியும்புரிந்து வந்தனர். அக்காலத்தில் ஹார்டிஞ்சு பிரபு இந்தியாவில் வைஸிராயாக இருந்தவர். அவர் இந்திய சிப்பாய்களை பிராஞ்சு தேசத்தில் போர்முனைக்கு அனுப்பிவித்தனர். அங்ஙனம் அவர் அனுப்பியது, இந்தியர்கள் நன்மைக்காக, வெகு புத்தி சாதுரியத்துடன் செய்யப்பட்டதாகும். அதினால் இந்தியர்களுக்கும் இங்லீஷ்காரருக்கும் மனது இளகி உருகும்படியாயும் ஆயிற்று. அதுதான் இந்தியாவை வெகு சீக்கிரம் முன்னுக்குக் கொண்டுவரலாயிற்று. அங்ஙனம் அனுப்பப்பட்ட இந்திய போர்வீரர்கள் ஐரோப்பாவில் ஆங்கில வீரர்களோடுசேர்ந்து, ஜர்மானிய ஸைன்னியத்தோடு நேருக்கு நேர் போர்புரியலாயினர். அவ்விந்தியப்போர்வீரர்களும், இந்தியாவிலுள்ள பஞ்சாபியர், மகாராஷ்டிரர், மகம்மதீயர், ஸீக்கியர், ரஜபுத்திரர், ஜாட்ஜாதியார், கூர்க்கர் முதலாகிய போர்புரியும் ஆண்மைத்தன்மையுள்ள ஜாதியார்களிலிருந்து பொறுக்கி எடுத்து அனுப்பப்பட்டவர்கள். இவர்கள் மாத்திரம் அல்ல. இந்தியாவிலிருந்து அநேகம் அரசர்களும் ஸைன்னியத்தில் போர்வீரர்களாய்ச் சேர்ந்து போர் முகத்திற்குப்போய் யுத்தம் செய்தனர், இந்த யுத்தகளத்தில் இந்தியப் போர்வீரர்களுடைய ஆண்மையும், அவர்கள் செய்துகாட்டிய காரியங்களும், அவர்கள் வெளியிட்ட ராஜ பக்தி விசுவாஸமும், ஆங்கிலருக்காக அவர்களில் அநேகர் பலிபோலாகி வீர ஸ்வர்க்கம் போனதும், அவர்களுடைய பலபராக்கிரமும், எள்ளளவும் பின்வாங்காமல் கஷ்டங்களைப் பொறுத்து இருந்த அவர்கள் சக்தியும், தங்கள் உயிரையும் லக்ஷியம் செய்யாமல், தங்கள் மன்னவருக்கு தாங்கள் செய்யவேண்டிய கடமைகளைச்செய்து காட்டிய திறமும் ஆகிய இந்தியர்களுக்குள்ள நல்ல குணங்கள் யாவும், இந்தியாவையும், இந்தியர்களையும் யாவரும் வியக்கும்படி கீர்த்தியை நாட்டலாயின. மேலும், இந்தியர்கள், தங்களுக்குள்ளேயே சண்டை சச்சரவு போட்டு, கலகம் உண்டாக்காமல், ராஜ்ஜியத்தில் ஐக்கிய பத்தியமாய் இருந்து மன்னவரிடம் தாங்கள் வைத்திருக்கும் பிரீதி விசுவாஸத்தை பகிரங்கமாய்க் காண்பித்ததும், அவர்களுக்குக்கிடைத்த கீர்த்தியை மேலோங்கி பிரகாசிக்கச் செய்தது. இத்தியாதி விஷயங்களாலே, இங்கிலீஷ் ராஜாங்கத்தார், தங்கள் நாட்டில் லண்டன் மாநகரில் யுத்த ஸம்பந்தமாய் நடைபெற்ற ஆலோசனை சபைக்கு, இந்தியாவி

விருந்து பிரக்யாதிபெற்ற இருவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களை இந்திய மகா ஜனங்களுக்குப் பிரதிநிதியாகப் பேசும்படியாக நேமித்தனர். அவ்விருவர்கள், பிக்கனீர் மகாராஜாவும், ஸர் (ஸத்தியேந்திர) ஸிந்ஹா என்பவருமே. ஸிந்ஹா என்பவருக்கு கொஞ்சம் நாளைக்குள் 'லார்டு' என்னும பட்டம் வாய்ந்து, ஆங்கில நாட்டிலுள்ள மகாபிரபுக்களில் அவர் ஒருவராய் நேமிக்கப்பெற்று, ஹௌஸ் ஆப் லார்ட்ஸ் என்னும் பார்லிமெண்டு மகா ஸபையில் ஒரு அங்கத்தினராய், இப்பொழுது இந்திய ஸிக்ரடரி ஆப் ஸ்டேட் என்பவருக்கு அடுத்தபடி உத்தியோகமும் வகித்து விளங்கா நிற்கிறார். இங்ஙனம் நம் இந்தியரில் ஒருவருக்கு கீர்த்தி வாய்ந்திருப்பது நமக்கும் நம் ராஜ்ஜியத்திற்கும் மகிமையன்றோ! இந்திய மகா ஜனங்களும், இந்திய மன்னர்களும் இந்த மகா யுத்தத்தில் புரிந்து வந்த பேருதவியும், அவர்கள் காட்டிய ராஜ பக்தியும், இந்தியாவை மேலோங்கச்செய்து, இங்கிலீஷ் துரைத்தனத்தாருக்கும், இந்தியர்களை தங்கள் கீழ்ப்படியுள்ளவர்களாய் மதித்திருந்த எண்ணம் முற்றிலும் மாறுபட்டு, அவர்களைத் தங்கள் சகோதரர்கள்போல தங்கள் ராஜ்ஜியத்திற்கு அங்கத்தினர்களேயாகும் என்று மதிக்கலாய், அவர்கள் ஸ்வராஜ்ஜியாதிபத்தியம் வேண்டும் என்று வெகுநாளாய்க் கோறிக்கொண்டு வருவதை அவர்களுக்கு தாங்கள் கொடுக்கக் கடமைப்பட்டிருப்பவர்கள் என்பதை ஆங்கில துரைத்தனத்தார் நன்குணரலாயிற்று. ஆனதுபற்றி, இந்திய ஸிக்ரடரி ஆப் ஸ்டேட் உத்தியோகம் வகிக்கும் மாண்டேகு பிரபுவும், மாக்ஷிமைதங்கிய ராஜாவுக்காகவும், பார்லிமெண்டு மகா ஸபையாருக்காகவும், ஆங்கில மகா ஜனங்களுக்காகவும் ஸாக்ஷி பூதமாய் இருந்து, 1917-ம் வருஷம் ஆகஸ்டுமாதம் 17-ம் தேதியில், ஹௌஸ் ஆப் காம்மன்ஸ் என்கிற மகா ஸபையில் யாவரும் எப்பொழுதும் ஞாபகத்திலிருத்தும் படியாய் இந்தியாவைக் குறித்து ஒரு விளம்பரம் செய்தனர். அவ்விளம்பரத்தின் முக்கியமாயுள்ள அம்சங்களை உங்களுக்குக் கீழ் வருமாறு சொல்லுவேன். அவையாவன்:—

(1) மாக்ஷிமைதங்கிய நமது அரசருடைய ஆளுகையின் தாத்பரியமாவது: ராஜ்ஜிய பாரம் வகித்து அரசாளுவதில் ஒவ்வொரு அம்சத்திலும் இந்தியர்களை படிப்படியாய்ச் சேர்த்து வந்து, அவர்கள் தாங்களே ஆண்டு வரும்படிக்குள்ள ஏற்பாடுகளை உண்டாக்கி விருத்திக்கு வரும்படி விட்டு, கடைசியில் தங்கள் ராஜ்ஜிய முழுவதையும் தாங்களே ஆண்டுவந்து, பிரஜைகளுக்கு உத்தரவாதம் சொல்லும்படி அவர்களை படிப்படியாய் கைதூக்கி விடவேண்டும். இந்தியாவும் அப்பொழுது பிரிட்டிஷ் ராஜ்ஜியத்திற்கு ஓர் உபகரணமாகி, தன் தாழ்மைநிலை போய், ஆங்கிலரும் இந்தியரும் ஸமஸ்திதியுடையவர்களாகவேண்டும். இந்த அபிப்பிராயத்தை இந்தியா கவர்ன்மென்டாரும் முற்றிலும் அநுவதித்தவர்களே. ஆனதுபற்றி கூடிய சீக்கிரத்தில் இந்தியர்களுக்கு தங்கள் ராஜ்ஜியத்தைத் தாங்களே நிர்வகித்து ராஜ்ஜியபாரம் வகிக்கப் போதுமான மூலாதார ஏற்பாடுகளை இந்தியர்களுக்குச் செய்து கொடுத்துவிட வேண்டுவது அத்தியாவசியம் என்பதை நமது

சக்கிரவர்த்தியார் தீர்மானித்திருக்கிறார். இதுதான் ஸிக்கிரட்டரி ஆப் ஸ்டேட் பகிரங்கமாய்ச் சொன்ன விளம்பரத்தின் முதல் அம்சம்.

(2) "மேல் கண்டபடி இந்தியர்களை விருத்திக்குக் கொண்டுவர வேண்டியது படிப்படியாய் காலக்கிரமத்தில் ஆகிவரவேண்டும்." என்பது இரண்டாம் அம்சம்.

(3) "தற்காலத்தில் இந்தியப்பிரஜைகள் முன்னுக்கு வந்து ஸௌக்கியம் பெறுவது இந்தியா கவர்ன்மென்டாருடைய வசமிருப்பதினாலே, அவ்விந்திய கவர்ன்மென்டாரும், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரும், இனிமேல் இந்தியாவின் நன்மைக்காக உழைக்க வருவார்களின் ஒற்றுமையையும் கூட்டுறவையும் நாடி, அவர்களாலே எவ்வளவு வரைக்கும் ராஜ்ஜியபாரம் வகித்துவரத் திறமை உண்டோ, எவ்வளவுக்கு உத்திரவாதிகளாயிருப்பார்களோ அதையும் பரிசீலனை செய்து, இந்தியர்கள் முன்னேறிவர ஸ்வராஜ்ஜியாதிபத்தியம் கொடுபடவேண்டும்" என்பது மூன்றாவது அம்சம்.

ஆகவே மேலே கூறியுள்ள விளம்பரத்தில் உள்ள மூன்று முக்கிய அம்சங்களைப்பற்றி, உங்களுக்கு விளங்கத் தெரிவித்து, அவைகளினால் இனிமேல் இந்தியாவுக்கு உண்டாகக்கூடிய பலாபலனைக் காண்பிக்கவேண்டும்.

மேலே சொன்ன முதல் அம்சத்தினால், இந்திய மகா ஜனங்கள் ராஜ்ஜியவிஷயமாயுள்ள தங்கள் தங்கள் காரியங்களை தாங்களே பார்த்துவரக்கூடிய ஏற்பாடுகளைச் செய்வித்து, இந்தியர்களும் அவைகளின் மூலமாய் ஸ்வராஜ்ஜியாதிபத்தியம் அடைந்து, பிரஜைகளுக்கு தாங்களே உத்திரவாதிகளாய் நிற்கும்படி இந்தியர்களை ஆக்கிவிடவேண்டியது என்பதை ஆங்கில மன்னர் கையடித்துக் கொடுத்திருக்கிறார் என்பது விளங்கலாகும். "ஸ்வராஜ்ஜியாதிபத்தியம்" என்று சொல்லுவதினாலே 'எப்பொழுதும், பிரஜைகளுக்கு உத்திரவாதம் செய்யும்படிக்குள்ளது' என்பது இல்லை. ஒரு தேசத்தை, அதிலுள்ள ஒருவர்தானே ஏக சக்கிராதிபத்தியம் வகித்து ஆண்டுவந்தாலும் சரி, அல்லது, அத்தேசத்தில் உள்ள யாதாமொரு பிரத்தியேகமான ஜாதியாரோ, மதத்தினரோ, வகுப்பினரோ ஆண்டுவந்தாலும் சரி, அவ் ராஜ்ஜியாதிபத்தியத்தை, அன்னியர்கள் இருந்து ஆளும் ராஜ்ஜியம் என்று சொல்லாமல், ஜனங்களே தங்கள் தேசத்தை ஆள்கிறார்கள் என்று மட்டும்தான் சொல்லக்கூடும்! அங்ஙனம் ஆளும் ஏக சத்திராதிபதியும், அல்லது சில பிரத்தியேகமான வகுப்பினரும் ராஜ்ஜியத்தைத் தங்கள் தங்கள் மனோதர்மம்போல் இஷ்டப்படி ஆண்டுவரின், அவ்வரசாக்ஷி, ஆளப்பட்டு வரும் பிரஜைகளுக்கு எங்ஙனம் உத்திரவாதம் சொல்லக்கூடிய ஸ்திதியில் இருப்பது என்று எண்ணக்கூடும்? அங்ஙனம் இஷ்டம்போல் ஆளும் அரசனாவது வகுப்பினராவது பிரஜைகள் ஏற்படுத்தும் ஒழுங்குக்கு மீறி, வரம்பு கடந்து நடந்தால், அப்பேர்ப்பட்டவர்களை ராஜ்ஜியாதிபத்தியத்தினின்றும் நீக்கிவிட, பிரஜைகளுக்கு ஸ்வதந்திரமும் இருந்தால்லவோ, அந்த ஸ்வராஜ்ஜியத்தை பிரஜைகளுக்கு உத்திரவாதமாயிருப்பது என்று சொல்லக்கூடும்!!

அங்ஙனமின்றி ஒரு ராஜ்ஜியம், அதிலுள்ள சிலர்களாலே ஆளப்பட்டு வந்தால் அந்த ஸ்வராஜ்ஜயத்தினல் யாது பயன் விளையும்? ஆனதுபற்றியே, ஸிக்கிரடரி ஆப் ஸ்டேட் செய்த விளம்பரம், "ஸ்வராஜ்ஜியாதிபத்தியம் இந்தியர்களுக்குக் கொடுப்பதாய் இருந்தால், அவ்விராஜ்ஜியபாரம் பரிப்பவர்கள் ராஜ்ஜியத்தை சரியாய்ப் பரிபாலித்து வருவதுடன், அவர்கள், இந்திய மகா ஜனங்களுக்கு உத்தரவாதம் செய்யக்கூடிய நிலமையிலும் இருக்கும்படி, இந்தியாவில் ஸ்வய அரசாக்ஷி ஏற்படுத்தி வைக்கவேண்டு மென்பதைத்தான்" இந்தியர்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அச்சுறுத்துகிறது.

அவ்விளம்பரத்தின் இரண்டாம் அம்சமோ, "இந்தியர்களுக்கு உத்திரவாதம் சொல்லும்படிக்கான ஸ்திதியில் ஏற்படுத்தப்படும் ஸ்வய அரசாக்ஷி ஏககாலத்தில், இந்தியர்களுக்குக் கொடுத்துவிடுவது அநுசிதம்" என்பதையும், "அதை காலக்கிரமத்தில் படிப்படியாய், மெள்ளமெள்ள இந்தியர்களுக்கு ஸ்வராஜ்ஜியாதிபத்தியம் வகிக்கப் போதுமான பரிபக்குவத்தைப் பார்த்துக் கொடுத்துக்கொண்டு வரவேண்டும்" என்பதையும் விளக்குகிறது. இந்த விஷயங்களைப் பற்றி இரண்டாம் அத்திபாயத்தில் விரித்து விளக்கி, யாதுகாரணம் பற்றி ஸ்வய அரசாக்ஷி இந்தியர்களுக்கு ஒரே தடவையில் கொடுபடக் கூடாது என்றும், அது படிப்படியாகத்தான் அவர்களுக்கு காலக்கிரமத்தில் கொடுபடவேண்டும் என்றும், அங்ஙனம் கொடுப்பதுதான் இந்தியர்களுக்கு நன்மை பயக்கும் என்றும், ஸ்வய அரசாக்ஷி பிரஜைகளுக்கு உத்திரவாதம் சொல்லக்கூடிய நிலமையில் இருக்கச் செய்தால்தான், அது அல்பாயசாய் அழிந்துபோகாமல், நீடித்து வேர் ஊன்றி நிலைபெற்று நிற்கலாகும் என்றும், நான் உங்களுக்கு ஸவிஸ்தாரமாய்க் கூறியுள்ளேன்.

ஆகவே, பிரஜைகளுக்கு உத்திரவாதமாய் நிற்கும் ஸ்வய அரசாக்ஷி இந்தியர்களுக்கு கைகூடி வருவதற்கு அநுகுணமாய்ச் செய்யும் காரியங்கள் ஆரம்பமுதல் வெகு சாவதானமாய்ச் செய்யப்பட்டு வரவேண்டு மென்கிற நோக்கத்துடன், இந்தியர்களும், பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் இந்திய ஸ்வய அரசாக்ஷி விஷயமாய்ச் சொல்லுவதில் நம்பிக்கை வைத்து, பக்தி விசுவாஸத்துடன் அவர்கள் ஏற்படுத்தும் காரியங்களை மனந்தளராமல் முடித்து வந்தால், இந்தியாவில் ஸ்வய அரசாக்ஷி பூர்த்தியுற்று நன்மை விளக்கும் என்று தீர்மானித்து, பிரிட்டிஷ் கவர்ன்மென்டார் இந்திய மகாஜனங்களுக்கு, தாங்கள் சொல்லுவதில் நம்பிக்கை உண்டாக்கி, அவர்களுடைய கூட்டுறவை வேண்டிக் கொள்ளுகின்றனர்.

ஆகவே, 1917-ம் வருஷம் ஆகஸ்டு மீ 17-ம் தேதியில் பிரிட்டிஷ் பார்லிமெண்டார் வெளியிட்ட விளம்பரம் இத்தகைமையாதலால், அவ்விளம்பரத்தை அநுஷ்டான பூர்வமாய் நிறைவேற்றும் நிமித்தம் இந்திய ஸிக்கிரடரி ஆப் ஸ்டேட்டும், இங்கிலாந்திலிருந்து, இந்தியாவுக்கு 1917-ம் வருஷம் நவம்பரிலேயே வரலாயிற்று. வைஸிராயும், அவருமாகக்கூடி, இந்தியாவில் அநேக இடங்களில் சென்று, ஆங்காங்குள்ள ஜனஸமூகங்களின் பிரதிநிதிகளைக் கண்டுபேசி, அவர்கள் சொன்

னதை மனதில் உன்னி, ஜனஸமூகங்களாலும், பற்பல ஜாதிமத வருணாச்சிரமத்தார்களாலும் நேமித்து அனுப்பிய பிரதிநிதிகளுடைய அபிப்பிராயங்களையும் கண்டு அறிந்துகொண்டனர். பிறகு இவ்விருவருமாய்ச் சேர்ந்து, தங்களுக்கு இந்தியா ஸம்மந்தமாயுள்ள விஷயங்கள் யாவற்றையும் ஒருங்கு சேர்த்து, ஒரு ரிபோர்ட்டு எழுதி, 1917-ம்ஷ ஆகஸ்டுமாதத்தில் செய்திருக்கப்பட்ட விளம்பரத்தில் கண்டுள்ள அம்சங்களை அமுலுக்குக் கொண்டுவரும்படிக்கு அநுகுணமான காரியங்களையும் எடுத்துக்காட்டி, அந்த ரிபோர்ட்டை பார்லிமெண்டு மகா ஸபையாருக்கு அனுப்பினர். பிறகு இவ்விஷயங்களைப் பரியாலோஜிக்கும் வண்ணம் ஒரு கம்மிட்டியார் ஏற்படுத்தப்பட்டனர். அக்கம்மிட்டியார் இந்தியா எங்கும் சென்று, ஆங்காங்கே வாக்குமூலங்கள் வாங்கி, இந்தியாவில் பிரஜைகளுக்கு உத்தரவாதம் சொல்லும்படியான அரசுரிமை இந்தியர்களுக்குக் கொடுப்பதின்பொருட்டு, சட்டநிர்மாண ஸபைகளுக்கு ஜனங்களே தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும்படி, அநேகம் தொகுதிகள் இந்தியாவில் ஏற்படுத்தப்படவேண்டும் என்று, பார்லிமெண்டுக்கு தங்கள் அபிப்பிராயத்தை தெரிவித்தனர். இவர்கள் செய்த தீர்மானங்களை ஒரு ஆக்டாக ஆக்கிவிடவேண்டும் என்கிற நோக்கத்துடன் ஸிக்கிரடரி ஆப் ஸ்டேட்டும், இவைகளை எல்லாம் அடக்கி, ஒரு மசோதா ஆக்டாக பார்லிமெண்டு மகாசபையாரின் முன் வைத்தனர். அச்சபையார் அந்த மசோதா ஆக்டைப் பரிசீலனை பண்ணி ஆலோஜித்து ரிபோர்டு செய்யும்படி வேறொரு கம்மிட்டியும் நேமித்தனர். அக்கம்மிட்டியும், மசோதாவில் கண்ட விஷயங்கள் சரி என்று அங்கீகரித்து, இடை இடையே சிற்சில மாறுதல்கள் மட்டும் செய்தனுப்பினர். அம்மாறுதல்களாலே நன்மையே ஒழிய வேறில்லை. அவைகள் இந்தியர்களுக்கு அரசுரிமையை அதிகரிப்பதற்காகவே ஏற்பட்டு உள்ளன.

இந்தியர்களுக்கு உத்தரவாதம் சொல்லும்படியான அரசுரிமை கொடுப்பதற்கு முதல் முதலில் செய்யவேண்டிய காரியமாவது, அவர்கள் தாங்களே பிரதிநிதிகளைத் தேர்ந்து எடுத்துக்கொள்ளும் அதிகாரம் அவர்களுக்குக் கொடுத்துவிடவேண்டுவது என்றும், "அவ்வதிகாரம், படித்த சிலவகுப்பினருக்கும் சில மேலான ஜாதியருக்கும், நிலத்திற்குடைய சில பிரபுக்களுக்கும், வியாபாரிகளுக்கும் மாத்திரமே தற்காலம்போல் இருக்கக்கூடாது" என்றும், கிராமங்களில் உள்ள குடிகளும், பட்டணங்களிலுள்ள வேலைக்காரர்களும், இன்னம் இவர்கள் போன்ற ஏழைகளும் தங்கள் ராஜ்ஜிய விஷயமான ஏற்பாடுகளைத் தெரிந்துகொள்ள இதுவரையில் இடம் கொடாமல் வைத்திருந்ததுபோல் விட்டுவிடாமல், இவ்வகையான ஜன சமூகங்களுக்கும் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்து எடுக்கக்கூடிய உரிமைகளைக் கொடுத்துவிடவேண்டும்" என்றும், பார்லிமெண்டாரால் நியமிக்கப்பட்ட கம்மிட்டியார் சிபார்சு செய்தனர். மேலும் "பிரஜைகளுக்கு, ராஜாங்க ஸம்பந்தமாய் நடக்கும் காரியங்களில், ஞானத்தை ஆரம்ப முதல் உண்டாக்கி, அவர்களுக்கு சமயம் வாய்த்தபோது தங்கள் அரசுரிமையை, சரிவர பரித்து விடும்படியாய்க் கொடுத்து, அதினால், அவர்கள் முன்னு

க்கு வருவதைப் பார்த்து அவர்களுக்கு மேன்மேலும் அரசுரிமையை விர்த்திசெய்விக்க வேண்டுமெ'' என்றும், கம்மிட்டியார் செய்த சிபார்சும் அங்கீகரிக்கப் பெற்றது. கம்மிட்டியார்—பிரஜைகள், ஜனங்கள், என்று பதப்பிரயோகம் பண்ணினதினாலேயே, அவர்கள் பிரஜைகளில் படித்துத் தேர்ந்த சில வகுப்பினர் என்றாவது, பணம் மிகுந்த பிரபுக்கள் என்றாவது கொஞ்சமேனும் எண்ணம் கொள்ளாமல், கிராமவாஸிகளாயுள்ள ஜனங்கள் எனறும், பட்டணங்களில் வேலைசெய்து பிழைக்கும் கூலிவேலைக்காரர்கள் என்றும், இன்னம் இகர தாழ்ந்த வகுப்பினர்கள் என்றுமே, பிரத்தியேகமாய்ச் சுட்டிக்காட்டி இருக்கின்றனர். ஆகவே, இத்தகைய சிபார்சுகள் இந்தியாவில் நூதனமாய் ஏற்படுத்தபட்ட சீர்திருத்தங்களுக்குக் காரண பூதமாயுள்ள முக்கிய விஷயங்கள். ஆகையால், இந்தியாவில் ஜனங்கள் அரசுரிமை அடைந்து, அவர்கள் அரசாக்ஷி தங்களுக்கே உத்திரவாதமாய் இருப்பதற்கு, மேல் சொல்லப்பட்ட விஷயங்கள்யாவும் இந்தியர்களுக்கு வெகு பிரதானமானவை. அவைகள், இந்துதேச சரித்திரத்தை மேலோங்கச்செய்ய ஆரம்பம், பண்ணி இதுகாறும் இருந்ததுபோல் இந்திய அரசாக்ஷி, பணம் மிக்கு அதிகாரம் வாய்ந்த சில பணக்காரர்களால் மட்டும் நடைபெறவொட்டாமல், குடிகளும், உழுது பயிரிடுவோரும், வேலையாட்களும்கூட அரசாக்ஷியின் பாரத்தை வகிக்க இடம் உண்டாக்கி, இந்திய அரசாக்ஷியும் இந்திய பிரஜைகளாலேயே நடந்தேறும் அரசாக்ஷி என்று சொல்லும்படியான மார்க்கமும் ஏற்படலாயிற்று.

5-ம் அத்தியாயம்.

(Reform in Local Bodies).

ஸ்தல ஆக்ஷியில் சீர்திருத்தம்.

நான்காம் அத்தியாயத்தில் சொல்லியபடி, இந்தியாவில் ராஜாங்க சம்பந்தமாய் சீர்திருத்தங்கள் ஏற்பட, ஸிக்கிரடரி ஆப் ஸ்டேட் 1917-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் செய்த விளம்பரமே பிரதானம் என்றும், அவ்விளம்பிரத்தினுலே அவர் இந்தியாவுக்குவந்து வைஸிராயோடு கலந்து பார்லிமெண்டாருக்குக் கொடுத்த ரிபோர்ட்டின் பேரில், அச்சபையார் அதைப் பரியாலோசனை செய்து பார்க்க ஒரு கம்மிட்டி ஏற்படுத்தி, ஸிக்கிரடரி ஆப் ஸ்டேட்டும், ஒரு மசோதா ஆக்டைப் பிறப்பித்து, அந்த மசோதா ஆக்டும் மறுபடி ஒரு கமமிட்டியார் பரிசீலனைக்குள்ளாகி, அக்கமிட்டி அதின் பேரில் செய்த சிபார்சுகளையே ஒட்டிப் பிறப்பித்த மசோதா ஆக்டை பிரிட்டிஷ் பார்லிமெண்டு மகாசபையாரும் 1919-ம் டிஸம்பர் மாதம் சட்டமாக ஆக்கிவிட்டனர். அச்சட்டத்தை நமது சக்கரவர்த்தியும் அங்கீகாரம் செய்து, அதற்கு அத்தாக்ஷியாக தம்முடைய முகரும் அதில் போட்டுள்ளனர்.

இந்திய மகாஜனங்களுக்கு அரசுரிமை வாய்த்து, அவ்வரசாக்ஷி அவர்களுக்கு முழுமையும் உத்தரவாதம் செய்யக்கட்டுமைப்பட்டு, இருக்கிறது என்பது மேல்சொன்ன சட்டத்தின் முகவுரையில் தாராளமாய் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது என்று, நான் உங்களுக்கு ஏற்கனவே தெரிவித்திருக்கிறேன். மேலும், அவ்வரசாக்ஷி செய்ய அதிகாரமும் ஸ்வதந்திரமும், ஸர்க்காராலேயாவது, அல்லது ஸர்க்கார் உத்தியோகம வகிக்கும் சில பெரிய உத்தியோகஸ்தர்களாலேயாவது, வாய்மொழியாய்க் கொடுக்கும் வெறும் வாக்குகளைப பொறுத்து மாத்திரம் இந்திய சீர்திருத்தங்கள் இராமல், அவைகள் சட்ட பூர்வமாய ஏற்பட்டுப்போவது இந்திய ஜனங்களுககு எவ்வளவு நன்மையாகும் என்பதையும், நான அதே அத்தியாயத்தில் உங்களுக்கு விளக்கி இருக்கிறேன். மேலும் உத்தரவாதமாய் இருக்கப்பட்ட ராஜாங்கம் என்றால் என்ன என்பதையும் உங்களுக்குத் தெரிவித்திருக்கிறேன். அவ்வுத்தரவாதமாயுள்ள ராஜாங்கம் எப்படிப்பட்டது என்பதை இன்னும் இப்பொழுது விஸ்தரித்துச் சொல்லப்போகிறேன்.

"பிரஜைகளுக்கு உத்தரவாதமாயுள்ள ராஜ்ஜியாதிபத்தியம்" என்பதினுல், பிரஜைகளே, தங்கள் ராஜ்ஜியத்தைப் பராமரித்து, பாதுகாத்து நடத்திவருவது என்பதாகும். பிரஜைகள் எங்ஙனம் ராஜ்ஜியத்தை பராமரித்து பாதுகாத்து நடத்திவருவது என்பதை விசாரிக்குமளவில், சட்டநிர்மாண சபைகளுக்கு பிரஜைகள் தாங்களே, தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து, அவர்களைக்கொண்டு

ராஜ்ஜிய விஷயங்களை மேன்பார்க்கச்சொல்லி, நடத்துதலாகும். அப்பிரதிநிதிகள்தான் ராஜாங்க ஸம்பந்தமான சட்டங்களைப் பிறப்பித்து, அச்சட்டங்களைச் செலாவணியாக்கி, அமுலுக்குக் கொண்டுவரத்தகுந்த உத்தியோகஸ்தர்களை நேமிக்கலாகும். அங்ஙனம் பிரஜைகளின் பிரதிநிதிகளாலே பிறப்பிக்கப்பட்ட சட்டங்களாயினும், அவர்களாலே நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களாயினும் பிரஜைகளுக்குத் திருப்திகரமாய் இராமலிருந்து விட்டால், பிரஜைகள் அப்பேர்ப்பட்ட பிரதிநிதிகளை பர்த்திருப்புப்பண்ணி, அவர்களுக்குப் பதிலாய் வேறு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து, அவர்களைச் சட்டநிர்மாண ஸபைக்கு அங்கத்தினராக அனுப்பி, அவர்களைக்கொண்டு, பிரஜைகளுக்கு அநுகூலயுமாயுள்ள வேறு சட்டங்களைப் பிறப்பித்து, வேறு நல்ல உத்தியோகஸ்தர்களையும் நேமிப்பிப்பிப்பதாகும். ஆகவே, உத்திரவாதமாய் நிற்கக்கூடிய ராஜ்ஜியாதிபத்தியம் நிலைபெறும் நாட்டில், ஜனங்கள்தான், தங்களுக்கு ஹிதமாயுள்ள சட்டங்களைப் பிறப்பித்துக்கொண்டு, அச்சட்டங்களை, தங்களுக்கு திருப்திகரமாயும் தாங்கள் ஸௌகரியமடையும்படியாயும், சரியானபடி அமூல்நடத்த அருகதையுள்ள உத்தியோகஸ்தர் முதலான சிப்பந்திகளை தாங்களே நியமித்துக்கொண்டு, அங்ஙனம் செய்வதற்கு அநுகுணமாய் ராஜ்ஜியத்திற்குப் பிரதிநிதிகளைச் சரியானபடி தெரிந்தெடுக்கும் நிமித்தமாய், பல தொகுதிகளாக ராஜ்ஜியத்தைப் பிரித்து, ராஜ்ஜியாதிபத்தியத்தை ஜனங்கள் வகித்துவருகிறவர்கள், என்பது உங்களுக்கு இப்பொழுது நன்றாய் புலப்படும்.

இவ்விதமாய்ச் சொல்லிவந்த ஸ்வதிந்திரமாவது, அதிகாரமாவது இதுவரையில் இந்தியர்களுக்குக் கிடையவே கிடையாது. அவ்வித அதிகாரத்தை, பிரிட்டிஷ் ராஜ்ஜிய பார்லிமெண்டு மகா சபையாரின் உத்திரவின்பேரில், ஆங்கிலர்களே, இதுகாறும் இந்தியாவில் செலுத்திவந்தனர். அந்த பார்லிமெண்டுக்கு மாத்திரமே, இந்திய கவர்ன்மெண்டாரால் நேமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களும் உத்தரவாதமாய் இருக்கிறவர்கள். தகப்பன் தன் குழந்தைகளைப் பராமரித்துப் பாதுகாத்து வருவதுபோல், இந்தியர்களையும் இந்தியாவில் உள்ள அவ்வாங்கில உத்தியோகஸ்தினர் பராமரித்து வந்து அவர்களுக்கு அநுகூலமாயுள்ள காரியங்கள் ஒவ்வொன்றையும் செய்து வந்திருக்கின்றனர்.

பார்லிமெண்டாரால் பிறப்பிக்கப் பெற்று, மாக்ஷிமைதங்கிய நமது சக்கிரவர்த்தி அவர்களாலும் அங்கீகரிக்கப்பட்டும் இருக்கிற, இந்தியாவைக் குறித்த இந்த நூதனச் சட்டத்தினுல் முடிவாய் தெரியவருவது யாதெனில் :—இந்தியர்கள், தகப்பனுரால் பராமரிக்கப்படும் குழந்தைகள்போல்வர் அல்லர். அவர்களுக்கு புத்தி அதிகரித்து, ராஜாங்க விஷயங்களிலும், பொது நல விஷயங்களிலும் ஊக்கமும் மிகுதியாகிவிட்டது. தங்கள ராஜ்ஜியத்தின் நன்மையைக் குறித்து, அவர்கள் எல்லாரும் ஏகோபித்து ராஜஜியத்தை நடத்தத்திறமை வாய்ந்தும் உள்ளனர். பேசத்திறமையற்ற மூடாத்துமாக்களாய் இது காறும் இருந்துவந்த கோடானுகோடி ஜனங்கள் என்று அவர்களை இனி மதித்தல் தவறு. எங்ஙனம் குழந்தை வாலிபப் பருவத்திற்குவந்து தன்தன் காரியத்தைத் தானே பார்த்துக்

கொள்ளத்திறமை ஏற்பட்டு, பிறகு நாளாவர்த்தியில் படிப்படியாய் அநுபவம் மிக்கு, வாலிபம் நீங்கிக் கடைசியில் காளைப்பருவமடைந்து முழுமனிதனுகி விடுவதேபோல், இந்தியர்களும், தங்கள் தங்கள் காரியத்தை தாங்களே பார்த்துக்கொள்ளுவதற்குப் போதுமான சக்திவாய்ந்தவர்கள் ஆகி இருக்கின்றனர்."

இவ்விதமாகத்தான் இந்நூதனச்சட்டம் இந்தியர்களுக்கு உத்தரவாதமாய் நிற்கும் ராஜ்ஜியாதிபத்தியத்தை அடைய மூலகாரணமாய் நின்று வழிகாட்டும் முதல்படியாகும்.

இம்மூலாதாரமான நூதனச்சட்டம் இந்திய ஜனங்களுக்கு எங்ஙனம் நன்மை பயிற்றி அவர்களை மேலோங்கச் செய்யப் போதுமானது என்பதை நீங்கள் நன்கறிய வேண்டுமானுல், இந்நூதன ஆக்ட்டை, இதுகாறும் நடவடிக்கையிலிருந்து நன்குவாய்ந்திருந்த பழைய ஆக்ட்டோடும் ஒப்பிட்டுப் பார்த்து, பழைய ஆக்டைவிட இதில் என்ன என்ன விசேஷமான மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டுவது அவசியம்.

'ராஜாங்கம்' என்பது, உள்ளங்காலாதியாய் உச்சிவரையில் படிப்படியாய் இருந்துவரும் அநேக அவயவங்கள் ஒருங்குசேர்ந்த மானிட சரீரம்போல ஒரு அமைப்பு, என்பதை நான் ஏற்கனவே விளக்கிக் காட்டியிருக்கிறேனல்லவா? உச்சி மண்டைக்குள்ளிருக்கும் மூளையாகிற மூலப்பொருள் தானே சரீரத்துள்ள அவயவங்கள்யாவையும் அடக்கி ஆண்டு வருகிறது உங்களுக்குத் தெரிந்திருப்பது அன்றோ? இந்தியாவில் உள்ள ராஜாங்க அமைப்பும், மானிடசரீரம் போல் பல உறுப்புக்களால் அமைக்கப் பெற்றதாய், அவ்வுறுப்புக்களும், மானிடசரீரத்தில் பாதாதி கேசம் வரையில் உள்ள பல அவயவங்கள் போல், பலவகைப்பட்டவையாம். அவ்விதம் பலவகைப்பட்ட உறுப்புகளைப்பற்றி பின்வருமாறு எடுத்துக் கூறுவேன் :—

கிராமங்களும், அக்கிராமங்கள் சேர்ந்துள்ள தாலுகாக்களும், அத்தாலூகாக்கள் அடங்கிய ஜில்லாக்களுமே, இந்திய ராஜாங்கத்திற்கு முதல் உறுப்பாகும். இவைகள்தான் மானிட சரீரத்திற்குள்ள பாதம்போன்ற உறுப்புக்கள். கிராமங்கள் ஜில்லாக்கள் இவைகளைப்பற்றிய ராஜீயகாரியம் மாகாண கவர்ன்மெண்டுக்குக் கீழடங்கி, பரிபாலிக்கப்பட்டுவருகிறது. அம்மாகாண கவர்ன்மெண்டுக்களும், நடுநாயகமுள்ளதாய் நிற்கும் இந்தியா கவர்ன்மெண்டிற்கு உட்பட்டு நடப்பது. அவ்விந்தியா கவர்ன்மெண்டு இங்கிலாந்திலுள்ள ஸிக்கிரடரி ஆப் ஸ்டேட் என்கிற மந்திரிக்கும், அவரோடு சம்பந்தப்பட்ட ஒரு ஸபையாருக்கும் கீழடங்கிவருவது. ஸிக்கிரடரி ஆப் ஸ்டேட் என்கிற மந்திரி பார்லிமெண்டு மகாசபையின் உத்திரவுக்குக் கீழ் அடங்கி நடப்பவர். பார்லிமெண்டு மகாசபையோ, ஆங்கிலேயர்களால் அச்சபைக்கு மெம்பராக தேர்ந்தெடுக்க அருகதையுள்ள எலக்டர்களுக்குக் கீழிருந்து நடப்பது.

ஆகவே, இந்திய அரசாக்ஷி சம்பந்தமான காரியங்களைப் பரிசீலனைசெய்து ஒரு கடைசி முடிவுக்குக் கொண்டுவரும் அதிகாரம், மேல்சொல்லிய ஆங்கில நாட்டு எலக்டர்களுடையது என்று நீங்கள்

எளிதில் அறிந்து கொள்ளலாகும். இப்பொழுது ஏற்படுத்தப்பட்ட இந்திய நூதன ஆக்டானது, இந்தியா சம்பந்தமான காரியங்களை முடிவுசெய்ய ஆங்கிலநாட்டு எலக்டார்களிடம் இதுகாறும் இருந்த அதிகாரம் மாறிப்போய், அது இந்திய நாட்டிலுள்ள எலக்டார்கள் கையில் வந்திருக்கிறது. ஆனதுபற்றி இந்த அதிகாரம் நம் நாட்டாருக்கு வந்திருப்பது நம் நாட்டுக்கு எவ்வளவு நல்ல ஆதாரமான மூலசாதனம்! இம்மூலசாதனமே, நம் தேசத்து அரசுரிமையை நம்முடைய எலக்டார்களே வகித்து, காலக்கிரமத்தில் பூரணஸித்தியை யடையப்பெற்று, ராஜ்ஜியபாரம் முழுவதையும் பரித்துவருவதற்கு ஹேதுவாயிருக்கிறது அல்லவா?

ஆகவே, இப்பொழுது இம்மூலசாதனமாகிற ஆக்டானது, நம் நாட்டு எலக்டார்களுக்கு எவ்விதம் என்ன என்ன அதிகாரத்தைக் கொடுக்கக்கூடியது என்பதை விளக்க நம் ராஜாங்க அமைப்பிலுள்ள மேற்சொல்லிய உறுப்புக்களை ஒவ்வொன்றாய் எடுத்து விஸ்தரிப்பேன்.

ராஜாங்கத்திற்கு முதல் முதலாயுள்ள உறுப்பு கிராமமும், தாலூகாவும், ஜில்லாவுமாகையால் இவைகள் பரிபாலிக்கப்பட்டு வருவதை நான் முதலில் எடுத்துக் காட்டுகிறேன். இவைகள் பரிபாலனத்திற்குத் தான் ஸ்தல ஸ்வய ஆக்ஷி அல்லது லோகல் ஸெல்ஃப் கவர்ன்மெண்டு என்று பெயர். இம்முதல் உறுப்பான கிராமங்களிலும், தாலூகாக்களிலும், ஜில்லாக்களிலும் அவைகளை பரிபாலித்துவர லோகல்போர்டு என்றும் முனிஸிபாலிடி என்றும் வழங்கும் ஸ்தல சபைகள் உண்டு. இந்த லோகல் போர்டுகளுக்கும், முனிஸிபாலிடிகளுக்கும் மெம்பர்களை அந்த ஜில்லாவிலுள்ள கிராமத்தார்களே தேர்ந்தெடுக்கிறவர்கள். அம்மெம்பருள் சிலர் ஸர்க்காரால் நேமிக்கப்பட்டும் உளர். மூலாதாரமான படிப்பு, சுகாதாரம், ஊருக்கு ஊர் ரோட்டுகள் போடுதல் ஆகிய விஷயங்களை மேல்சொல்லிய போர்டுகளும் முனிஸிபாலிடிகளும் பரிபாலித்து வருகிறார்கள். இப்பொழுது ஏற்பட்டிருக்கும் சீர்திருத்தங்களாலே இந்த போர்டுகளிலும் முனிஸிபாலிடிகளிலும் மெம்பர்களாக நேமிக்கும் எலக்டார்களுக்கே, இவைகளைப் பரிபாலித்து உத்தரவாதமாயிருக்கும்படியான ஸ்வயாக்ஷி சம்பூர்ணமாய் கொடுபட்டிருக்கிறது. அதாவது, நூதனச் சீர்திருத்தத்தாலே, கிராமம், தாலூகா, ஜில்லாவில் உள்ள ஜனங்களுக்கே தங்கள் ஜில்லாவிலுள்ள முனிஸிபாலிடிகளையும் லோகல் போர்டுகளையும் பரிபாலித்துவர முழு அதிகாரம் அநேகமாய் கிடைத்துவிட்டது. ஸர்க்கார் மேல்பார்வையும் குறைந்துபோய் ஜனங்களுடைய மேல்பார்வையே இவைகளில் மிகுந்து இருக்கிறது. இதுமுதற்கொண்டு இந்த லோகல்போர்டு முனிஸிபாலிடி பரிபாலனம் ஜனங்கள் கையில் கிடைத்து அவர்களே அவைகளைச் சரிவர பார்த்து யஜமானத்துவம் பரிக்கலாகிறது.

இங்ஙனம் முனிஸிபாலிடிகளுக்கும் லோகல்போர்டுகளுக்கும் தங்களுக்குள்ள காரியா காரியங்களைப் பார்த்துவருவதற்கு ஸ்வதந்திரம் பூராவாகக் கிடைத்திருப்பது அற்ப சொற்பமல்ல. அதி

னால் அநேகம் பிரதானமான காரியங்கள் சித்திபெறலாகும் என்பதை நீங்கள் பரியாலோசனை செய்யவேண்டும். கிராமங்கள் சேர்ந்து தாலூகாவாகி, தாலூகாக்கள் சேர்ந்து ஜில்லாவாகிறது என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். ஆகவே இந்திய ராஜ்ஜியம் முழுவதற்கும் கிராமங்களே ஜீவாதாரமாகும். இக்கிராம சமூகத்தைத்தான் வாஸ்தவமாய் இந்தியா என்று சொல்லவேண்டும். இவ் விந்தியாவில் ஒன்பது லக்ஷத்திற்கு அதிகம் கிராமங்கள் உண்டு. இந்தியர்களில் 15-ல் ஒரு பாகத்தினர்தான் பட்டணங்களில் வசிப்பவர். அதாவது ஒன்பது லக்ஷம் ஜனங்களில் கிராமவாசிகள்தான் ஏராளம். நகரவாசிகள் மிக சொற்பம். ஏராளமாயுள்ள கிராமவாசிகள்தான் நிலத்தை உழுது பயிரிட்டு இந்தியா முழுவதற்கும் வேண்டிய உணவுப் பொருள்களைக் கொடுக்கின்றனர். கூலியாட்களும், சிப்பாய்களும் இக்கிராமங்களிலிருந்தே வருபவர்கள். இந்தியாவில் நடந்திருக்கும் அநேகவிதமான சண்டை சச்சரவு, படையெழுச்சி ஆகிய இவைகளுக்குத் தப்பிப் பிழைத்து இந்தியாவைக் காப்பாற்றி வந்திருப்பதும் இக்கிராமங்களே. இந்தியாவில் வெகுகாலமாய் ராஜாங்கத்தைக் குறித்து ஒரு வசனம் பழமொழியாக விளங்கிவருகிறது. அது "ராயால் ஆண்டு வருவது ராஜாங்கம்" என்பது "ராய்" என்னும் பதத்தோடு சேர்ந்த "ரயட்" என்பது, பயிரிடுவோருக்குக் கொடுபட்டிருக்கும் பெயர். ஆகவே "ராயின்" ராஜ்ஜியம் என்பதனால், ராஜ்ஜியத்தினுள்ள குடிகளாகிற ரயட்டுக்களின் நன்மைக்காக ஆளப்படுவது என்று பொருள் விளங்கும். ஆகையினாலே, புராதன காலம் முதற்கொண்டு ராஜ்ஜியபாரம் பண்ணுவதின் அந்தரங்கத்துவம் ரயட்டுகளின் சௌக்கியத்தைத்தான் ஒரு ராஜ்ஜியத்தில் பிரதானமாய் முதல் முதலில் கவனிக்கவேண்டும் என்று ஏற்படுகிறது. அதிலிருந்துதான் ரயிட்டுக்களின் சௌக்கியமாத்திரம் அன்றி, இதர ஜனங்களின் சௌக்கியத்தையும்கூட நாடிச் செலுத்துவது ராஜாங்கம் என்று வரலாயிற்று. ஆகவே, கிராமங்களிலும், தாலூகாக்களிலும், ஜில்லாக்களிலுமுள்ள ரயட்டுத்தான், இந்திய நூதனச் சீர்திருத்தத்தில் ராஜ்ஜிய யஜமான ஸ்தானம் வகித்து, கூடுமான வரையில் அவர்களே தங்கள் ஸ்தல ஆக்ஷியைக் கவனித்து வருவது லேசான காரியம் என்று எப்படி அலக்ஷியம் செய்யலாகும்? அங்ஙனம் அவர்களுக்கு நூதனச் சீர்திருத்தத்தால் கிடைத்திருக்கும் ஸ்வய ஆக்ஷி உரிமை வெகு பிரதானமானது. இந்த ஸ்தல ஸ்வயாக்ஷிக்கு அடுத்தபடியாகச் சொல்லவேண்டுவதாவது:— மாகாண கவர்ன்மெண்டிலும், அதை அடக்கி ஆளும் இந்தியா கவர்ன்மெண்டிலும், பிரஜைகள் சரியானபடி தங்களுக்குள்ள அதிகார முறையைச் செலுத்தப் போதுமான திறமையை அவர்களுக்கு உண்டாக்க ஸ்தல ஸ்வய ஆக்ஷியைக் கொடுத்து நிர்வகிக்கச் செய்வதே மூல சாதனமாகும்.

காலம்சென்ற கிளாட்ஸ்டன் பிரபுவும் இதைக்குறித்து, ஸ்தல ஸ்வய ஆக்ஷி கொடுத்து ஜனங்களைப் பழக்கப்படுத்துவதே இந்திய ஆக்ஷி முழுவதையும் நிர்வகிக்கப் போதுமான சக்தியுண்டாக்குவதற்குத் தகுந்த பள்ளிக்கூடம் என்று சொல்லியிருக்கின்றனர். அவர் அங்ஙனம் சொல்லவேண்டிய காரணம் யாதெனில், ஸ்வய ஆக்ஷியி

விருந்து ஜனங்களுக்கு உண்டாகும் அநுபவத்தால் அவ்வாக்ஷியின் மாதிரியும் நடப்பு நடவடிக்கையும் தெரியப்பெற்று, ராஜ்ஜியம் முழுவதையும் அரசாண்டுவரத் திறமைவாய்ந்துள்ள பிரதிநிதிகளே அவர்களே தேர்ந்தெடுக்கக்கூடிய சக்தி ஏற்படலாகும். இந்தியாவில் ரிபன் பிரபு வைஸிராயாய் இருந்து வந்தது உங்களுக்குத் தெரியாத விஷயமல்லவே? அவரிடத்தில் ஜனங்களுக்கு வெகு பிரீதி. அவரிடமுள்ள பிரீதியைப்போல் வேறு எந்த வைஸிராய்களிடத்திலும் இந்தியர்களுக்கு அவ்வளவு பிரீதிகிடையாது. அவரும், "ஸ்தல ஸ்வய ஆக்ஷியே நாடுமுழுவதையும் அடக்கி ஆளப் போதுமான வித்தையை ஜனங்களுக்குக் கற்பிக்கலாகும்" என்று பேசியிருக்கின்றனர். ஸ்தல ஆக்ஷியே பிரிட்டிஷ் ராஜாங்க அமைப்பிற்கு இசைக்கல்போல் பிரதானமானது. ஏனென்றால், அவ்வாக்ஷி சிலபெறும் ஸ்தலங்களிற்கு அக்கம்பக்கத்திலிருக்கும் ஜனங்களும் அவ்வாக்ஷி எப்படி நடந்தேறிவருகிறது என்பதையும், ஜனங்களாலே தெரிந்தெடுத்து நேமிக்கப்படும் சபைகளும், லோகல் போர்டுகளும் எங்ஙனம் ஜனங்களுக்கு சுகாசுகம் உண்டாக்கி வருகின்றன என்பதையும், லேசாய் அறிந்துகொள்ள இடமாகும். ஆகவே, லோகல் போர்டுகளிலும், முனிஸிபாலிடிகளிலும், கூடுமானவரையில், ஜனங்களுக்கே ஸ்வயாதிகாரம் கொடுத்து, கிராமங்கள், தாலூகாக்கள், ஜில்லாக்களாகிய இவைகளிலுள்ள ஜனங்கள் அவ்வதிகாரத்தை வகிக்கும்படிச் செய்திருப்பது நூதனச் சீர்திருத்தத்தின் முதல் லாபம் என்றும், அது பிரதானமானது என்றும் விளங்கவில்லையா? அதாவது, சுருக்கிச் சொல்லுமளவில் ராஜ்ஜியாதிபத்திய விஷயங்களில், ஜனங்களுக்கு உத்திரவாதம் செய்யும் அரசுரிமை பூராவாய் கொடுபட்டிருக்கிறது என்பது அறியலாகும். இதுமாத்திரமல்ல. இன்னமும் கேளுங்கள். கிராமத்திலுள்ள குடிகளுக்கும் தாலூகா என்று பேர்வழங்கும் பட்டணங்களிலுள்ள கூலிவேலைக்காரர்களுக்கும், தங்கள் மாகாண அரசாக்ஷியிலும், அதற்கு மேல்படியாயுள்ள இந்திய அரசாக்ஷியிலும் அதிகாரம் என்பது இதுவரையில் கிடையவே கிடையாது. இதுமுதற்கொண்டு, அவர்களும் அவ்வித அரசாக்ஷியைப்பற்றி எடுத்துப் பேசவும், அவைகள் சரியானபடி நடந்தேறுகின்றனவா என்பதைப் பரிசீலனை பண்ணவும் ஸ்வதந்திரம் அவர்களுடைய பிரதிநிதிகளாய் இருக்கும் எலக்டர்களுக்கு உண்டாயிருக்கிறது. குடிகள் நிலவரியாக ஏதாகிலும் சாதாரணமாய் ஏற்படுத்தப்பட்ட தொகை கட்டினாலும்சரி, அல்லது கூலியாட்களாயிருந்து வருஷத்தில் ஒரு சுமார் சம்பாத்தியமுடையவர்களாயிருந்தாலும்சரி, இவர்கள் எலக்டர்களாகி தாங்களிருக்கும் தாலூகா ஜில்லா ஆக்ஷியைப் பரிசீலனைசெய்து பார்க்க ஸ்வதந்திரம் உடையவர்களாவர். இதுமாத்திரம் அல்லாமல், மாகாண அரசாக்ஷியிலும் தங்களுக்குள்ள அதிகாரத்தைச் செலுத்த உரிமையுள்ளவர்களாகிறார்கள். ஆகவே, சர்வகலாசாலையில் வித்தியாபிவிர்த்தியில் பட்டம் பெற்று, அந்தஸ்து உள்ள புத்திமான்களோடும், பணம் மிகுந்து நிலபலம் அதிகமாயுள்ள பெரியதனக்காரர்களோடும், குடிக்கூலி சுமாராய்க் கட்டுபவர்களோடும் இதர எளிய ஜனங்களும் சமத்துவமாய் எலக்டர்களாகிவர, ஸ்வதந்திரம் கிடைத்திருப்பது நூதன சட்டத்தினாலேயே.

6-ம் அத்தியாயம்.

மாகாணச் சட்டநிர்மாண சபைகளில் சீர்திருத்தம்.

ஸ்தல ஆக்ஷியை ஜனங்களுக்குக் கொடுத்து, அது ஜனங்களுக்கு எவ்விதம் உத்தரவாதமாய் நின்று மேலோங்கிவரக்கூடியது என்பதை 5-ம் அத்தியாயத்தில் விளக்கிக் காட்டியிருக்கிறேன். அதற்கு மேல்படியாயுள்ள மாகாண அரசாக்ஷியின் அமைப்பைக்குறித்து இந்த அத்தியாயத்தில் எடுத்துச் சொல்லப்போகிறேன். அவ்வரசாக்ஷியில் மாகாணத்திற்கு சட்டங்கள் ஏற்படுத்திவைக்க சட்ட நிர்மாணசபை என்றும், அச்சட்டங்களின்படி மாகாணத்தை பரிபாலித்துவர நிர்வாக சபை என்றும் இருவித சபைகள் உண்டு.

இச்சட்ட நிர்மாண சபையில் ஜனங்களுக்கு உத்தரவாதமாய் நிற்கும் அரசாக்ஷி எங்ஙனம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதையும் அதில் எவ்வளவு வரையில் ஜனங்களுக்கு அதிகாரம் உண்டு என்பதையும் நாம் முதலில் பார்ப்போம். தற்காலத்தில் இச்சபையில் மூன்றுவகையான மெம்பர்கள் உண்டு. (1) சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், (2) ஸர்க்காரால் நேமிக்கப்பட்ட ஸர்க்கார் உத்தியோகமிராத ஐரோப்பியர்களும் இந்தியர்களும், (3) வர்த்தகச் சங்கத்தார்கள், சர்வகலாசாலைகள், நிலத்திறகுடையவர்கள், மகம்மதியர்கள், யந்திரசாலை வைத்திருப்பவர்கள், ஜன சமூகங்கள், முனிஸிபாலிடிகள், ஜில்லாபோர்டுகள், ஆகிய பலவித சமூகங்களின் சிபார்சின்பேரில் சர்க்காரால் நேமிக்கப்படும் இதர மெம்பர்கள். இந்த சமூகங்கள் யாவும் சர்க்காராலேயே தேர்ந்தெடுக்கப்பட்டவைகள். ஆகவே, இந்த மூன்றுவது வகுப்பிலிருந்து வரும் மெம்பர்களை மாத்திரம்தான் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்று ஒருவாறு சொல்லலாகும். இப்பேர்பட்ட மெம்பர்களையும் பேருக்குத்தான் மெம்பர்கள் என்று சொல்லவேண்டும். இவர்கள் ஜனங்களால் ஏற்படுத்தப்பட்டவர்கள் என்று சொல்லிக் கொள்வது வெறும்பேச்சுத்தான். வாஸ்தவமாய் இவர்கள் சர்க்காராலேயே தான் நேமிக்கப்படுபவர்கள். ஏனெனில், மேற்சொல்லிய ஜனசமூகங்களுக்கு, சட்டசபைக்கு மெம்பர்களை சிபார்சு மாத்திரம் செய்ய உரிமையே தவிர, அவர்களைத் தாங்களே சர்க்காரன்னியில் மெம்பர்களாய் நேமகம்பண்ண உரிமை கிடையாது. சர்க்காரும், அப்படி ஜனங்கள் சிபார்சினால் வரக்கூடிய மெம்பர்களை நேமித்தாலும் நேமிக்கலாம். நேமிக்காமலும் இருந்துவிடலாம். இது சர்க்காரின் இஷ்டம்போல்தான் நடக்கும். ஆகவே இவர்களையும் சர்க்காரால் நேமிக்கப்பட்டவர்கள் என்றே சொல்லிப்போடலாம். ஆகையினாலே, மாகாணச் சட்ட சபையின் அமைப்பு, பூராவாய், சர்க்கார் உத்தியோகஸ்தர்களாலும், ஸர்க்காராலே நேமகம் பண்ணப்பட்டவர்களாலும் அடங்கி உள்ளதே தவிர வேறில்லை.

அடுத்த வருஷம் முதற்கொண்டு இந்தியாவில் நூதனச் சட்டம் அனுஷ்டானத்திற்கு வருவதால், இச்சட்டசபை தற்கால ஸ்திதியைப்போல் இருக்கப்போவதில்லை. இனிமேல் இச்சபையில் மொத்தம் 100 மெம்பர்கள் இருந்தால் அதில் 70 மெம்பர்கள், அநேகம் ஜனஸமூகங்களாலே பொறுக்கி எடுக்கப்பட்டவர்களாயும், ஜனங்களினுடைய பிரதிநிதிகளாயும் இருப்பவர்கள். இப்படித் தேர்ந்தெடுக்கும் ஜனஸமூக ஸ்தானங்களுக்கு 'எலக்டரேட்டு' என்றும், அந்த ஸ்தானங்களில் உள்ளவர்களுக்கு 'எலக்டர்கள்' என்றும் பெயர். இந்த எலக்டரேட் ஆகிய ஸ்தானங்களில், உழுது பயிரிடுவோரும், கூலிவேலை செய்பவரும், வியாபாரம் செய்பவரும், உத்தியோகஸ்தினரும் ஆகிய நாலுவித ஜனங்களின் பிரதிநிதிகள் மெம்பர்களாக இருப்பார். தவிரவும், சென்னை ராஜதானியில் உள்ள பிராம்மணரல்லாதவர்களுக்கும், பம்பாய் ராஜதானியில் உள்ள மகாராஷ்டிரர்களுக்கும், பஞ்ஜாபிலுள்ள சீக்கிய ஜாதியார்களுக்கும் மகம்மதியருக்கு ஏற்பட்டிருப்பதுபோல பிரத்தியேகமாய் ஒவ்வொரு எலக்டரேட் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. இவ்விதம் பிரத்தியேகமாயுள்ள எலக்டரேட்டுகளிலிருந்து, அந்தந்த ஜாதியார்கள், தங்கள் தங்களுக்குள்ள காரியாகாரியங்களைக் கவனிக்க பிரதிநிதிகள் ஏற்படுத்திக்கொள்ளக்கூடும்.

மேற்சொல்லிய பிரகாரம் ஜனங்களுக்கு அநுகூலமாயுள்ள எலக்டரேட்டுகளை ஏராளமாய் ஏற்படுத்தி, அவ்வெலக்டரேட்டுகளிலும், நாலுவித ஜாதி வருணாச்சிரமத்தாரையும், பலபல தொழிலாளிகளையும், வர்த்தகர்களையும வியாபாரிகளையும் எலக்டர்களாகும்படிச் செய்து, ஒவ்வொரு மாகாணச் சட்ட சபைகளில் இவ்வெலக்டர்களால் ஏற்படுத்தப்பட்ட பிரதிநிதிகள் மெம்பர்களாகி, அம்மெம்பர்களும் அதிகப்பட்டு நிராக்ஷேபணையாய் மெஜாரடியாகவே இருந்துவர இடம் இருப்பதினாலேயும், மாகாணச்சட்ட சபைகளில் ஸர்க்கார் உத்தியோகஸ்தினரும், ஸர்க்காரால் நேமிக்கப்பட்டவர்களுமாகவே இதுவரையில் இருந்த ஸ்திதி முற்றும் மாறி, அச்சபைகள் நாட்டார்கள் சபைகளாகவே ஆகிறதினாலேயும், நம்தேசத்திற்கு அடுத்த வருஷம் முதல், அமுலுக்குவரும் நூதனச்சட்டம், நமக்கு மிகவும் மூலாதார ஸாதனம் எனபதற்கு எள்ளளவும ஐயமில்லை.

'சட்டநிர்மாண ஸபையில் ஜனங்களால் ஏற்படுத்தப்படும் மெம்பர்களே மெஜாரடியாய் இருப்பதினாலே, நம்தேச அரசாக்ஷி எந்த ஸ்திதிக்கு வரக்கூடும்' என்பதைப்பற்றியும், 'அப்படியுள்ள மெஜாரடி மெம்பர்களாலே ராஜ்ஜியத்திற்கு என்ன நன்மை விளையக்கூடியது' என்பதைப்பற்றியும் யோசித்துப்பார்த்தால், (1) இனிமேல், ஜனங்களுடைய சுகாசுகங்களைப்பற்றிப் பிறப்பிக்கும் சட்டங்கள். இதுகாறும இருந்தவைபோல ஸர்க்கார் உத்தியோகஸ்தர்கள் இஷ்டத்திற்குத்தக்கபடி ஏற்படப்போவதில்லை; (2) அச்சட்டங்கள், மகா ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற பிரதிநிதிகள் இஷ்டப்படிக்குத்தான் ஏற்படக்கூடியவைகள்; (3) அன்னவர் ஏற்படுத்தும் சட்டங்களும், தங்களை மெம்பர்களாய்ப் பொறுக்கி எடுத்த ஜனங்களின் நன்

மையை நாடியே இருக்கும்; (4) அங்ஙனமின்றி அப்பிரதிநிதிகள், தங்கள் இஷ்டம்போல் சட்டம் ஏற்படுத்தி, ஜனங்களுக்கு நன்மை உண்டாக்காவிட்டால், அவர்கள் ஸர்வ ஜன விரோதிகளாய், மறுபடியும் சட்டசபைக்கு மெம்பர்களாய்த் தேர்ந்து எடுக்கப்படமாட்டார்கள், என்கிற இந்த நான்கு விஷயங்களும் புலப்படும். இதுதான் நூதனச்சட்டத்தினால் உண்டாகக்கூடிய புதிய ஸ்திதி. ஆகவே இந்த ஸ்திதி இந்தியாவுக்கு எவ்வளவு மேன்மை! எவ்வளவு நன்மை!!

இதுமாத்திரமல்ல. சட்ட சபைக்கு இதுவரையில் மாகாணக் கவர்னரே அக்கிராஸனாதிபதியாக இருந்தார். நூதனச்சட்டத்தினால் அவருக்கு அந்த அக்கிராஸனாதிபத்தியம் போய்விட்டது. இனிமேல், இச்சட்டம் அனுஷ்டானத்திற்கு வந்து, முதல் நான்கு வருஷம் வரையில் கவர்னரால் நேமிக்கப்படும் ஒருவர், சட்டசபைக்கு அக்கிராஸனாதிபதியாய் இருந்து வருவார். அப்படி நான்கு வருடங்களான பின்பு, இங்கிலாந்தில் ஹௌஸ் ஆப் காமன்ஸ் என்று வழங்கும் பார்லிமெண்டு மகாசபையில் நடந்துவரும் வழக்கம்போல, இந்தியாவிலும் சட்ட நிர்மாண சபைக்கும், அச்சபையிலுள்ள மெம்பர்களே, தங்களில் ஒருவரை அக்கிராஸனாதிபதியாக நேமித்துக்கொள்ளப்போகிறார்கள். ஆனால் அவ்வித நேமகம், கவர்னரால் அங்கீகரிக்கப்படவேண்டும்.

சட்டசபைக்கு அக்கிராசனாதிபதியை முதல் நான்கு வருஷம் வரையில் நேமிப்பதற்கு கவர்னருக்கு அதிகாரம் நூதன ஆக்டில் கொடுத்திருப்பது எதற்காக? ஏன் அந்த ஆக்டில் ஆதிமுதற்கொண்டே சட்டசபையார்கள் தங்களில் ஒருவரை, தங்களுக்கு அக்கிராசனாதிபதியாய் நேமித்துக்கொள்ளக்கூடாது? என்பீர்களாகில், ஒரு சபையில் அக்கிராசனாதிபத்தியம் வகிப்பது அல்பசொல்பமான காரியமல்ல. ஏனெனில், அடுத்த வருஷம் முதல் ஏற்படப்போகிற நூதனச் சட்ட சபைகளில் மெம்பர்கள் அதிகமாகி, அவைகள் பெரிய சபைகளாகிறபடியால், அச்சபையை ஒழுங்குபெறச் சரியாய் நடத்தவும், அச்சபையில் நேரிடக்கூடிய வாக்குவாதங்களைத் தீர்த்துச் சீர்படுத்தவும், மெம்பர்கள் பேசுங்காலத்து முறை பிறழ்வாய் மரியாதை தப்பிப்பேச இடம் கொடுக்காமல், சபையை நடத்தி வருவது சிரமமான காரியமல்லவா? ஆகவே, அச்சட்ட சபைக்கு அக்கிராசனாதிபதியாய் இருப்பவர் சபையை நடத்திவருவதில் அநுபவம் மேலிட்டவராயும், பதட்டமின்றி விஷயங்களைச் செவ்வனே கவனிக்கக்கூடியவராயும், மனக்கலக்கமில்லாமல் ஸ்திர புத்தியுள்ளவராயும், ஏதாகிலும் ஒழுங்கு தவறினால், அதை உடனுக்குடனே சரிப்படுத்தச் சக்தியுள்ளவராயும், அனாவசியமான பேச்சுவார்த்தைகளுக்கும், வாக்குவாதங்களுக்கும் சட்டசபையில் மெம்பர்களுக்கு இடம் கொடாமல் பார்த்துவரத் திறமை உள்ளவராயும், இருப்பது அவசியமல்லவோ? நூதன ஆக்ட்டுப்படி சட்டசபை ஏற்பட்டு, முதல் நான்கு வருஷத்திற்குள், மெம்பர்களுக்கு அச்சபையை நடத்திவருவதில் அநுபவம் மிகுமாகையினாலே, அந்நான்கு வரு

ஷத்திற்குப்பின், சபையோர்களிலிருந்து அக்கிராசனாதிபத்தியம் நிர்வகிக்க யோக்கியதை உள்ளவர் ஏற்படக்கூடும்.

அந்நான்கு வருஷங்களுக்குப்பின் சபையோர்களால் நியமிக்கப்படும் அக்கிராசனாதிபதியை கவர்னர் அங்கீகாரம் செய்யவேண்டுவது யாது காரணம்பற்றி என்று கேட்கின், அதற்குப்பதில் லகுவாய்ச்சொல்லிவிடலாம். அதாவது, அரசாக்ஷி சரிவர நடந்தேறுவதற்கு ஜவாப்பு சொல்லக் கடமைப்பட்டவர், கடைசி முடிவில் கவர்னரேயாம். அவர் சட்ட சபையை மேன்பார்வை பார்த்துவருபவர். ஆகையினாலேதான், அவருக்கு, சபையோர் நேமிக்கும் அக்கிராசனாதிபதியை அங்கீகரிக்க அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சட்டப்படி அவ்வதிகாரம் கவர்னருக்குக் கிடைத்திருந்தாலும், அவர் சபையோர் விருப்பத்திற்கு மாறாய், அவர்கள் நேமிக்கும் அக்கிராசனாதிபதியை அநேகமாய் அங்கீகாரம் செய்யாமல் போகமாட்டார் என்பது திண்ணம். வெகு காலமாய் நமக்கு உண்டாயிருக்கும் அநுபவத்தாலே அவர் சபையோர் மனதுப்படியே நடப்பார் என்று நாம் நிச்சயமாய் நம்பியிருக்கலாம். உதாரணமாக, சென்ற 27 வருஷமாய், இந்தியாவில் சட்ட சபையைக்குறித்து ஏற்பட்டிருக்கிற ஆக்டின்படி, சட்ட சபைக்கு, சில ஜனசமூகங்களினால் தேர்ந்தெடுத்து மெம்பர்களாய் நேமிக்கப்பட்டவர்களை, கவர்னரும், அவருடன் சேர்ந்த நிர்வாகசபையாரும் அங்கீகரிக்கவேண்டுவது சட்டமாக வழங்கி வந்தாலும் இத்தனை வருஷங்களில், கவர்னர் அவ்வதிகாரத்தைக்கொண்டு, அம்மெம்பர்களில் ஒருவரையாகிலும் அங்கீகாரம் செய்யாமலிருந்ததே இல்லை. அவரும், அவருடன் சேர்ந்த நிர்வாகசபையாரும், மேற்சொல்லிய ஜனசமூகங்களின் எலக்டர்களால் நேமிக்கப்பட்ட மெம்பர்கள் யாவரையும், ஒரேமாதிரியாகத்தான் அங்கீகரித்து வந்திருக்கின்றனர். ஆகவே, இந்தியா ஆக்டின்படி ஏற்பட்ட நூதனச் சீர்திருத்தங்களாலே மாகாணச் சட்ட சபைகளில் ஜனங்களுக்கு எங்ஙனம் ஆதிபத்தியம் மிகுந்து, தங்கள் நன்மைக்காக தாங்களே சட்டதிட்டங்கள் ஏற்படுத்திக்கொள்ள, இவ்வளவு தூரம் இடம் உண்டாகிவிட்டது என்பதை இதுகாறும் விளக்கிச் சொல்லிவந்தேன்.

இதற்குமேல், சொல்லப்போவதாவது; மாகாண அரசாக்ஷியை வாஸ்தவமாய் கைக்கொண்டு வரும் நிர்வாக சபையார் செய்யும் காரியா காரியங்களை மாகாணச் சட்டசபையார் பரிசீலனை செய்துபார்க்க அதிகாரம், இந்நூதன ஆக்ட்டால் ஏற்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாய் இந்த ஆக்டில் மூலாதாரமான விசேஷ மாறுதல் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இதுவரையிலும், மாகாணச்சட்ட சபை, ஸர்காருக்கு ஆலோசனை மாத்திரம் சொல்லக்கூடிய உரிமையடைந்திருந்ததே தவிர வேறுவித அதிகாரம் அடைந்ததில்லை. அந்த ஆலோசனைப்படி சர்க்கார் நடக்கவேண்டியதுமில்லை. சர்க்கார் இஷ்டப்படி ராஜ்ஜியத்தை நடத்திவரக்கூடும். ஆனாலோ, இந்தியாவில் சீர்திருத்த விஷயமாய் பார்லிமெண்டார் ஏற்படுத்தியுள்ள நூதன ஆக்டின்படி சட்டசபைகள் கேவலம் யோசனை மாத்திரம் சொல்லும்முறைமையிலிருந்து போய், மேல்ஸ்திதியைப்பெற்று, ராஜாங்கம் நிர்வகிப்பதில் ராஜ

காரியங்கள் இன்ன இன்னபடிக்குத்தான் நடக்கவேண்டும் என்று கட்டளையிட்டு விதிக்கும் அதிகாரமும் ஒருவாறு சட்டசபையாருக்கு கிடைத்திருக்கின்றது.

அவ்வித மாறுதலும், அதினால் அதிகாரமும் சட்ட ஸபைக்கு ஒருவாறு வந்திருப்பது எப்படியெனில், மாகாணத் தலைவராயுள்ள கவர்னர், இனிமேல் நூதன ஆக்டின் பிரகாரம், சில மந்திரிமார்களை நியமிப்பார். அம்மந்திரிகள், அவர் நிர்வாக ஸபையில் உள்ள மெம்பர்கள் அல்லர். இதர விதமான ஸர்க்கார் உத்தியோகஸ்தரும் அல்லர். வித்தியை, சுகாதாரம், கலால் முதலான சில ராஜாங்க விஷயங்களைப் பரிபாலித்து வருவது அம்மந்திரிகளின் கடமை. அவர்களுக்கு அங்ஙனம் செய்துவர அதிகாரமும் உண்டாயிருக்கிறது. ராஜ்ஜிய பரிபாலனத்தில் ஏற்படும் விஷயங்கள் இருவகுப்பாகவும் பிரிபட்டுள்ளன. மேற்குறித்தபடி மந்திரிகள் அதிகாரத்திற்குள்பட்ட விஷயங்கள் ஒருவகை. இவைகளுக்கு மாற்றப்பட்ட விஷயங்கள் என்று பெயர். இவைகள் அல்லாத பாக்கி விஷயங்கள் ஸர்க்காராலே நேரில் கவனிக்கப்பட்டவைகள். அவைகளுக்கு 'ஸர்க்கார் நேர்பார்வையில் உள்ள விஷயங்கள்' என்று பெயர். 'மாற்றப்பட்ட விஷயங்கள்' எனறு பெயர் பெறுவானேன் என்றால், இதுவரையில் ஸர்க்கார் முகதாவில் பார்த்துவந்திருந்தது மாறி மந்திரிமார்களாலே இனி பார்த்துவரப் போகிறவைகள். "ஸர்க்கார் முகதாவில் பார்த்துவரும் விஷயங்கள்" என்றால் கவர்னரும், அவருடன் கலந்த நிர்வாக ஸபையாரும் பார்த்து வருபவைகளாம். மந்திரிமார்களை ஒவ்வொரு மாகாணத்திலும் கவர்னர் அவர்கள் நேமிப்பார் ஆயினும், அவர்கள் நேமிக்கப்பட்ட ஆறுமாதத்திற்குள்ளாக, மாகாணச்சட்ட ஸபை மெம்பராக அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அதாவது, மந்திரிகளை நேமிக்கும் அதிகாரம் கவர்னருக்கு. ஆனால் அவர்களை அங்கீகாரம் செய்யும் அதிகாரமோ சட்டஸபையிலுள்ள மெம்பர்களுக்கு உண்டு. அச்சட்டஸபையில் 100க்கு 70 பேர் ஜனஸமூகங்களாலே தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள். ஆகையால், மந்திரிமார்களை கவர்னர் நேமித்தாலும், அம்மந்திரிகள் ஜனங்களிடத்தில் விசுவாஸமுள்ளவர்களாய், அவர்களுடைய நன்மையையே கோரி நடந்து வந்தாலொழிய, ஜனங்கள் அபிப்பிராயத்திற்கு மாறுபட்டு நடக்கும் மந்திரிகளை சட்டஸபையில் மெஜாரட்டியாயிருந்து, ஜனங்களுக்கு ப்ரதிநிதிகளாகியும் உள்ள மெம்பர்கள் அங்கீகரிக்க மாட்டார்கள் என்பது ஸ்வதஸ்ஸித்தமாய் ஏற்படும். இங்ஙனம் நேமிக்கப்படும் மந்திரிகள்தான் "மாற்றப்பட்ட ராஜாங்க விஷயங்களை பரிபாலிக்கப் போகின்றனர். கவர்னரும் அவ்விஷயங்களில் மந்திரிகள ஆலோஜனையைக் கொண்டு நடப்பவராகும். அவர்கள் யோஜனைப்படி கவர்னர் நடக்காமல்போனால், தனக்கு எப்படி யுக்தமோ அப்படிக்கு அவர் செய்யலாகும். அப்போது மந்திரிகள் என்ன செய்யக்கூடும் என்றால், கவர்னர் அபிப்பிராயத்திற்கு விரோதமாக தாங்கள் அபிப்பிராயம் வகிப்பதால் தங்கள் மனோதர்மப்படி தங்கள் ஸ்வதந்திரத்தை விட்டுவிடாமல் தாங்கள் சட்டஸபையிலும் மெம்பராயும் மந்திரியாயும் இருப்பது

அகௌரவம் என்று தங்கள் மந்திரித்துவத்தை ராஜீநாமாகக் கொடுத்து விடலாகும். இல்லாமற்போனால் தங்கள் ஸ்வாதந்திரியத்தை விட்டு விட்டு, கவர்னர் அபிப்பிராயத்தை ஒட்டியே நடந்துகொண்டு மந்திரிகளாய்க் காலந்தள்ளி வரலாகும். இங்ஙனம் காலந்தள்ளி மந்திரிகள் வருவதானால், அவர்களிடத்தில் சட்ட சபையில் உள்ள மெஜாரடி மெம்பர்களுக்குக் கெட்ட எண்ணம் ஜனித்து, அவர்கள் ஜனங்களுக்குப் பிரதிநிதிகளாயிருந்து வருபவர் ஆகையால் கவர்னர் சொல்படி தாழ்மை நிலமைபெற்று நடக்கும் அம்மந்திரிகளைப் பலவிதத்தாலும் ராஜீநாமாகொடுத்து விடும்படிச் செய்துவிடுவார்கள். இங்ஙனம் ராஜீநாமாக் கொடுத்துவிடும் மந்திரிகள் சபையாரால் வேலையினின்றும் நீக்கப்பட்டவர்போல் ஆகிவிடுவர். ஆகவே, இந்திய சீர்திருத்த விஷயமாய்ப் பிறப்பிக்கப்பட்ட நூதன ஆக்டானது இந்தியர்களுக்கு தங்கள் தேச அரசாக்ஷியில் எவ்வளவு தூரம் அதிகாரம் உண்டாக்கி, அவ்வரசாக்ஷியும் எவ்வளவு வரையிலும் ஜனங்களுக்கு உத்தரவாதமாய் இருக்கப்போகிறது என்பதை மேல் கூறியதால் விளக்கும்.

அபிப்பிராய பேதத்தினால் கவர்னர் அபிப்பிராயத்தோடு ஒத்து நடக்க மனமின்றி மந்திரிகள் ராஜீநாமா கொடுத்துப்போனால், அம்மந்திரிகளால் பரிபாலிக்கப்பட்டுவந்த மாற்றப்பட்ட ராஜாங்க காரியங்களைப் பார்க்க, தக்க ஏற்பாடுகள் ஸ்வல்பகாலத்திற்கு மாத்திரம் செய்துவர இந்நூதன ஆக்டால் கவர்னருக்கு அதிகாரம் ஏற்பட்டு அதற்குத் தகுந்தபடி நிபந்தனைகளும் இருக்கின்றன. அதாவது, மந்திரிமார் ராஜீநாமா கொடுத்து, வேறு மந்திரி கவர்னரால் நேமிக்கப்பட்டு அந்நேமகமும் சட்டசபையாரால் அங்கீகாரம் பெறும் வரையில், கவர்னர் அம்மாதிரி மாற்றப்பட்ட ராஜகாரியங்களைப் பரிபாலித்துவர ஏற்பாடு செய்யலாகும்.

ஆகவே, ஒரு மாகாணத்தில் மந்திரிகளாய் ஏற்படுத்தப்படுபவர்கள் அம்மாகாணச் சட்டஸபை மெம்பர்களாகிய, ஜனங்களுடைய ப்ரதிநிதிகளின் இஷ்டப்படி நடந்துவரவும், அவர்கள் அங்ஙனம் நடவாவிடில், ஜனப் பிரதிநிதிகளாகிய அச்சட்டசபை மெம்பர்களாலேயே அவர்கள் மந்திரித்துவத்தினின்றும் பர்த்தருப்பு பண்ணப் படுவார்கள் என்பதும் உங்களுக்கு இப்பொழுது நன்கு விளங்கும்.

ஆனதுபற்றியே, இந்திய நூதன ஆக்டானது, மாகாணச்சட்டஸபையாரும், ராஜாங்கத்தை வகிக்கும் நிர்வாக ஸபையாரும், பரஸ்பரம் ஜனங்களுக்கு உத்திரவாதிகளாய் இருக்கும்படி மூலாதாரமாக ஏற்பட்டிருக்கிறது. அந்த ஆக்டினால், மாற்றப்பட்ட ராஜகாரியங்களில் மாத்திரம், தற்காலம் ஜனங்களுக்கு ஸ்வய ஆக்ஷி கிடைத்து, அவ்வாக்ஷியும் அவர்களுக்கு உத்தரவாதமாய் இருந்துவர, அதிகாரம் கிடைத்திருக்கிறது. இது முதற்கொண்டு, புதிதாய் ஏற்படும் சட்டஸபைகள் தங்கள் காரியங்களை ஒழுங்குபெற நடத்தி, ராஜ்ஜியாநுபவம் மிகுந்துவரும்பொழுது, ராஜாங்க ஸம்பந்தமாயுள்ள எல்லாக் காரியங்களையுமே ஜனங்கள் வகிக்கத் தலைப்பட்டு, ஜனங்களுக்கு ஸ்வராஜ்ஜியாதிபத்தியம் பூராவும் கிடைத்து, ஜனங்களே தங்கள் அரசாக்ஷிக்கு உத்தரவாதிகளாய் இருக்க நேர்ந்துவிடும் என்பதற்குக் கொஞ்சமேனும் ஐயம் வேண்டுவதில்லை.

7-ம் அத்தியாயம்.

மாகாண நிர்வாகஸபையில் சீர்திருத்தம்.

இந்திய நூதன ஆக்டினால் மாகாணக் கவர்னரைக் குறித்தும் அவருடன்கூடிய நிர்வாக ஸபையைக்குறித்தும மாகாணச் சட்ட ஸபையார்களுக்கு உள்ள அதிகாரம் எங்ஙனம் அதிகப்படுத்தப் பட்டு இருக்கிறது என்பதை இப்பொழுது கவனிப்போம். கவர்னர் செய்ய வேண்டிய பிரதானமானவேலையாவது, ஜனங்களிடமிருந்து வசூலாகும் வரித்தொகையை சேர்த்து, வரி செலுத்துவார், நன்மைக்காக அத்தொகையை செலவழிக்க வழிதேடுவதேயாகும். இதுவரையிலும் சர்க்கார் ஜனங்களுடைய நன்மைக்காக அவர்களி டமிருந்து வரிவசூல் செய்து வந்தபோதிலும், அவ்வரி எவ்விதம வசூல் செயயப்படவேண்டும் என்பதையாவது, அவ்வரியெங்ஙனம் தங்களுக்கு அநுகூலப்படும்படி உபயோகப்படுத்தவேண்டும் என்ப தையாவது கேட்க, ஜனங்களுக்கு அதிகாரம் தற்கால ஆக்ஷியில் கிடையாது. ஜனங்களுக்கு உத்திரவாதமாய் நிற்கும் ராஜாங்கத் திலோ ஜனங்களுடைய அநுமதியில்லாமலாவது, ஜனங்களைக் கேட்காமலாவது வரி ஏற்படுத்தமுடியாது. அதாவது, இனிமேல் ஏற்படும அரசாக்ஷியில் ஜனங்களுக்குத் தாங்கள் நேமிக்கும் பிரதி நிதிகள்மூலமாய் ராஜ்ஜியத்திற்குள்ள வரவு செலவையும் கண க்குப்பார்த்து அவர்கள் உத்திரவின் படித்தான் வரவுசெலவு செய்ய க்கூடும்.

அங்ஙனம் செய்ய ஜனங்களுக்கு அதிகாரம் கிடைத்திருக்கிறது. ஆனால் தற்காலத்திலோ, மாகாணச் சட்ட ஸபையிலுள்ள மெம்பர் களுக்கு அவ்வித அதிகாரம் கிடையாது. அவர்களுக்கு தங்கள் மாகாணத்திற்குரிய வருஷவாரி வரவு செலவு கணக்கைப்பற்றி சபை களில் ஆக்ஷேபனை சமாதானம் சொல்லிக்கொண்டு வெறும் பேச்சு த்தான் பேசக்கூடும். சட்ட ஸபைக்கு இவ்வளவு செலவு போதும் போதாது என்று வோட்மூலமாய்த் தீர்மானிக்க இடமே கிடை யாது. இங்ஙனமிருப்பதை இந்திய நூதன ஆக்டானது முற்றிலும் மாற்றி விட்டது. இந்த ஆக்ட்டால் மாகாணத்திற்கு வருஷா வருஷம் ஏற்படும் வரவுசெலவு ஜாப்தாவை அங்கீகரிக்கவும், அல் லது அது சரியானபடி இல்லை என்று தள்ளிவிடவும், சட்டஸபை யாருக்கு அதிகாரம் கிடைத்திருக்கின்றது. இதுவும் தவிர, வரவு செலவுமொத்தத்தையுமே ஒப்புக்கொள்ளாமல், அவைகளை மொத் தத்திலாகிலும் அல்லது ஏதாவது ஒரு பாகத்திலாகிலும் குறைத்து விடும்படிக்குள்ள அதிகாரமும் அச்சட்டஸபையாருக்கு கொடுக்கப் பட்டிருக்கிறது.

ஆயினும் இங்ஙனம் சட்டஸபையார் செலுத்தும் அதிகாரம் நிறைவேறுவதற்கு ஒரு தடங்கல் இருப்பது வாஸ்தவம்தான். அத் தடங்கலாவது, மாகாணத்தலைவராயுள்ள கவர்னர் சட்ட ஸபையார் ஏற்படுத்தும் தீர்மானத்தை நிராகரித்து, அதை அமுலுக்கு வர வொட்டாமல் தடுத்துவைக்க அதிகாரம் இந்திய நூதன ஆக்ட்டால்

அவருக்குக் கொடுபட்டிருக்கிறது. சட்டங்கள் ஏற்பட்டு அச்சட்டங்களின்படி அரசாக்ஷி நடத்தப்பட்டுவரும் ராஜ்ஜியங்களில், அவ்வி ராஜ்ஜியாதிபத்தியம் வகிக்கும் தலைவருக்குச் சாதாரணமாய் சில அசந்தர்ப்பங்களில் இவ்விதமாய் தடைசெய்ய அதிகாரம் இருக்கிறது ஸகஜமே. மாகாண கவர்னருக்கு இருக்கப்பட்ட மேற்சொல்லிய அதிகாரமும் அத்தன்மைத்தே. ராஜாங்கத்திற்கு அதிபதியாய் இருப்பவரே முடிவில் ராஜ்ஜியாதிபத்திய விஷயங்களில் உத்திரவாதியாக இருக்கக் கடமைப்பட்டவர். ஆகையாலே, சட்ட ஸபையார் ஏதாகிலும் சரித்தப்பான தீர்மானங்களை உண்டாக்கி விட்டால், அவைகளை நிறைவேறவொட்டாமல் நிறுத்திவைப்பதற்காக அப்படி தடைபண்ணும் அதிகாரம், ராஜாங்க ஸம்ரக்ஷணத்தின் பொருட்டு, காப்பாக கவர்னருக்கு கொடுபட்டிருக்கிறது. உத்தரவாதமாயுள்ள அரசாக்ஷி வெகுகாலமாய் நடைபெறும் ராஜ்ஜியங்களில் இத்தன்மையான அதிகாரம் செலுத்தப்பட்டு வருகிறதா? என்று பார்ப்போமாகில், விசேஷமாய் பிரித்தானியா தேசத்தில்கூட இவ்வித அதிகாரம் நடைபெற்றுவருகிறது என்பதைத் தெரிந்துகொள்ளக் கூடும். அவ்வதிகாரம் சட்ட புஸ்தகத்தில் எழுதப்பட்டுள்ளதாயினும் அது நடவடிக்கையில் அமுல் செலுத்தப்படுவதில்லை. அப்படி, அடிக்கடி அவ்வித அதிகாரம் செலுத்தப்பட்டால் ராஜ்ஜியத்திற்கு அநேக விதமான இடையூறுகளுக்கு இடமுண்டாகிவிடும். ஆனது பற்றி அவ்வித அதிகாரம சட்டபுஸ்தகத்தில் எழுதிவைக்கப்பட்டிருக்கிறது மாத்திரமே ஒழிய, அநுஷ்டானத்திற்கு வெகுகாலம் கொண்டுவரப்படாமல் நின்று நிஷ்பலமாய்ப்போய்விடும். ஸ்வராஜ்ஜியம் நடைபெறும் எல்லாதேசங்களிலும் கூட இவ்விதமான அதிகாரம் தேச ஸம்ரக்ஷணத்திற்கு அத்தியாவசியம் என்று நினைத்தே, இப்பேர்ப்பட்ட சட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும், நூதனமாய் ஏற்படும் சட்டஸபைகள், தங்கள் காரியங்களைச் சரிவர நடத்தி, அநுபவம் மிகும்வரையில், அவ்வித அதிகாரம் இருந்தேதீரவேண்டும் என்பது அத்தியாவசியமே.

நூதன ஆக்டினால் மாகாண அரசாக்ஷியில் இன்னமும் சில சீர்திருத்தங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. அவைகளைப் பற்றி இப்பொழுது சொல்லுகிறேன்.

1910-ம் வருஷம் வரையில் மாகாண கவர்ன்மெண்டு நடத்துவதற்கு மூன்றே மூன்று நபர்தான் உண்டு. அவர்கள், கவர்னரும், இந்திய ஸிவில் ஸர்விஸைச் சேர்ந்த இதர இரு மெம்பர்களுமாம். இவ்விருவரும் தான் கவர்னருடைய ஸபைக்கு மெம்பர்களானவர். 1910-ம் வருஷத்தில் இவ்விருவருடன், இன்னம் ஒரு இந்தியரும் நிர்வாக சபைக்கு மெம்பராயினர். ஆகவே, தற்காலத்தில் மாகாண நிர்வாக ஸபையில் நால்வர் உளர். அவர்களில் மூவர் ஐரோப்பிய உத்தியோகஸ்தரும், மற்ற ஒருவர் மாத்திரம் இந்திய உத்தியோகஸ்தருமாம்.

இந்திய நூதன ஆக்டால் அந்த நிர்வாக ஸபையில் இந்திய மெம்பர்கள் அதிகமாக்கப்பட்டிருக்கின்றனர். எப்படியெனில், இதுவரையில், இரண்டு நபர் இந்தியா ஸிவில் ஸர்விஸ் உத்தியோகஸ்தினராயிருந்தது மாறிப்போய், இனிமேல் அந்த நிர்வாக ஸபையில் ஒருவரே ஒருவர்தான் அப்படி இந்திய ஸிவில் ஸர்விஸ் உத்தி

யோகத்திலிருந்து மெம்பராக வரக்கூடியவர். ஆகவே பாக்கி இரண்டு நபர்களையும், இந்தியர்களாகவே ஸர்க்கார் நேமிக்க இடமுண்டு.

ஜாயின்டு பார்லிமெண்டரி கம்மிட்டியார் இந்தியா ஸம்பந்தமாய் ஏற்கனவே சொல்லியிருக்கப்பட்ட சிபார்சில், இந்திய மெம்பர்களை நிர்வாக ஸபையில் அதிகப்படுத்தும்படியாக, ஒரு நிபந்தனையைப் புதிதாய் ஏற்படுத்தவேண்டும் என்றனர். தற்காலத்தில் அநுஷ்டானத்திலுள்ள ஆக்டின்படி, மாகாண நிர்வாக ஸபையில் மெம்பர்கள் நால்வருக்கதிகம் இருக்கக்கூடாது. இந்த நிபந்தனை புதிய ஆக்டால் மாறுபடாவிட்டாலும், ஜாயிண்டு பார்லிமெண்டரி கம்மிட்டியார் செய்திருக்கும் சிபார்சில், மாகாண நிர்வாக ஸபையில், பொதுவாக, கவர்னரைத்தவிர, இரண்டு நபருக்குமேல் இருக்கவேண்டுவதில்லை என்றும், அவ்விருவரில் ஒருவர் இந்திய ஸிவில் ஸர்விஸைச் சேர்ந்த உத்தியோகஸ்தனராயிருந்துவரவேண்டும் என்றும், எப்போதாகிலும் அந்நிர்வாக ஸபை நான்கு மெம்பர்கள் அடங்கி இருக்க நேர்ந்தால், அப்பொழுது கவர்னரையும் சேர்த்து இருவர்தான் உத்தியோகஸ்தனராயிருக்கவேண்டுமென்றும், மற்ற இருவரும், ஸர்க்கார் உத்தியோகம் வகிக்காத இந்தியர்களாகவே ஏற்படவேண்டும் என்றும் பார்லிமெண்டரி கம்மிட்டியார் கூறி இருக்கின்றனர்.

இந்த சிபார்சை, இங்கிலீஷ் கவர்ன்மெண்டார், அங்கீகரித்திருக்கிறபடியால் மாகாண நிர்வாக ஸபையிலும் இந்திய மெம்பர்கள் அதிகமாகி, இந்தியர்களுக்கு அதிகாரமும் மேலிடுவது, இந்திய நூதன ஆக்டால் இந்தியாவிற்கு மிக்க லாபம் என்பது திண்ணம்.

இப்பொழுது, சாதாரணமாய், ஒரு கேள்வி கேட்கக்கூடும். அதாவது :—"மாகாண நிர்வாக ஸபையில், இரண்டு இந்திய மந்திரிமார்களை நேமித்து, அவர்களைக்கொண்டு மாற்றப்பட்ட காரியங்கள்" என்கிற ராஜாங்க விஷயங்களைப் பரிபாலித்து வரும்படிக்கு இந்திய நூதனச் சட்டத்தால் ஏற்பட்டு, அரசாக்ஷியும் ஜனங்களுக்கு உத்தரவாதமாய் ஏற்பட்டிருப்பது சரியே! இவ்விருவர்களும், சட்ட ஸபையில் ஜனங்களுக்குப் பிரதிநிதிகளாக விளங்குவதும் சரியே!! இவ்விரு மந்திரிமார்களையும் உத்தியோகத்தில் நிலைத்திருக்கச்செய்யவோ, அல்லது அவர்களை அவ்வேலையினின்றும் பர்த்தருப்புப்பண்ணிவிடவோ, அதிகாரம் சட்ட ஸபையாருக்கு இருந்துவருகிறது என்றும், அச்சட்ட ஸபையில் ஜனங்களுடைய பிரதிநிதிகள் நிஸ்ஸந்தேகமாயும் நிராக்ஷேபணையாயும் மெஜாரட்டியாய் இருக்கிறார்கள் என்று சொல்வதும் சரியே!!! இப்படியிருக்க, "ஜனங்களுக்கு ஸ்வராஜ்ஜியாதிபத்தியம் கிடைத்து, அது அவர்களுக்கு உத்தரவாதமும் சொல்லக்கடமைப்பட்டிருக்கிறது. அதனால் ஜனங்களுக்கு ஏராளமான நன்மை உண்டு" என்று இவ்வளவெல்லாம் எடுத்துச்சொல்லிவிட்டு, சட்ட ஸபையார் செய்யும் தீர்மானங்களையும், மந்திரிமார்கள் சொல்லும் யுக்தி ஆலோசனைகளையும் கேட்டு, "கவர்னர் மாத்திரம் நடந்துவர நிர்ப்பந்தம் கிடையாது. அவர், தன் மனோபீஷ்டப்படி ஆண்டுவரலாம்" என்கிற அதிகாரம் இந்திய ஆக்டினால் கவர்னருக்குக் கொடுப்பட்டிருக்கிறது என்று சொல்லிவிடுவதினாலே, இவ்வளவு தூரம் ஜனங்களுக்கு இங்

நூதன ஆக்ட்டால் வெகு லாபம் கொடுத்திருப்பதுபோல் கூறிவந்ததெல்லாம் பொய்யாய்ப்போய், கொடுத்ததையும் பிடுங்கிக்கொண்டு, ஆக்ட்டும் நிஷ்பலனாய்த்தானே ஆகிவிடுகிறது, என்று சாதாரணமாய் யாவரும் கேட்கலாகும்.

இந்தக்கேள்விக்குப் பதில் சொல்ல ஆரம்பிக்கும்போது, இந்திய நூதன ஆக்ட்டில் கவர்னருக்கு அவ்வித அதிகாரமுண்டு என்பதை நான் மறுதளிக்கவில்லை. அதை நான் ஒப்புக்கொண்டே உங்களுக்கு திருப்திகரமாய்ப் பதில் சொல்லுகிறேன்.

இந்திய நூதன ஆக்டு, இவ்வித அதிகாரத்தை கவர்னருக்குக் கொடுத்திருப்பதற்குக் காரணம் என்ன? என்பதையும், அவ்வதிகாரத்தினால், அதே ஆக்டால் ஜனங்களுக்குக் கிடைத்திருக்கும் அரசாக்ஷியினால் வரக்கூடிய அநுகூலம் வாஸ்தவமாய்க் குறைந்துபோய் விடுகிறதா? என்பதையும், நாம் குரோதமின்றிப் பதறாமல் சிந்தித்துப்பார்க்கவேண்டும்.

ஜனங்களுக்கு உத்தரவாதம் சொல்லக்கடமைப்பட்ட ராஜாங்கங்களின் சரித்திரத்தைப் படித்து விசாரிக்குமளவில், இவ்விதமான அதிகாரம் ராஜ்ஜியத்தில் தலைவராக இருக்கும் ஒவ்வொருவருக்கும் இருந்து வருகிறது என்பது யாவரும் தெரிந்துகொள்ளலாகும். அது ஒன்றும் புதுமையல்ல. அமெரிக்காவிலுள்ள ஐக்கிய மாகாணத்தில் நடைபெறும் ராஜாங்கம் ஜனங்களாலேயே, ஜனங்கள் ஸௌக்கியத்திற்காகவே ஏற்படுத்தப்பட்டது என்பதும், ஜனங்களுக்கே உத்திரவாதம் சொல்லக்கூடியதாயும் இருந்துவருகிறது என்பதும் யாவருக்கும் தெரியாத விஷயமல்லவே! அவ்வைக்கிய மாகாணங்களின் சரித்திரத்தையே உதாரணத்திற்காக எடுத்துப்பார்ப்போம். அந்த ராஜாங்கத்தையே, ஜனங்களுடைய சுயேச்சையையும், அவர்களின் உரிமைகளையும் பாதுகாத்துவரும் குடியரசு என்று மேன்மையாய்த் தூக்கிப்பேசுவதில்லையா? அப்பேர்ப்பட்ட தேசத்திலே, அமெரிக்கர்கள் ராஜாங்க ஏற்பாடுகள் முதன் முதலாய்ச்செய்யும்போது, ஜனங்களுடைய அதிகாரத்திற்கு அநேகம வரம்புகட்டி அவ்வதிகாரம் முற்றிலும் நிறைவேறுவண்ணம் அநேகவித நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தினர். இதைப்பற்றி, தற்காலத்தில் அவ்வைக்கிய மாகாணங்களுக்குப் பிரஸிடெண்டான 'டாக்டர் வுட்ரோ வில்ஸன்' என்பவர், "ஐக்கிய மாகாணங்களுக்கு ராஜாங்க அமைப்புப் பிறப்பிக்கும்போது அவ்விராஜாங்கம் ஜனங்களாலேயே முற்றிலும் நடத்தப்பட்டு வரவேண்டும் என்கிற எண்ணத்துடன் அவ்விராஜாங்க முறை ஏற்படுத்தப்படவில்லை" என்றும், "ஜனங்கள் ஏராளமாய் மெஜாரிடியாய் இருந்து, இதர மைனாரிடியாயிருப்பவர்களுக்கு உண்டாக்கக்கூடும் அக்கிரமங்களை அடியோடு தவிர்த்துவிடுவதற்காகவே அவ்வித நிர்ப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன" என்றும் கூறியிருக்கின்றனர். அமெரிக்காவில் முதல் முதல் பிரஸிடெண்டாயிருந்தவர் 'வாஷிங்டன்'. அவரும் இன்னம் சிலரும் சேர்ந்து ஐக்கிய மாகாணங்களுக்கு முதல் முதலில் ராஜாங்க அமைப்பு ஏற்படுத்தினர். அவர்கள் செய்த ராஜ்ஜிய அமைப்பில், ஜனங்களுக்கு ராஜ்ஜியாதிபத்தியத்தில் ஏராளமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருப்பினும், அவ்வதிகாரங்களுக்கு வரம்புகட்டி

அக்கிரம காரியங்களில் பிரவேசிக்கப்படாவண்ணம் அநேக நிபந்தனைகளைச் சட்டத்தில் ஏற்படுத்தினர். இவ்விதமாய்ச் செய்ததினாலே அவர்களை "பழையகாலத்தவர்கள், மேனோக்க மனதில்லாத மூடர் என்றும் தூஷணையாய்க் கூட ஏசலாயிற்று. அக்காலத்திலே ஐக்கிய மாகாணங்களின் அரசுமுறை அங்ஙனமாயின் இக்காலத்தில எப்படி என்பீர்களோ, அப்படியேதான் இருக்கிறது. சட்ட பூர்வமாய் பிரஸிடெண்டுக்கு இருக்கும அதிகாரத்திற்கு சில விஷயங்களில் அளவு ஸங்கியை இல்லை. அவரே ஏகச்சத்திராதிபதிபோல், தன் மனோபீஷ்டப்படி சில ராஜ்ஜிய காரியங்களை இப்பொழுதும் பரிபாலித்து வரக்கூடும்.

ஆகையினாலே, புகழ்பட்ட பேசப்படும் அவ்வமெரிக்காவிலும் கூட – ஸ்வராஜ்ஜிய ஏற்பாடுகள் செய்யுங்காலத்து, "பிரெஸிடெண்டுக்கு ஏன் ஏராளமான அதிகாரம் கொடுத்திருக்கவேண்டும" என்றும், அமெரிக்காவிலே ஏற்படுத்தப்பட்ட சட்டஸபையார் செய்யும் காரியங்களுக்கு தடை ஏற்படுத்தி, அச்சபையின் ஸ்வாதந்திரியத்தை ஏன் கட்டுக்குள் அடக்கி வைக்கவேண்டும் என்றும் ஆலோசித்துப் பார்க்குமளவில் நாம் தெரிந்து கொள்வதாவது :—

"ஜனங்களுக்கு உத்திரவாதமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ராஜாங்கம் என்பதினாலே, ராஜாங்கத்தைப் பார்த்துவர உத்தியோகஸ்தாகள் ஜனங்களாலேயே நேமிக்கப்பட்டு, அஜ்ஜனங்களாலேயே வேலையினின்றும் நீக்கப்படுபவர்களாகும். ஜனங்கள் யாவரும் ஒன்றாய்ச்சேர்ந்தே இவ்வித காரியம் செய்வது என்பது இல்லை. ஜனங்களின் சட்ட ஸபைகளில் தங்களுக்குப் பிரதிநிதிகளாய, தங்களில் சிலரை நேமித்து, அவர்களைக்கொண்டு ராஜ்ஜியத்தில் உத்தியோகஸ்தர்களை நேமிப்பதும், அவர்களை நீக்கிவிடுவதுமாகும். இங்ஙனம் ஜனங்களாலேயே நடத்தப்பட்டுவரும் ராஜாங்கத்திலே, ஒருவித அபாயம நேரிடக்கூடும். அவ்விதம் நேரிடக்கூடிய அபாயத்தைபபற்றி அமெரிக்காவில் ஸ்வராஜ்ஜியத்திற்கு அநுகுணமாய்ச் சட்டம் நிர்மாணித்தவர்களே எழுதியிருப்பது யாதெனில், ராஜாங்கம் நிலைபெற்று. நீடித்து, நன்றாய் நடைபெறவேண்டும என்கிற உத்ஸாகம் ஜனங்களுக்கிருப்பதைவிட, ஜனங்களுடைய உரிமைகளினிலே நாட்டச் சட்ட ஸபைகளில போராடுவதுபோல் வெளிப்பாவனைக்காட்டி, சுயநலம் நாடி முன்னுக்கு வரவேண்டும் என்கிற ஆதங்கமே ஜனங்களுக்கு அதிகம் என்று சரித்திரத்தினால் விளங்கிவருகிறது". ஆகவே, அமெரிக்கா போல ஸ்வராஜ்ஜியம் நிலைபெறும் நாடுகளில், ஜனங்கள் மெஜாரடியாயிருந்து, தங்களோடு சேர இஷ்டமில்லாமல் மைனாரடியாயிருந்துவரும் இதர ஜனங்களை உபத்திரவம் பண்ணினாலும் பண்ணலாம். அநேகம தடவை ஜனங்கள் ஒருங்குசேர்ந்து மெஜாரடியாயிருந்து, தங்களோடு சேராத மைனாரடியாயிருப்பவர்களை, அங்ஙனம உபத்திரவம் செய்தும இருக்கிறார்கள். இதைத்தான் "சின்னமீனைப் பெரியமீன வாயிலேபோட்டுக்கொள்வது" என்று சொல்லுவார்கள். "ஜனங்களே ஆண்டுவரும் ராஜ்ஜியத்தில், ஆரம்பத்தில் ஜனப்பிரதிநிதிகள் மிகுந்த செங்கோல செலுத்தி, முடிவில் அவ்விராஜ்ஜியமே கொடுங்கோல் மன்னர் நாடாகி, "ஆரம்பத்தில் அந்தரங்க மித்திரன். அந்தத்தில்

அஞ்சாத சத்துரு" என்பதைப்போல், முடிந்துவிடுகிறது. ஆகையினால், மேற்கூறியபடி ராஜ்ஜியத்தில் அக்கிரமம் ஏற்பட்டு அபாயம் நேரிடாதபடி மைனாரடியாயிருப்பவர்களுக்கு அக்கிரமம் நடக்காமல் அடக்கிப்பாதுகாப்பதற்காகவே, ராஜ்ஜியாதிபதியாயிருப்பவருக்கு சட்டத்தில் மேற்சொல்லிய அதிகாரம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்று அறிந்துகொள்ளவேண்டும். எந்த ராஜ்ஜியத்தில் ஜனங்கள் மெஜாரடியாயிருந்து அவர்களால் மைனாரடியாயிருக்கும் இதர ஜனங்கள் வதைக்கப்படாமல் தடுப்பதற்குரிய பாதுகாப்பு உண்டோ அந்த தேசமதான் ஸ்வாராஜ்ஜியாதிபத்தியம் வகித்து, சுயேச்சை பெற்ற ராஜ்ஜியம் என்று சொல்லக்கூடும். ஆகவே, ராஜ்ஜியாதிபதிக்கு அதிகாரம் கொடுத்திருப்பதற்கு இப்பொழுது சொல்லி வந்த ஒரு காரணமன்றி இன்னம் வேறு காரணமுமுண்டு. அதாவது :—

ஜனங்களே ஆண்டுவரும் ராஜ்ஜியங்களின் சரித்திரங்களைப்படித்துப் பார்க்கும்போது, "சில ஸமயங்களில் ஜனங்களுக்கு ஒருவகையான பரபரப்பு மேலிட்டு, அவர்கள் ராஜாங்க காரியங்களில் அனுவசியமாய்த் தலையிட்டுக்கொள்ளுகின்றனர்" என்பது வெளிப்பட்டு வருகிறதினாலே, அங்ஙனம் ஜனங்கள் நடந்துகொள்வதை அடக்கிக் கொண்டுவர, ராஜ்ஜியாதிபதிக்கு இந்த அதிகாரம் கொடுபட்டிருக்கிறது. இந்த காரணத்தினாலேயே, கனடா ராஜ்ஜியத்திற்கும் ஆரம்பத்தில், ஜனங்களுக்கு உத்தரவாதம் சொலலும் ஸ்திதியில் இல்லாமல் இருக்கும்படி ராஜாங்க ஏற்பாடுகள் முதல் முதலில் செய்யப்பட்டன.

ஆனதுபற்றி, மாகாண அரசாக்ஷியில் ஜனங்களுக்கு அதிகாரங்கள் ஏற்பட்டிருந்தும் இவ்வதிகாரங்கள், மாகாணத் தலைவராயுள்ள கவர்னருக்கு இருக்கும் அதிகாரத்தினாலே, உள்ளடங்கிப் போகக்கூடும் என்கிற காரணத்தைக்கொண்டு, மாகாணங்களில் ஜனங்களுக்கு அரசாளும் ஸ்வாதந்திரியம் குறைந்து போய்விட்டதாய் மதிக்கக்கூடாது. கவர்னர் தனக்கு கொடுபட்டிருக்கும் இவ்வதிகாரத்தை நலமாகவும், நலம்தப்பியும் செலுத்தக்கூடும். ராஜ்ஜியத்தில் மகா ஜனங்களினுடைய அபிப்பிராயத்திற்கு அநுகுணமாய், அவ்வபிப்பிராயத்தை ஒட்டியே, அபூர்வமாய் கவர்னர், தனக்குள்ள அவ்வதிகாரத்தைச் செலுத்துவாராகில், அவ்வதிகாரம் நலமாகச் செலுத்தப்பட்டதென்று சொல்லலாகும். அங்ஙனமின்றி, ஜனங்கள் அபிப்பிராயத்திற்கு விரோதமாய், முரண்பட்டு, அடிக்கடி கவர்னர் தன் அதிகாரத்தைக்காட்டினால், அவர் நலம்தப்பிப்போய் ஜனங்களுக்கு அவரிடம் வெறுப்பு உண்டாகி, சட்டசபையார், தங்களுக்குள்ள அதிகாரத்தைச் சரியானபடி பிரயோகித்து, அவருக்கு ராஜ்ஜியாதிபத்தியம் வகிக்கமுடியாமல் போகும்படி நேர்ந்து விடும். ஆகவே, மாகாணத் தலைவராகிய ஒவ்வொரு கவர்னரும், தான் செய்யப்போகும் காரியம் ஜனங்களுக்கு நிஷ்களங்கமாய் நன்மை பயக்கும் என்றும், அக்காரியம் சரி என்று, சட்டஸபையிலிராத மகாஜனங்கள் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள் என்றும், தனக்கு ஸ்பஷ்டமாய் முன்னதாகவே தெரிந்திருந்தாலொழிய, சட்டஸபையார் அபிப்பிராயத்திற்கு மாறாய் முரண்பட்டு ஒரு கார்யமும் செய்யவேமாட்டார்

8-ம் அத்தியாயம்.

இந்தியா கவர்ன்மேண்டில் சீர்திருத்தம்.

இதுகாறும் மாகாண கவர்ன்மெண்டுகளில், இந்திய நூதன ஆக்டால் ஏற்படும் சீர்திருத்தங்களைப்பற்றிச் சொல்லிவந்தேன். இனிமேல், இம்மாகாண கவர்ன்மெண்டுகளை எல்லாம் மேன்பார்வையிட்டு அடக்கிவரும் இந்தியா கவர்ன்மெண்டில் உண்டாகியிருக்கும் சீர்திருத்தங்களைப்பற்றி இந்த அத்தியாயத்தில எடுத்து விளக்குவேன்.

நூதன இந்திய ஆக்டினாலே, இந்தியா கவர்ன்மெண்டில் மாறுபாடுகள் ஏற்பட்டும், அக் கவர்ன்மெண்டில், ஜனங்களுக்கு மாகாண கவர்ன்மெண்டுகள்போல், உத்திரவாதமாய் நிற்பதற்கு ஹேதுவான ஒருவித மாறுதலும் உண்டாக்கப்படவில்லை, என்பதை முதல் முதலில் நீங்கள் கவனித்துத் தெரிந்துகொள்ளவேண்டும்.

ஏனெனில், பிரிட்டிஷ் பார்லிமெண்டார், இந்தியா கவர்ன்மெண்டானது, படிப்படியாய், மெள்ளமெள்ளத்தான் சீர்திருத்தி அபிவிர்த்திக்கி வரும்படிச் செய்யவேண்டுமே தவிர, திடீரென்று ஏக காலத்தில், அதையும் ஜனங்களுக்கு உத்திரவாதமாய் நிற்கும்படிச் செய்துவிடுவது அநுசிதம் என்று நினைத்தே, இந்திய கவர்ன்மெண்டைப்பற்றி அவ்வித மாறுபாடுகள் ஒன்றும் செய்யாமலிருந்துவிட்டனர். 1917-ம் வருஷம் ஆகஸ்டு மீ 17வயில் பார்லிமெண்டு மகா ஸபையில் ஸிக்கிரிடரி ஆப் ஸ்டேட் செய்த விளம்பரம் அப்படியே : ஜனங்களுக்கு உத்தரவாதமாய் இருந்து நடைபெறவேண்டிய அரசாக்ஷி முதன்முதலாய் மாகாணங்களில்தான் ஏற்பட்டு, அது மூலாதாரமாய் நின்று விளைக்கக்கூடிய பலனைக் கண்டறிந்து, இந்தியா கவர்ன்மெண்டையும் பின்னர் அங்ஙனம்செய்ய உத்தேசிக்கவேண்டுமே தவிர, இப்பொழுதே அப்படிச் செய்துவிடல்கூடாது என்று, பார்லிமெண்டாரே தீர்மானித்துவிட்டனர். மாகாண அரசாக்ஷியில் ஜனங்களுக்கு அநுபவம் மேலிட்ட பிறகு, காலக்கிரமத்தில் முடிவில் இந்தியா முழுவதும் ஜனங்களுக்கு உத்தரவாதமாய் நிற்கக்கூடிய ஸ்வராஜ்ஜியம் ஏற்படலாகும் என்று அப்பார்லிமெண்டாரும், சொல்லிவிட்டனர்.

இந்தியா முழுவதும், இந்த ஸ்திதிக்கு கடைசியாய் வரும்வண்ணம் இந்திய நூதன ஆக்ட்டு அநுஷ்டானத்திற்கு வந்து பத்து ஸம்வத்ஸரகாலத்திற்குப் பிறகு, அதாவது 1929-1930-ம் வருஷத்தில், மாக்ஷிமைதங்கிய நமது சக்கிரவர்த்தியார் 'கம்மிஷன்' ஒன்றை நியமிக்கும்படி, இந்திய நூதன ஆக்டில் நிபந்தனை ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அக்கம்மிஷ்ஷனர்கள், இந்நூதன ஆக்ட்டு எங்ஙனம் அநுஷ்டானத்தில் நடைபெற்று, ஜனங்களுக்கு என்னென்ன

ஸௌகரியா ஸௌகரியங்களை விளக்கலாயிற்று, என்பதைப் பரியாலோஜிப்பார்கள். அதன் பிறகு, இந்த ஆக்டினால் ஏற்பட்டு உத்தரவாதமாயுள்ள அரசாக்ஷியில் ஏதாகிலும் மாறுதல்கள் ஏற்படுத்தவோ, அல்லது அதையே வியாபிக்கும்படிச் செய்யவோ, அந்த கமிஷனர்கள் நமது சக்கிரவர்த்தியாருக்கு ஒரு ரிபோர்டு செய்வார்கள்.

இந்தியா கவர்ன்மெண்டு ஸம்பந்தமாய், இந்நூதன ஆக்டில் ஜனங்களுக்கு, உத்தரவாதம் சொல்ல நிபந்தனைகள் ஏற்படாமலிருந்தாலும், இந்த கவர்ன்மெண்டில், சில முக்கியமான விசேஷ மாறுதல்கள் ஏற்படுத்தபபட்டுள்ளன. அவைகள் இந்திய கவர்ன்மெண்டை தற்கால ஸ்திதியைவிட, நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவரக்கூடியவைகள் தான்.

அங்ஙனம் என்னென்ன மாறுதல்கள் ஏற்பட்டு, இந்தியா கவர்ன்மெண்டு சீர்திருத்தப்படுகிறது என்பதை இப்பொழுது உங்களுக்கு எடுத்துச் சொல்லுவேன்.

மாகாண அரசாக்ஷியைப்போலவே, இந்தியா கவர்ன்மெண்டிலும் இருவகையாய் அதிகார முறை உண்டு. ஒன்று நிர்வாகஸபையும், மற்றொன்று சட்டநிரூபண ஸபை.

நிர்வாகஸபையானது தற்காலஸ்திதியில் இந்தியாவிற்கு வைஸிராய் என்று பேர்பெறும் கவர்னர்ஜனரலுடைய ஸபையாகும். அச்சபையில் ஆறுபேர் மெம்பர்கள். அவர்களில் ஒருவரே ஒருவர்தான் இந்தியதேசஸ்தவர். இந்திய ராணுவத் தலைவருடைய மெம்பர்ஸ்தானம் இல்லாமலே, ஆறு மெம்பர்கள் உண்டு என்று தெரிந்துகொள்ளுங்கள்.

நூதன ஆக்ட்டு அடுத்த வருஷம்முதல் அநுஷ்டானத்திற்கு வருவதினாலே, இனிமேல், இவ்விந்தியா கவர்ன்மெண்டில், ஒரு இந்தியர்மாத்திரமல்ல, மூன்று இந்தியர்கள் மெம்பராகிவிடுகிறார்கள். ஆகவே, இது இந்தியாவிற்கு முதலில் முக்கிய லாபமாகும்.

இவ்விதம் இந்திய கவர்ன்மெண்டில் இந்தியர்களில் மூவர் மெம்பராயிருக்கவேண்டுமென்று பார்லிமெண்டு கம்மிட்டியார் சிபார்சு செய்திருப்பதற்குக் காரணம் யாதெனில், நாளடைவில் இந்திய நிர்வாக ஸபையில் ஐரோப்பியர்களைவிட இந்தியர்களே அதிகமாய் ஏற்படவேண்டுமென்பது.

தவிரவும், இதுவரையில் நடந்துவரும் இந்தியா கவர்ன்மென்டில், சட்ட ஸம்பந்தமாய் ஆலோசனை சொல்லககூடிய நிர்வாக ஸபை மெம்பர், இங்கிலாந்திலே பாரிஸ்டர் பரீக்ஷைதேறினவராகவே இருந்துவரவேண்டும் என்கிற நிபந்தனை ஏற்பட்டிருந்தது. இந்நிபந்தனை வெகுகாலத்திற்குமுன் பார்லிமெண்டு ஸபையில் ஏற்படுத்தப்பட்ட இந்திய ஆக்டில் உள்ளது. இந்த நிபந்தனையால், இந்தியாவில் உள்ள வெகு கியாதிபெற்ற வக்கீல்களும், இங்கிலாந்தில் போய் பாரிஸ்டர் பரீக்ஷை கொடுக்காததின் நிமித்தம் சட்ட மெம்பராக, கவர்னர்ஜெனரல் நிர்வாக ஸபையில் வரக்கூடாமலிருந்

தது. இந்நூதன ஆக்டினால் இந்த நிபந்தனை நீக்கப்பட்டு, இந்தியாவிலுள்ள யாதாமொரு ஹைக்கோர்ட்டு வக்கீலும்கூட இனிமேல், இந்தியா கவர்ன்மெண்டு நிர்வாகஸபையில் சட்டமெம்பராய் வர ஸ்வதந்திரம் ஏற்பட்டுவிட்டது.

ஆகவே, கவர்னர்ஜெனரல் நிர்வாகஸபையில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற சீர்திருத்தங்களை இத்தோடே சொல்லிவிட்டு, இந்தியா கவர்ன்மெண்டு சட்டநிர்மாணஸபையில் ஏற்பட்டிருக்கும் சீர்திருத்தங்களைப்பற்றிக் கூறுவேன்.

இச்சட்டஸபையில் 68 மெம்பர்கள் தற்காலத்தில் உண்டு. அவ்வறுபத்தெட்டு மெம்பரில் ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களே பெரும்பாலர். ஆகவே அவர்களே மெஜாரட்டியில் இருக்கிறவர்கள். உத்தியோக முறை இல்லாமல் மைனாரட்டியாயிருப்பவர்களிலும், சிலர், ஸர்க்காராலே நேமிக்கப்படுபவர். மற்றும் சிலர், நிலத்திற்குடையவர்கள், மகம்மதியர், வியாபாரிகள், கைத்தொழிலாளர், மாகாணச் சட்டஸபைகளிலிருந்து வரும் உத்தியோகஸ்தரல்லாதவர்கள், ஆகிய பலவிதஜன ஸமூகங்களாலே தேர்ந்தெடுக்கப்பெற்று ஸர்க்காராலேயே நேமிக்கப்பட்டவர்கள்.

நூதன ஆக்டினாலே, இந்தியா கவர்ன்மெண்டைப் பொறுத்த சட்டஸம்பந்தமான காரியங்கள் இருவித ஸபையாராலே, இனிமேல் நடத்தப்படும். அதாவது, இவ்விரு ஸபையாருமாய்ச் சேர்ந்து அங்கீகரிக்கப்படும் சட்டங்களே, இனிமேல், இந்தியா முழுவதும் சட்டமாக அமுலுக்கு வரக்கூடியவை என்று கருதவேண்டும். இவ்விரு ஸபைகளில் ஒன்றுக்குப் பெயர் "கௌன்ஸில் ஆப் ஸ்டேட்". மற்றொன்று "லெஜிஸ்லேடிவ் அஸ்ஸெம்பளி" இவ்விரு ஸபைகளும், இந்தியாவிற்கு பார்லிமெண்டு சபைகளாகும்.

இங்கிலாந்திலிருக்கிற இரண்டு பார்லிமெண்டு மகாஸபைகளுக்குமுள்ள முக்கிய அம்சங்கள், இவ்விந்தியா ஸபைகளுக்குத் தற்காலத்தில் இராவிடினும், நாளடைவில் இங்கிலாந்து பார்லிமெண்டு ஸபைகளைப்போலவே, இவைகளும் அபிவிர்த்திக்கு வரவேண்டிய மூலாதார அம்சங்கள் ஏற்பட்டுள்ளன. இங்கிலாந்தில் "ஹௌஸ் ஆப் லார்ட்ஸ்" என்னும் சபைபோல் உள்ளது இந்தியாவில ஏற்படுத்தபபட்ட "கௌன்ஸில் ஆப் ஸ்டேட்" இங்கிலாந்தில் ஹௌஸ் ஆப் காம்மன்ஸ் என்பதுபோல் இந்தியாவில் இனி விளங்கப்போவது "லெஜிஸ்லேடிவ் அஸ்ஸெம்பளி" ஆகவே ஆங்கிலேய அரசாக்ஷி இங்கிலாந்தில பார்லிமெண்டு மகா ஸபையாரால் நடத்தப்படுவதுபோல, இந்தியாவிலும் இனிமேல் அவ்விதமான பார்லிமெண்டு அரசாக்ஷியே நடந்தேற மூலாதாரமாயுள்ள வழி ஏற்பட்டுவிட்டது.

"லெஜிஸ்லேடிவ் அஸ்ஸெம்பளி"யில், இனி 140 மெம்பர்கள் இருப்பர். அவர்கள், ஸர்க்காராலே நியமிக்கப்பட்டோ, அல்லது ஜனங்களாலே தேர்ந்தெடுக்கப்பட்டோ, மெம்பராக வரக்கூடியவர்கள். எங்ஙனம் ஸர்க்கார் நேமிப்பது என்பதைக்குறித்தும்,

எங்ஙனம் ஜனங்கள் தேர்ந்தெடுப்பது என்பதைக்குறித்தும், பிரத்தியேகமாய் ஆக்டின்பிரகாரம் விதிகள் ஏற்படுத்தப்பட்டு உண்டு. அவ்விதிகளின்படி ஜனங்களால், லெஜிஸ்லெடிவ் அஸெம்பளிக்கு மெம்பராகத் தேர்ந்தெடுக்கப்படுபவர் 100 ஆகும்.

இதுவரையில் இந்தியா கவர்ன்மெண்டுச் சட்ட சபைக்கு வரும் மெம்பர்கள் ஜனங்களாலேயே நேரிடத் தேர்ந்தெடுக்கப்பட்டவரல்லர். ஜனங்கள் முதல் முதலில் தங்கள் 'வோட்' மூலமாய் சில நபர்களை ஸமூகங்களுக்கு மெம்பர்களாய்த் தேர்ந்தெடுப்பதும், அவ்விதமான பல ஸமூகங்களிலுள்ள மெம்பர்களே சட்டஸபைக்கு மெம்பர்களாகச் சிலரைத் தேர்ந்தெடுப்பதும் இதுவரையில் வழக்கம். நூதன ஆக்டின்படி இவ்வழக்கம் அடியோடு மாறிப்போய், ஜனங்களே நேராக, இந்திய லெஜிஸ்லெடிவ் அஸெம்பளிக்கு மெம்பராகத் தேர்ந்தெடுக்கும் உரிமை கிடைத்திருக்கிறது. மேலும் இந்த ஸபைக்கு 140 பேருக்குமேல் அதிகமாக மெம்பர்கள் இருக்கலாம் என்றும், நூதன ஆக்டினால் ஏற்பட்டிருக்கிறது. அங்ஙனம் 140 மெம்பர்களுக்குமேல் அதிகமாகும்பொழுது, ஜனங்களாலே தேர்ந்தெடுக்கப்படும் மெம்பர்கள், மொத்தம் 140-க்கு 100 என்கிற வீதத்தைப்போலவே இருந்து வரவேண்டும். அதாவது மொத்தம் 7 மெம்பர்களாகில், ஐந்துபேர்கள் ஜனங்களாலே தேர்ந்தெடுக்கப்பெற்றவராயிருக்கவேண்டும் என்பது வீதச்சாரக்கணக்காகும். அப்பொழுதும்கூட லெஜிஸ்லேடிவ் அஸெம்பளியிலுள்ள மொத்தம் மெம்பர்களில், மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாமல் ஸர்க்கார் உத்தியோகத்தினர் அல்லாத மெம்பர்களே இருந்துவரவேண்டும் என்றும் நூதன ஆக்டினால் ஏற்பட்டிருக்கிறது.

ஆனதுபற்றி இந்திய லெஜிஸ்லெடிவ் அஸெம்பளியில் ஜனங்களாலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பெரும்பான்மையராகி, நிராக்ஷேபணையாய் மெஜாரட்டியிலிருந்து வருவதுமன்றி, மொத்தம் ஏழு மெம்பர்களில் ஐந்து பேர் ஜனங்களாலே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்கிற கணக்குக்கு உட்பட்டு இருக்கவேண்டும்.

ஆகவே, இந்தியா கவர்ன்மெண்டு சட்ட நிர்மாணஸபையிலும் கூட உத்தியோக முறைமையில் இருக்கும் மெம்பர்கள் மேலிட்டு இதுவரையில் மெஜாரட்டியாயிருந்தது, நூதன ஆக்டின்படி அடியோடே மாறுபட்டுவிட்டது என்பது விளங்கலாகும்.

இதுவுமன்றி, இந்திய சட்டஸபைக்கு இதுவரையில் வைஸிராய் அக்கிராஸனாதிபதியாய் இருந்துவரும் அதிகாரமும் எடுபட்டுப்போய், நூதன ஆக்டால், இந்திய லெஜிஸ்லெடிவ் அஸெம்பளியில், இது முதற்கொண்டு நான்கு வருஷம்வரையில், வைஸிராயால் நேமிக்கப்படும் வேறொருவர் அக்கிராஸனாதிபதியாக வருவார். அந்நான்கு வருடங்களானபின், அவ்வஸ்ஸெம்பளியார் தாங்களே ஒருவரை அக்கிராஸனாதிபதியாய்த் தேர்ந்தெடுத்துக்கொள்ள அதிகாரமும் கிடைத்திருக்கிறது. ஆனால், அங்ஙனம் தேர்ந்து எடுத்து நேமிக்கப்படும் அக்கிராஸனாதிபதியை, வைஸிராயானவர் அங்கீகாரம் செய்யவேண்டும் என்கிற ஒரு நிபந்தனை மாத்திரம் உண்டு.

'கௌன்ஸில் ஆப் ஸ்டேட்' என்னும் ஸபையைக்குறித்து, இப்பொழுது நோக்குங்கால், அது 60 மெம்பர்கள் உள்ளதாய் இருப்பது. அம்மெம்பர்கள், ஜனங்களாலே தேர்ந்தெடுக்கப்பட்டாவது, ஸர்க்காராலே நேமிக்கப்பட்டாவது வருபவர்கள். அங்ஙனம் தேர்ந்தெடுப்பதற்கும், நேமிப்பதற்கும் உள்ள சட்டவிதிகள் பிரத்தியேகமாய் உண்டு. அவ்விதிகளை அனுஷ்டித்துத்தான் நடக்கவேண்டும். இந்த அறுபது மெம்பர்களில் ஸர்க்கார் உத்தியோகஸ்தர்கள் 20 நபருக்கு மேற்படாமல் இருந்துவரவேண்டும். இந்த மகா ஸபை இங்கிலாந்திலுள்ள 'ஹௌஸ் ஆப் லார்டுஸ்' என்னும் ஸபையின் பதவி உள்ளது. இதில் பெரும்பான்மையாய் மெஜாரட்டியிலிருக்கக்கூடிய மெம்பர்கள் ஸர்க்கார் உத்தியோகஸ்தினர் அல்லாதவர்களே. ஆகிலும் இவர்கள் ஜனங்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கவேண்டும் என்கிற நியதி கிடையாது. 'ஹௌஸ் ஆப் லார்டுஸ்' ஸபைக்கும் "கௌன்ஸில் ஆப் ஸ்டேட்" ஸபைக்கும் நாம் கவனிக்கத்தக்க ஒரு விசேஷ வித்தியாஸம் உண்டு. 'ஹௌஸ் ஆப் லார்டுஸ்' என்பதைவிட ஒரு விஷயத்தில் இது சிலாக்கியமானது என்றே எண்ணவேண்டும். எப்படியெனில்:

இங்கிலாந்தில் ராஜ்ஜியத்தை ஸூத்திரக்கயிறுபோட்டு ஆளுபவர் பிரதானமந்திரியாகும். அம்மந்திரியின் சிபார்சின்பேரில் ஆங்கில மன்னர், சிலரை 'பீர்' (பீர் = பிரபு) ஆக நேமிக்கக்கூடும். அங்ஙனம் நேமிக்கப்பட்ட ஆங்கிலேய பிரபுக்களே இங்கிலாந்தில் ஹௌஸ் ஆப் லார்ட்ஸ் மகாஸபையில் மெம்பர்களாயிருப்பவர்-அதாவது ஹௌஸ் ஆப் லார்ட்ஸ் ஸபையார், வாஸ்தவத்தில் ஆங்கிலதுரைத்தனத்தாராலேயே நேமிக்கப்பட்டவர்கள்தான். அவர்களை ஜனங்கள் தேர்ந்தெடுப்பது என்பது ஒரு நாளும் இல்லை. ஜனங்கள் ஹௌஸ் ஆப் லார்ட்ஸ் ஸபைக்கு மெம்பர்களைத் தேர்ந்தெடுத்தல் இதுவரையில் இல்லவே இல்லை. இது இப்படியிருக்க, நூதன ஆக்டால் இந்தியா கௌன்ஸில் ஆப் ஸ்டேட் ஸபைக்கு மெம்பர்களை, ஜனங்கள் தேர்ந்தெடுக்கும்படி விதி உண்டு. இப்படி ஆரம்பத்திலேயே ஏற்படுவது ராஜ்ஜியத்திற்கு எவ்வளவு நன்மை! மேலும் ஆங்கிலநாட்டு ஹௌஸ் ஆப் லார்ட்ஸ் ஸபையை, அநேகமாய் வம்சபாரம்பரியமாய்வரும் மெம்பர்களுடைய ஸபை என்றே சொல்லவேண்டும். ஏனெனில் தகப்பன் லார்டாயிருந்து செத்துப்போனால், அவன் பிள்ளை லார்டாக வருவது வம்ச பாரம்பரியமாம். ஆகவே, இங்ஙனம்தான் ஹௌஸ் ஆப் லார்ட்ஸில் மெம்பர்களாய் அநேகர் இருந்துவருவது. இந்தியாவிலோ அப்படியன்று. வம்ச பாரம்பரியமாய் மெம்பர்கள் கௌன்ஸில் ஆப் ஸ்டேட்டுக்கு வருவது முடியாதகாரியம். ஸர்க்காரால் நியமிக்கப்பட்டாவது, அல்லது ஜனஸமூகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டாவதுதான் இந்த கௌன்ஸில் ஆப் ஸ்டேட்டுக்கு மெம்பர்கள் வரக்கூடுமே தவிர, வேறு வகையாய் மெம்பராதல் முடியாதவிஷயம்-தவிரவும், 'லெஜிஸ்லெடிவ் அஸ்ஸெம்பளி" க்கு மெம்பர்கள் ஜனங்களாலே நேரிடவே, வோட் மூலமாய்த் தேர்ந்தெடுக்கப்படுவது போலவே, கௌன்ஸில் ஆப் ஸ்டேட்டுக்கும் மெம்பர்கள், ஜனங்களாலேயே, நேரிடவே

தேர்ந்தெடுக்கப்படுவர்களே அல்லாமல், ஜனங்களுக்காக வேற்றுவனால் தேர்ந்தெடுக்கப்பட்டு மெம்பர்களாக வரப்போவதில்லை.

இந்த கௌன்ஸில் ஆப் ஸ்டேட்டுக்கு 'அப்பர் சேம்பர்' என்று பெயர் வழங்கும். அதாவது லெஜிஸ்லெடிவ் அஸெம்பளிக்கு மேற்பட்ட பதவியுள்ள ஸபை என்று ஆகும். நூதன இந்திய ஆக்டினாலே, இந்த 'கௌன்ஸில் ஆப் ஸ்டேட்' என்கிற ஸபையிலும் வைஸிராய்க்கு, அக்கிராஸனாதிபத்தியம் கிடையாது. ஆனால் அந்த மகாஸபையிலிருக்கும் மெம்பர்களுக்குள் ஒருவரை அச்சபைக்கு அக்கிராஸனாதிபதியாய் நியமிக்க வைஸிராய்க்கு அதிகாரம் உண்டு.

மேலும், இந்தியா கவர்ன்மெண்டிலுள்ள மேற்சொல்லிய இரு ஸபை மெம்பர்களுக்கும், நூதன ஆக்டின்படி, இந்திய ராஜ்ஜியத்தின் மொத்தம் வரவுசெலவு கணக்கைப் பரிசோதிக்கவும், அதைப் பற்றி ஆக்ஷேபணை ஸமாதானம் செய்யவும் சுதந்திரம் உண்டு. இதுமாத்திரமல்லாமல், லெஜிஸ்லெடிவ் அஸ்ஸெம்பளி மெம்பர்களுக்கு, இந்தியா கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்படும் ராஜ்ஜிய வரவுசெலவு விஷயத்தை தங்கள் வோட மூலமாய், அங்கீகரிக்கவாவது, அல்லது அந்த வரவுசெலவுக் கணக்கில் யாதாமொரு பகுதியை நிராகரித்துவிடவாவது அதிகாரமுண்டு. இந்த வரவுசெலவு கணக்கிற்கு 'பட்ஜெட்' என்று பெயர். இதுவரையிலும் இந்தியா கவர்ன்மெண்டிலுள்ள சட்டஸபையாருக்கு இம்மாதிரி 'பட்ஜட்டை' ஒப்புக்கொள்ளவும், தள்ளிவிடவும் அதிகாரம் கிடையாது. நூதன ஆக்டால் இந்தப் புது அதிகாரம லெஜிஸ்லேடிவ் அஸெம்பளியாருக்குக் கிடைத்திருக்கிறது. இது இந்தியர்களுக்கு எவ்வளவு முக்கியமும், அநுகூலமும் ஆனது. என்பது யாவருக்கும் நன்றாய்த்தெரியவரும். இங்கிலாந்திலும், "ஹௌஸ் ஆப் காமன்ஸ்" என்கிற ஸபையார் தங்கள் இஷ்டப்படிக்கு இங்கிலாந்து ஸம்பந்தமான வரவுசெலவு ஜாப்தாவை ஏற்படுத்தவேண்டுமே அல்லாது வேறு விதமாய் அங்கே ஏற்பட இடமில்லை. இங்கிலாந்தின் பணப்பெட்டியே ஹௌஸ் ஆப் காமன்ஸ் கையில்தான் இருக்கிறது என்று சொல்லிவிடலாம். அதுபோலவே, இந்தியாவில் நூதனச் சட்டத்தின்படி இந்திய லெஜிஸ்லெடிவ் அஸ்ஸெம்பளிக்கும் ராஜ்ஜியத்திற்கு வேண்டிய வரவுசெலவு திட்ட ஜாப்தாவைப் பரிசீலனை பண்ணித் தள்ளவோ, அங்கீகரிக்கவோ, உரிமை புதிதாய் வாய்ந்திருப்பதால், இந்த ஸபையை இங்கிலீஷ் "ஹௌஸ் ஆப் காமன்ஸ்" ஸபை எனலாம். ஆனால், இந்திய ராஜ்ஜிய ஸம்பந்தமான எல்லாவித வரவுசெலவு கணக்குகளும இந்த லெஜிஸ்லெடிவ் அஸ்ஸெம்பளியாருக்குள் அடக்கம் என்று எண்ணிவிடக்கூடாது. ராஜாங்கத்தில் சில விஷயங்களைப்பற்றிய வரவுசெலவுகளைப்பற்றி பேசக்கூட இந்த ஸபையாருக்கு அதிகாரம் கிடையாது. ஆகவே, அவ்வித வரவுசெலவுகளைப்பற்றி, சரி சரியில்லை, என்று வோட்டுமூலமாய் அங்கீகாரம் செய்யவும், நிராகரிக்கவும் அதிகாரமும் இல்லை. "எதற்காக சில வரவுசெலவுக் கணக்குகளைப்பற்றி இந்தியா கவர்ன்மெண்டிலுள்ள இருவித ஸபைக்கும் ஆலோசனை செய்யக்கூட உரிமை ஏற்படுத்தாமல் நூதன ஆக்டால் விலக்கப்பட்டிருக்கிறது" என்று கேட்கின், இவ்வரவுசெலவுக் கணக்குகளையும், இவ்விரு ஸபையாரும் பரிசீலனை

செய்து அங்கீகரிக்கவும், தள்ளிவிடவும் அச்சபையார்களுக்கு அதிகாரம் கொடுத்துவிட்டால், இந்திய அரசாக்ஷி தற்காலத்தில் இருக்கும் ஸ்திதியை உத்தேசித்து இச்சபையார்கள் அனுவசியமாய்ப் பிரவர்த்திக்க இடமுண்டாகி, ராஜாங்கத்திற்கு ஆனர்த்தம் ஸம்பவிக்கும் என்கிற பயத்துடன், சில வரவுசெலவு கணக்குகள் இச்சபையாரைப் பார்க்கவொட்டாமல் விலக்கப்பட்டிருக்கின்றன. அவ்வித வரவுசெலவு கணக்குகளும் இதர இந்திய கவர்ன்மெண்டு வரவுசெலவு கணக்குகள் போன்றவையல்ல. ஆனால் லெஜிஸ்லெடிவ் அஸ்ஸெம்பளியாருக்கு இதர வரவுசெலவுகளை அங்கீகரிக்கவும் நிராகரித்துவிடவும், ஏற்படுத்தியிருக்கும் உரிமை மிக மேலானது. இவ்வித வரவுசெலவு கணக்குகளும் இந்தியர்களுக்குத் தினசரி எப்போதும் நடந்துவருபவைகள். இவைகளே இந்தியர்களுக்கும் பிரதானம். இக்கணக்குகளைப் பரிசோதித்துப்பார்த்து ஒப்புக்கொள்ள அதிகாரம் நூதன ஆக்டால் கிடைத்திருப்பதும் மிக்க நலம். ஏனென்றால், இந்திய அரசாக்ஷியில் இப்படி வரவுசெலவுக் கணக்கைப்பார்த்து, தள்ளவும் ஒப்புக்கொள்ளவும் வந்திருக்கும் அதிகாரம் முதல்முதலாய் இப்பொழுதுதான் கிடைத்திருக்கிறது.

ஆயினும், ராஜ்ஜிய சம்ரக்ஷணத்தையே முன்னேக்காகக் கருதி, மாகாணச் சட்டசபையார் செய்யும் காரியாகாரியங்களை நிறைவேறப் பண்ணமல் தடைபண்ணி வைத்துவிட மாகாணத் தலைவராகிய கவர்னருக்கு எங்ஙனம் ஒரு அதிகாரம் நூதன ஆக்டினல் கொடுபட்டிருக்கிறதோ, அங்ஙனமே, இந்தியா முழுமைக்கும் அதிபதியாகிய கவர்னர்ஜெனரல் அவர்களுக்கு, இந்தியா கவர்ன்மெண்டைச் சேர்ந்த, மேற்சொல்லிய இரண்டு சபையாராலும் அங்கீகரிக்கப் பெற்றுள்ள காரியா காரியங்கள் எப்போதாகிலும் ராஜ்ஜியத்திற்குப் பிரதிகூலம் என்றும், அவைகளால் அநர்த்தம் நேரிடும் என்றும் தோன்றினல், அவர், அவ்விரு சபையாராலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் அக்காரியங்களை அமுலுக்குவராமல் தடைசெய்ய, இந்திய நூதன ஆக்டினல் அதிகாரம் அவருககுக் கொடுபட்டிருக்கிறது. இவ்வித அதிகாரம் அவருக்குக் கொடுத்திருப்பதற்குக் காரணம், கீழ் ஏழாவது அத்தியாயத்தின் முடிவில் கூறியுள்ளபடி, கவர்னருக்குள்ள அதிகாரத்தின் அவசியத்தையே ஒத்தது. அவ்வித அதிகாரம் கவர்னர்ஜெனரல் அவர்களுக்குக் கொடுத்திருப்பது, கௌன்ஸில் ஆப் ஸ்டேட்டும், லெஜிஸ்லேடிவ் அஸ்ஸெம்பளியும் அத்துமீறி மைனரட்டியாயிருக்கும் பிரஜைகளுக்கு கஷ்டம் உண்டாக்குவதைத் தடுப்பதற்கு ஒரு பாதுகாப்பாகி, ராஜ்ஜிய பரிபாலனம் சரிவர நடந்தேறவேண்டும் என்பதை உத்தேசித்துத்தான்.

9-ம் அத்தியாயம்.

இந்தியா ஸிக்கிரடேரி ஆப் ஸ்டேட்டும், அவர் ஆலோசனை சபையும்.

இந்திய அரசாக்ஷியில் இந்தியா கவர்ன்மெண்டுக்கு மேல் அந்தஸ்தியுள்ளதும், இந்திய கவர்ன்மெண்டை அடக்கியாளுவதுமான உத்தியோகம், இந்திய ஸிக்கிரடெரி ஆப் ஸ்டேட் என்பவரது. அவர், இந்திய அரசாக்ஷியைப்பற்றி பார்லிமெண்டு மகாசபையாருக்கு உத்தரவாதமாய் நிற்பவர். அப்பார்லிமெண்டு சபையே, இந்த ஸிக்கிரிடெரி ஆப் ஸ்டேட் மூலமாய் இந்திய கவர்ன்மெண்டை அடக்கி ஆளுவது. மாக்ஷிமைதங்கிய நமது சக்கிரவர்த்தியாரின் ராஜ்ஜியமாகிய இங்கிலாந்திலே, எந்தெந்த காலத்தில் எந்த எந்த கக்ஷியார் ஆதிபத்தியத்திலிருக்கிறாரோ, அந்தந்த காலத்தில் அக்கட்சியாரைச் சேர்ந்த ஒருவரையே இந்தியாவிற்கும் ஸிக்கிரடெரி ஆப் ஸ்டேட்டாகத் தேர்ந்தெடுத்து நியமிப்பது வழக்கம்.

"இந்திய கௌன்ஸில்" என்று பேர்பெறும் ஒரு சபையும் உண்டு. அச்சபை அவருக்கு இந்தியா விஷயமாய் ஆலோசனை சொல்லுவதற்கு ஏற்பட்டது. ஸிக்கிரடெரி ஆப் ஸ்டேட்டுக்கு ஆபீஸ் இங்கிலாந்திலே. அதற்கு இந்தியா ஆபீஸ் என்று பெயர். இவருடைய சம்பளமும், இவருடைய ஆலோசனை சபையாரின் சம்பளமும், இன்னம் இந்தியா ஆபீஸ் சம்பந்தமாயுள்ள எல்லாச் செலவும், இது வரையிலும், இந்தியாவிலிருந்தே கொடுபட்டு வந்தது. இவ்விதமான செலவு அநீதி என்று இந்தியப் பிரமுகர்கள் சொல்லியிருக்கின்றனர். இந்திய நாஷனல் காங்கிரஸ் சபையும், அது ஏற்பட்ட 1885-ம் வருஷம் முதல் இத்தனை வருஷங்களாய், அம்மாதிரி இந்தியா பணத்தைச் செலவிடுதல் பிசகு என்று முறையிட்டுவருகின்றது. ஏனெனில், இங்கிலீஷ் ராஜாங்கத்திற்கு, இந்தியாவைப்போல, 'காலனி' என்று வழங்கும் அநேகம், ஆங்கிலேயர் புதிதாய்க் குடியேறின தேசங்கள் இருக்கின்றன. அவ்வித காலனிகளுக்கு அதிபதியாய், இந்திய ஸிககிரடெரி ஆப் ஸ்டேட் போலவே உத்தியோகம் வகிக்கும் ஒருவர் இங்கிலாந்தில் இருக்கிறார். அவர்தான் அக்காலனிகளின் ராஜாங்க விஷயங்களை எடுத்து, பார்லிமெண்டாருக்கு, இந்திய ஸிக்கிரடரி ஆப் ஸ்டேட் இந்தியாவைப்பற்றிச் சொல்லுவதை போலச் சொல்லுகிறவர். அப்பேர்ப்பட்ட காலனிகளுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஸிக்கிரடெரிக்கும், அவர் ஆபீஸ் ஸிப்பந்திகளுக்கும் உள்ள எல்லாவிதச செலவுகள், அக்காலனிகளால் கொடுபடாமல், இங்கிலாந்திலுள்ளவர்களின் செலவாக எண்ணப்பட்டு, பிரிட்டிஷ் ராஜாங்கச் செலவிலேயே கணக்குக் காட்டப்பட்டுவருகிறது. ஆகையினாலே, இந்திய ஸிக்கிரடெரி ஆப் ஸ்டேட்டின் ஆபீஸ் சம்பந்தமாயுள்ள செலவெல்லாம், இங்கிலீஷ் ராஜாங்கத்தார் பொறுத்துக்கொள்ளாமல், இந்தியர் செலவில் தள்ளுவது அக்கிரமம் என்று நாஷனல் காங்கிரஸ் முறையிட்டுக்கொண்டுவருகிறது.

இவ்விதமான அநீதியை இந்திய நூதன ஆக்ட்டு தீர்க்கலாயிற்று. ஸிக்கிரடெரி ஆப் ஸ்டேட்டு உத்தியோகம் வகிப்பவருக்கு வருஷச்சம்பளம் 5,000 பவன். இது தவிர, இவருக்கு அடுத்தபடி உத்தியோகத்திலுள்ள இந்தியா அண்டர் ஸிக்கிரடெரிக்குள்ள சம்பளமும், இவர்கள் ஆபீஸுக்கு உண்டாகும் சகல செலவுகளும் இனிமேல் இந்தியர்கள் தலையில் போடப்பட்டுவராமல், இங்கிலீஷ் ராஜாங்கத்தாரே, தங்கள் பொக்கிஷத்திலிருந்து கொடுக்கப்போகின்றனர்.

ஆனதுபற்றி, இவ்வளவு செலவு இனிமேல் குறைந்துபோவது இந்திய ராஜ்ஜியத்திற்கு வருஷா வருஷம் வெகுலாபகரமல்லவா?

மேலும், 1908-ம் வருஷம் வரையில், இந்திய ஸிக்கிரடெரி ஆப் ஸ்டேட்டின் சபையாரில் ஒரு மெம்பர்கூட இந்தியராக இருந்ததே இல்லை. அதிலுள்ள எல்லா மெம்பர்களும் ஆங்கில உத்தியோகஸ்தர்களுமாவது, அல்லது இந்தியாவில் வேலையாயிருந்து பென்ஷன்வாங்கிக் கொண்டிருக்கும் ஆங்கிலேயர்களுமாவது தான் இருந்தவர்கள். 1908-ம் வருஷத்தில் இரண்டு இந்தியர்கள், அந்த சபைக்கு மெம்பராக நேமிக்கப்பட்டனர். அவ்விருவருள் ஒருவர் ஹிந்துமதத்தினர், மற்றவர் மகம்மதியர். 1917-ம் வருஷத்தில் அதே சபைக்கு மூன்று இந்தியர்கள் மெம்பர்களாய் நேமிக்கப்பட்டனர்.

1919-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் ஸிக்கிரடெரி ஆப் ஸ்டேட் செய்த ஜகப்பிரஸித்தமான விளம்பரத்தின் காரணமாய், ஆங்கிலேய பார்லிமெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட "ஜாயிண்டு பார்லிமெண்டு கம்மிட்டியாரும்" இந்திய ஸிக்கிரடெரி ஆப் ஸ்டேட்டின் ஆலோசனை சபையில் இந்திய மெம்பர்களை அதிகப்படுத்திக் கொண்டேவரவேண்டும் என்று சிபார்சு செய்திருக்கின்றனர். அப்பேர்ப்பட்ட சிபார்சை அமுலுக்குக் கொண்டுவரும் பொருட்டு, இந்திய ராஜாங்க காரியங்களில் ஆலோசனை சொல்லும்வண்ணம் ஸிக்கிரடெரி ஆப் ஸ்டேட் ஆலோசனை சபையில் மேற்சொல்லிய மூன்று இந்தியர்களுக்குமேல் அதிகமாய் இந்தியர்கள் மெம்பராக இனிமேல் நியமிக்கப்பட்டு வருவார்கள். இவ்விந்திய, ஆலோசனை சபையிலுள்ள இந்திய மெம்பர்களுக்கு, ஆங்கில நாட்டார், தங்கள் பொக்கிஷத்திலிருந்தே சம்பளம் வருஷாவருஷம் கொடுப்பதுமன்றி, அவர்கள் இந்தியாவைவிட்டு வெகுதூரம் சென்று, ஆலோசனை சபை மெம்பராக இங்கிலாந்தில், தங்கியிருப்பதினாலுண்டாகும் செலவுக்காக, வருஷாவருஷம் 600 பவுன் படியும் ஒவ்வொருவருக்கும் ஆங்கில நாட்டுக் கணக்கிலேயே இனி கொடுபட்டு வரப்போகிறது.

தவிரவும், இந்தியா கவர்ன்மெண்டாரும், இந்திய மாகாணங்களிலுள்ள சட்டசபைகளும் இந்திய விஷயமாய் ஒருங்குசேர்ந்து ஒத்துமையாய்ச் செய்யும் விஷயங்களில், ஸிக்கிரடரி ஆப் ஸ்டேட் இனிமேல் பிரவர்த்தித்து தன் அதிகாரத்தைச் செலுத்தப்போவதில்லை. எப்பொழுதாகிலும் இந்தியா கவர்ன்மெண்டாரும் சட்டநிர்மாண சபையாரும் தம்மில் ஒற்றுமையின்றி வெவ்வேறு அபிப்பிராயம்கொள்ளும் விஷயங்களில்தான் இனிமேல் ஸிக்கிரடெரி ஆப் ஸ்டேட் பிரவர்த்திப்பர்.

இவ்விதமாய் சீர்திருத்தங்கள் ஏற்பட்டதின் பலனை, நன்கு தெரிந்துகொள்ள, இதுகாறும் ஸிக்கிரடெரி ஆப் ஸ்டேட் உத்தியோகம் நடத்திவந்ததைப்பற்றி நமக்கு என்ன அநுபவம் கிடைத்திருக்கிறது என்பதைக் கவனித்துப் பார்க்கவேண்டும். இந்தியாவிற்குப் பிரதிகூலமாயும், இந்தியா கவர்ன்மெண்டு அபிப்பிராயத்திற்கும் ஆக்ஷேபணைக்கும் விரோதமாயும், இந்தியர்கள் ஒருங்குசேர்ந்து கம்பீரமாய்ச் சொன்ன இந்திய மகாஜனங்களின் அபிப்பிராயத்திற்கு மாறுபாடாயும், ஸிக்கிரடெரி ஆப் ஸ்டேட் அநேகம் தடவைகளில் இந்திய ஆரசாக்ஷி விஷயங்களில அநாவசியமாய்ப் பிரவேசித்திருக்கின்றனர். உதாரணமாக, பருத்தித் தீர்வை விதித்தலிலும், வரவு செலவு கணக்கைப் பார்க்க ஸ்வதந்திரம், கொடுக்க இடம் கொடாமலிருத்தலிலும், சில யுத்தச் செலவுகளை அநியாயமாய் இந்தியாவின் கழுத்தில் கட்டினதிலும இந்தியர்கள் ஸிக்கிரடெரி ஆப் ஸ்டேட் செய்யும் காரியங்கள் அராஜகரம் என்றும் முறையிட்டதையும், இந்தியா கவர்ன்மெண்டார் அக்காரியங்களை செய்யக் கூடாது என்று மறுத்து உரைத்ததையும் கொஞ்சமேனும் லக்ஷியம் செய்யாமல், ஸிக்கிரடெரி ஆப் ஸ்டேட் அக்காரியங்களை நடத்தினர். இந்தியா ஸிக்கிரடெரி ஆப் ஸ்டேட் அவ்விதம் செய்ததைப்பார்த்து மனம்பொறாது, அக்காலத்தில் இந்தியாவிற்கு வைஸிராயாகஇருந்த நார்த்து புருக்கு என்னும் பிரபு, இந்திய ஸிக்கிரடெரி செய்யும் அக்கிரமத்தை வகித்துக்கொண்டு வைஸிராய் உத்தியோகம்செய்து வருவதைப் பார்க்கிலும், தன் உத்தியோகத்தை ராஜீனாமாகக் கொடுத்துவிடுவதே மேலானது என்று தீர்மானித்து, வைஸிராய் உத்தியோகத்தை ராஜினாமாகக் கொடுத்துவிட்டார்.

இனிமேல், நூதனச் சீர்திருத்தத்தால், மேற்சொல்லிய அக்கிரமங்களுக்கு இடமே இல்லை. இவ்வித காரியங்களைச் செய்ய இதுவரைக்கும் ஸிக்கிரடெரி ஆப் ஸ்டேட்டுக்கு இருந்த அதிகாரம், இனிமேல் குறைக்கப்பட்டிருக்கிறபடியாலும், இதுவும் தவிர ஜாயிண்டு பார்லிமெண்டு கம்மிட்டியாரும் நூதன் இந்திய ஆக்டைப் பற்றிப் பரியாலோசித்து ரிபோர்டு செய்யும்போது பண்ணின சிபார்சினாலும், இந்திய ஸிக்கிரடெரி ஆப் ஸ்டேட்டுக்கு ஆதிபத்தியம் குறைவுபட்டு, இந்திய ராஜாங்கத்தாரே, பணஸம்பந்தமான விஷயங்களில் தாங்களே சட்டங்கள், தங்களுக்கு அநுகூலமாய் உண்டாக்கிக்கொள்ள உரிமை ஏற்பட்டுவிட்டது. இந்தியா இனி இங்கிலாந்திற்கு தாழ்வடையாமல், தானும் ஒரு அங்கமாய் நின்று, இனி மேலான ஒரு நூதன பதவிபெற்று, இந்துதேச சரித்திரமும் சீரோங்கி விளங்கா நிற்கும்படி, ஜாயிண்டு பார்லிமெண்டு கம்மிட்டியார் செய்திருக்கிற சிபார்சுகள் என்னவென்றால்:—

"இந்தியாவின் வரவுசெலவு ஸம்பந்தமான காரியங்களையெல்லாம், இங்கிலாந்திலிருக்கும் இந்திய ஸிக்கிரடெரி ஆப் ஸ்டேட்டு, 'ஹ்வைட் ஹால்' என்னும் இடத்திலிருந்து, இங்கிலாந்தின் வியாபார அபிவிர்த்தி நிமித்தமாய் நடத்திவரவேண்டும் என்கிற ஒரு கட்சி உண்டு. அக்கட்சியை மேற்கொண்டு தப்பு அபிப்பிராயப்பட்டு இந்திய காரியங்களைப் பரிபாலித்து வருவது, இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்கும் இருந்துவரும் ஒற்றுமையைச் சிதைக்க இடமாய் முடிகிறது. இதைவிட வேறு கெடுதல் அவ்வளவு அநர்த்தம் விளைவிக்காது. அவ்வித கக்ஷியும், அக்கக்ஷியின் தப்பு அபிப்பிராய

மும், தற்காலத்தில் இங்கிலாந்தில் இருந்து வருகிறது என்பதற்கு ஸந்தேகமே இல்லை. இத்அபிப்பிராயத்தால் இனிமேலும் தீமை உண்டாகாமலிருக்கும்படி இடங்கொடாமலிருக்கவேண்டுமே என்பதும் ஸ்பஷ்டமாய்த்தெரியவருகிறது. ஐரோப்பாவில் ஜர்மானியரோடு நடந்த மகா யுத்தத்திற்கு இந்தியர்கள் போர் வீரர்களாய்ச் சென்று, அவர்கள் காட்டிய வீரபராக்கிரமம் முதலிய நற்குணங்களும், அவர்களுக்கு இருந்த ராஜபக்தி விசுவாஸமும் லண்டன்மாநகரில் நடந்த ஒரு பெரிய மந்திராலோசனை ஸபையில் கீழ் மூன்றும் அத்தியாயத்தில் காட்டியபடி விவரித்துச் சொல்லப்பட்டிருக்கிறதல்லவா? அந்த மந்திராலோசனை ஸபையிலே, இந்தியாவுக்கும், ஆங்கில அரசாக்ஷியைச் சேர்ந்த இதர பிரதேசங்களுக்கும ஒன்றுக்கொன்று இந்தியாவின் கால ஸ்திதியைப்பற்றிப் பேச இடமுண்டாகி, அப்பேச்சு வீண்பேச்சாய் முடிவதில் இந்தியாவிற்குப் பலனே இல்லை. இந்தியாவின் கால ஸ்திதியை முன்னுக்குக் கொண்டுவந்து வைப்பதற்கு அப்பேச்சுக்களை சட்டமாக்கிச் செலாவணிக்கு வரும்படி இந்தியாவிற்கு அதிகாரம் கொடுக்கவேண்டும், இந்தியாவின் தேவைக்குத்தக்கபடி இந்தியா ஸம்பந்தமான ஏற்றுமதி இறக்குமதி ஏற்பாடுகள் இந்தியா ஸௌகரியத்திற்காகச் செய்யும்படி இந்திய கவர்ன்மெண்டாருக்குப் பூராவாய் ஸ்வதந்திரம் கொடுத்துவிடவேண்டும். அப்படிசசெய்தால்தான் இங்கிலாந்திலிருந்து, இந்தியா கவர்ன்மெண்டிற்கு, வரவுசெலவு ஸம்பந்தமாய், ஏற்படும் நிர்ப்பந்தங்களைத் திருப்திகரமாய் பரிகரிகக இடமுண்டாகுமே தவிர, வேறுவிதமாய் பரிகாரம் செய்யமுடியாது. கிரேட் பிரெட்டன், ஆஸ்திரேலியா, நியூஸீலாந்து, கானடா, தென் ஆப்ரிக்கா முதலிய பிரதேசங்களில், தங்கள் தங்கள் ராஜ்ஜியத்திற்கு அனுகூலமாயுள்ள தீர்வை முதலான ஏற்பாடுகளை தாங்களே செய்துவா ஸ்வதந்திரம் ஏற்பட்டிருப்பதுபோல், இந்தியாவும் வியாபார விஷயமாயுள்ள ஏற்பாடுகளை, தனக்கு அனுகூலமாகும்படி சுயேச்சையாய்ச் செய்துகொள்ள இடமகொடுத்துவிடவேண்டுவது அத்தியாவசியகம் என்பது ஸ்பஷ்டமாய் விளங்கும்'' என்று பார்லிமெணடெரி கமமிட்டியார் தாராளமாய் தங்கள் ரிபோர்டில் சிபார்சு செய்திருக்கின்றனர். ஆகவே, அவ்வித சிபார்சினால், இந்தியாவுக்கு வந்திருக்கும் ஸ்வதந்திரம் மிகவும் நன்கு மதிக்கத்தகுந்ததுமன்றி, அந்த ஸவதந்திரத்தைச் சரியானபடி உபயோகித்தால், இந்தியாவிலுள்ள கைத்தொழில்கள் அபிவிர்த்தி அடைந்து இந்தியர்களும் அதிகமாய் முன்னுக்கு வந்து சுகமடைவார்கள்.

இந்திய ராஜாங்கவிஷயமாய் இந்திய ஸிக்கிரடெரி ஆப் ஸ்டேட் இங்கிலாந்திலுள்ள பார்லிமெண்டு மகா ஸபையாருக்கு உத்தரவாதம் சொல்லக்கடமைப்பட்டவர் என்று ஏற்கனவே எடுத்துக்காட்டியிருக்கிறேனாகையினாலே, இந்திய அரசாக்ஷியை அடக்கி ஆண்டு வருவது, கடைசிமுடிவில் இங்கிலாந்திலுள்ள பார்லிமெண்டு மகா ஸபை என்பதை நீங்கள் ஞாபகத்திலிருத்திக்கொள்ளவேண்டும். ஆகவே, இந்த பார்லிமெண்டாருக்கு இந்திய அரசாக்ஷி விஷயமாய் உள்ள அதிகாரம், நூதன இந்திய ஆக்டால், எங்ஙனம் மாறுபட்டிருக்கிறது என்பதை இப்பொழுது கவனிப்போம்.

இந்திய அரசாக்ஷி விஷயமாய், இங்கிலாந்திலுள்ள பார்லிமெண்டு மகா ஸபையே, எல்லாவற்றிற்கும் மேலான அதிகாரம் வகித்து வருவதாயினும், 'இந்திய சமாசாரங்களைப்பற்றி அச்சபை கவனிப்பதே இல்லை' என்பதும், 'இந்தியர்களுக்குள்ள குறைகளைத் தீர்க்க, அச்சபை தனக்குள்ள அதிகாரத்தைச் செலுத்தி, இந்திய அரசாக்ஷி விஷயமாய்ப் பிரவேசித்ததே இல்லை' என்பதும், வெகு நாளாக பார்லிமெண்டாரின் பேரில் குற்றம் சாட்டப்பட்டு வருகிறது. அதினாலேயே, பார்லிமெண்டில், இந்தியா விஷயமான பேச்சுக்கள் வரும்போது "அச்சபையிலுள்ள வெற்று பெஞ்சுகளுக்கு முன்னிலையில்தான் பேசவேண்டும்" என்கிற வார்த்தை பழமொழிபோல விளங்கலாயிற்று. அதாவது, இந்திய சமாச்சாரம் பார்லிமெண்டார் பரியாலோசனைக்கு வரும்போது, பார்லிமெண்டு மெம்பர்கள், 'இந்தியா விஷயங்களில் நமக்கு என்ன ஹக்கு' என்று எண்ணி, வெளியில் போய்விடுவது வழக்கமாம். இவ்விதம் ஹக்கு இல்லாதிருத்தல் சாதாரணமாய் மனிதர்களுக்கு ஸகஜம்தான். பிரிட்டிஷ் பார்லிமெண்டாருக்கு தங்கள் நாடாகிய இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, அயர்லாந்து விஷயங்களைப்பற்றிக் கவனிப்பதுதான் அவசியம். பார்லிமெண்டு மெம்பர்களில் அநேகருக்கு இந்தியா என்பதே தெரியாது. அவர்கள் இந்தியாவை வந்து பார்த்தவர் அல்லர். இந்தியாவும், இங்கிலாந்திலிருந்து வெகுதூரத்திலிருப்பதினாலே, பார்லிமெண்டு மெம்பர்களுக்கு இந்திய விஷயங்களைப்பற்றிக் கவனிக்க மனமிராமலிருந்து வருவதும், உலகத்தில் மனிதர்களுக்கு ஸகஜமானதுதான். ஆனதுபற்றி, இந்தியாவில் ஏதாகிலும் யுத்தமோ பெரிய கிளர்ச்சியோ, முதலான ஆபத்து வந்துவிட்டது என்றால்தான், பார்லிமெண்டு ஸபையாருக்கு இந்தியாவைப்பற்றி ஞாபகம்வர இடமுண்டாகுமே தவிர, வேறுவழியாய் அச்சபையாருக்கு இந்தியாவைப்பற்றிக் கவலை ஏற்பட இடமே கிடையாது.

இவ்விதம் வெகுகாலம் நடந்துவந்ததுபோய், இந்தியர்களுக்கு தற்காலத்தில் நூதனச் சீர்திருத்தத்தால் ஸ்வதந்திரங்கள் உண்டாயிருப்பதும், தாங்கள் ஸ்வயேச்சையாய் தங்கள் காரியங்களைப் பார்த்துவர இடம் கொடுக்கவேண்டும் என்று கோறிவருவதும், தங்கள் தேசத்தை பக்ஷபாதமின்றி, நியாயமாய்ப் பரிபாலித்துவரவேண்டும் என்று முறையிடுவதும் ஆகிய ஆங்கிலருக்குள்ள குணங்கள், அவ்வாங்கில நாட்டின் பார்லிமெண்டு மகா சபையாராலேதான் இந்தியர்களுக்குக் கிடைத்திருக்கிறது என்பதையும், அதற்காக இந்தியர்கள் அச்சபைக்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் தெரிந்துகொள்ளவேண்டும். 150 வருடங்களுக்கு மேலாக இந்தியா ஆங்கில அரசாக்ஷிக்குட்பட்டுவந்தாலும், 'இப்பொழுதுதானே, ஆங்கில பார்லிமெண்டார், இந்தியாவிற்கு ஸ்வராஜ்ஜியம் அளிக்க நினைத்து, அதை ஜனங்களுக்கு உத்தரவாதம் சொல்லும்படி ஏற்படுத்த யத்தனித்தது? அவ்வித ஸ்வராஜ்ஜியமும் ஒரு வாறு தானே கொடுபட்டிருக்கிறது' என்று ஜனங்கள் சொல்லிக்கொண்டு வருகிறார்களல்லவா? ஆங்கிலேயர்களுக்கே, இவ்விதமான ஸ்வராஜ்ஜியாதிபத்தியம் கிடைத்துவர, பிரிட்டிஷ் பார்லிமெண்டார் எத்தனை நூற்றாண்டு சிரமப்பட்டுவந்திருக்கின்றனர் என்ப

தையும், அவ்வித ராஜ்ஜியாதிபத்தியத்தின் விஷயங்கள் இங்கிலாந்தினுள்ள உள்நாட்டு ஜனங்களுக்கும் கூலிவேலைசெய்து பிழைக்கும் ஜனங்களுக்கும் தெரியவர எவ்வளவு நீண்டகாலம் பிடித்திருக்கிறது என்பதையும் நாம் சற்று நிதானித்துப் பார்க்கவேண்டும். உலகத்தில் பிராசீனமாயுள்ள ஜாதியார்களாயினும் நவீனமான ஜாதியார்களாயினும் வாஸ்தவமாய் சுயேச்சை என்பதையும், உத்தரவாதமாய் நிற்கப்படும் அரசாக்ஷி என்பதையும், ஆங்கில பார்லிமெண்டாரைப் போலும், ஆங்கில ஜனங்களைப்போலும், அபிவிர்த்திக்குக்கொண்டு வந்திருப்பது கிடையவே கிடையாது. ஸ்வயாதிபத்தியம் வேண்டுமென்றும், ஸ்வதந்திரங்கள் கைப்பற்றவேண்டுமென்றும், உலகத்தில் முதல் முதலாய் நிலை நாட்டியவர் ஆங்கிலரே. அங்ஙனம் தங்கள் ராஜ்ஜியத்திலேயே இவ்வுரிமைகளை ஆங்கிலர் நிலைநாட்டியது படிப்படியாயும், நிதானமாயுமாகத்தான். அவர்கள் முன்பின் வருவதைப் பரியாலோசனை செய்யாமல், திடீரென்று தங்கள் சௌக்கியத்திற்கு ராஜாங்க விஷயங்களில் மாறுதல்கள் ஏற்படுத்தினதே இல்லை. ஆகையினால் 'கிரேட்டு பிரிட்டன்' என்று இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, அயர்லாந்து தேசங்கள் சேர்ந்த ராஜ்ஜியத்தையே, உலகத்தில் பார்லிமெண்டு ராஜாங்கம் உண்டாக்கிய மூல மாதா என்று சரித்திரத்தில் வழங்கி வருகிறது. அதாவது, உலகத்தில் இதர தேசத்தவர்கள் ஆங்கில நாட்டவர் அரசாக்ஷியைப்பார்த்துப் பார்த்து, தங்கள் தேசங்களிலும், பார்லிமெண்டு அரசாக்ஷியை உண்டாக்கி இருக்கின்றனர். அங்ஙனமிருக்க, நாம் இப்பொழுது, நமக்குள்ள ஸ்வதந்திரங்களை நிறைவேற்றவொட்டாமல், அவைகளை பந்தப்படுத்தும்படியாய் அந்த ஆங்கில பார்லிமெண்டாரே சட்டம் ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்று குறைசொல்லிவருகிறோம். அவ்விதம் குறைகூறி, முறையிடுவது தப்பு என்பதில்லை. அது சரிதான். ஆயினும் ஆங்கில அரசாக்ஷியில் எப்போதாகிலும் ராஜீய விஷயங்கள் பின்னடைந்தால், அப்போதெல்லாம் முன்னுக்கு வரவேண்டிய காரியங்கள் ஒன்றன்பின் ஒன்றாய்ச் செய்யப்பட்டு, இந்தியாவும் ஸ்வராஜ்ஜிய ஸ்வதந்திரம் அடைந்து அபிவிர்த்திற்கு வர, இங்கிலாந்திலுள்ள பார்லிமெண்டு அரசாக்ஷியைப் போல, இந்தியாவிலும் அரசாக்ஷி ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் ஒருபோதும் மறக்கவேகூடாது. பிரிட்டிஷ் ராஜாங்கத்தார், இந்திய அரசாக்ஷியில் சில விஷயங்களில் இந்தியாவை ஓங்க ஒட்டாமல், அடக்கி அடக்கி பின்னுக்குக்கொண்டுவர ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள் என்று, அவ்வாங்கிலேய அரசாக்ஷியை நாம் கடினமாய்க் கண்டனம் செய்யும்போது, அவ்வரசாக்ஷியினாலேயே, நமக்கு என்னென்ன நன்மைகள் உண்டாகி, இந்தியா முன்னுக்கு வந்திருக்கிறது என்பதை எப்பொழுதும் நாம் மறக்கவேகூடாது. அவ்வரசாக்ஷி பின்னடைந்தாலும், முன்னோக்கத்தையே கருதிப் போவது என்பதை நாம் நினைத்துப்பார்க்கவேண்டும். நாம் பயபக்தியுடன் கொண்டாடும் கங்கா நதியையே, இதற்கு உதாரணமாய் எடுத்துப் பார்ப்போம். அந்நதி ஒரே ஒழுங்காய் ஒரு நேர்க்கோடுபோல ஓடுவதில்லையே! அது வளைந்து வளைந்துதானே ஓடுகிறது!! அந்நதி வளைந்து வளைந்து போவதைமாத்திரம் பார்த்தால், அது பின்னடைந்து, ஒருநாளும் சமுத்திர சங்கமாகாது

என்றுதானே நினைக்கும்படியாகும். அது வளைந்து பின்னடையும்போது நேரே ஒழுங்காய்ப்போய் சமுத்திர ராஜனைச் சேராதது போலக் காணப்படுவதை மாத்திரம் பார்த்து, நாம், "அந்நதி ஒருநாளும் சமுத்திரத்தோடு கலக்கவே கலக்காது, அது பின்னடைவேயுள்ளது" என்று அதன்பேரில் குற்றம்சாட்டி கோபித்துக்கொள்ளலாகுமோ!!! அந்நதி எப்படி வளைந்து வளைந்து பின்னடைபெற்றுப்போனாலும், அதன் ஓடும் வேகம் மாத்திரம் எப்பொழுதும் சமுத்திரமுகமாகத்தானே இருந்து வருகிறது. அங்ஙனம் சமுத்திரத்தை நோக்கி, நதியின் வேகத்தைச் செலுத்தக்கூடிய சக்தியாம்சங்கள், மெள்ள மெள்ள நிதானமாகத்தானே அந்நதியை முன்னோக்கியே தள்ளிச் செலுத்துகின்றன. அப்புண்ணியநதி அமெரிக்கையாய் சமுத்திரமுகம் நோக்கிச் செல்லுதல் நம் கண்ணுக்கு நன்றாய்ப் புலப்படுவதில்லை. அது வளைந்து போகும்போதெல்லாம் அதன் வேகமும், பின்னோட்டமும் வெளிப்படையாய் நமக்குத் தெரிகிறது. அந்தப் புண்ணிய மகாநதியாகிய கங்கையின் வேகத்தைப்போலவே, பிரிட்டிஷ் பார்லிமெண்டு சபையும் நடைபெற்று வருகிறது. "ராஜ்ஜியாதிபத்தியம் தப்பு மார்க்கத்தில் பிரவேசிக்கும் போல் காணப்படும்போதெல்லாம், ராஜ்ஜியத்திற்கு சீர்திருத்தமும், அபிவிர்த்தியும், ஜனங்களுக்கு ஸ்வதந்திரங்களும் கிடைத்துவிட ஆரம்பம் என்பதை, ஜனங்கள் ருஜுவாய் நம்ப வேண்டும் என்று ஹார்பர்டு ஸ்பென்ஸர் என்கிற வேதாந்தியும் எடுத்து உரைத்திருக்கின்றனர். சென்ற 150 வருஷகாலமாய் இந்திய அரசாக்ஷியின் சரித்திரத்தை ஒருதலைப்பக்ஷமாய் ஒரு கக்ஷியையே மேற்கொண்டு படியாமல், நிஷ்பக்ஷமாய், பதட்டமின்றி, நிதானமாய்க் கவலையோடு படித்தறிவதே நல்லது. ஈஸ்டு இந்திய வர்த்தக கம்பெனியார் இந்தியாவிற்கு வியாபார நிமித்தமாய் வந்த நாள் முதல் நாளது பரியந்தம் இந்தியா எங்ஙனம் முன்னேறி வந்துகொண்டே இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்வது அங்ஙனம் இந்திய சரித்திரம் படித்ததின் பலனாகும். அச்சரித்திரத்தினால், இந்தியாவாகிற நதி எப்பொழுதும் ஸ்வராஜ்ஜியம் அல்லது ஜனங்கள் உரிமைபெற்ற ராஜ்ஜியம் என்கிற சமுத்திரத்தை நாடியே எப்பொழுதும் சென்று வருகிறது என்று அறியக்கூடும். நதி பின்னடையும்போது ஜலத்தில் ஒரு கிளர்ச்சி உண்டாவதுபோல, இந்தியர்கள், இந்தியா ஸ்வராஜ்ஜியாதிபத்திய விஷயமாய்ப் பின்னடைகிறதைப் பார்த்து, கூக்குரலிட்டு கிளர்ச்சியுண்டாக்குவதும், ஆங்கில அரசாக்ஷியினாலேதான். இத்தியாதி காரணம்பற்றி பிரிட்டிஷ் பார்லிமெண்டு மகாசபையார் இந்தியா விஷயமாய்த் தாங்கள் வகித்துவந்த அதிகாரத்தைக் குறைத்துக்கொண்டு, இந்தியாவிலேயே, ஆங்கில பார்லிமெண்டுபோல, பார்லிமெண்டு அரசாக்ஷி நடைபெறும்படி முதல் முதலாய் இந்திய நூதன ஆக்டினால் இப்பொழுது சீர்திருத்தங்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

இந்தியாவிற்கு ஆங்கிலேய பார்லிமெண்டார் சொல்லியிருப்பதைச் சுருக்கிச் சொல்லுமிடத்து, "இப்பொழுதுமுதல் நீங்கள் உங்களுக்குப் பிரத்தியேகமாய்க் கொடுத்திருக்கும் பார்லிமெண்டு அரசாக்ஷியைக் கைக்கொண்டு ராஜ்ஜியபாரம் பண்ணுங்கள். நாளாவர்த்தியில் உங்கள் பார்லிமெண்டும் எங்கள் பார்லிமெண்டுபோல ஆகிவிடும்" என்று ஏற்படுகிறது.

10-ம் அத்தியாயம்.

மாக்ஷிமைதங்கிய நமது மகாராஜ சக்கிரவர்த்தியார்.

ஆங்கிலநாடெங்கும், அதிபதியாயிருந்து அரசராய் விளங்குபவர், மாக்ஷிமைதங்கிய ஜியார்ஜ்-௵ V என்னும் நமது மகாராஜ சக்கிரவர்த்தி. பிரிட்டிஷ் பார்லிமெண்டாரால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் நூதன சீர்திருத்தங்களடங்கிய இந்திய ஆக்டை அங்கீகாரம் செய்து, அதற்கு தன்னுடைய ராஜமுகரும் போட்டுள்ளவர் அம்மன்னவரே. இந்திய மகா ஜனஙகளுக்கு இந்த நூதன ஆக்டால் விளையும் நன்மையும் அவர்கள் இந்திய அரசாக்ஷியில் அபிவிர்த்திக்கு வருவதையும் பார்த்து, நம்முடைய சக்கிரவர்த்தியவர்களுக்கு நாம் எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறோம், என்பதை நான் இந்தச் சட்ட சம்பந்தமாய் எழுதிவரும் இச்சிறு பிரசுரத்தில் எடுத்துச் சொல்லாமலிருநதால் மிகத் தவமுக எண்ணப்படும்.

இந்தியாவிலுள்ள எல்லாவித ஜாதி, மதவர்ணாசிரமத்தார்களும், நானாவித ஜனஙகளும், பலபல விதமாய், இந்திய அரசாக்ஷி விஷயமாய் அபிப்பிராயப்பட்டிருக்கும் கக்ஷிகளும், இந்திய ராஜாங்க முறையைப்பற்றி கடூரமாய்க் குற்றம்கூறிக் கண்டனம்செய்துவந்தபோதிலும்கூட, யாவற்று ஜனஙகளும் மாக்ஷிமைதங்கிய தஙகள் சக்கிரவர்த்தியவர்களிடம் வெகு பத்தி விசுவாசம்வைத்து, அவரைத் தங்கள் ராஜாவாகவே வணங்கி வருகின்றனர். இந்தியாவைப் பாதுகாக்கும் நிமித்தமாய் ஏற்படுத்தப்பட்ட இந்தியப் பாதுகாப்பு ஆக்ட் சம்பந்தமாய் இந்தியாவில் கலகம் செய்து ஜெயிலில் அடைபட்டிருந்த 806 கலகக்காரர்களை, கல்கத்தா ஹைகோர்டு ஜட்ஜ் பீச்சுக்கிராப்டு துரையும் நானுமாக 1918-ம் வருஷத்தில் வங்காளமாகாண கவர்ன்மெண்டார் உத்திரவின்பேரில் விசாரித்து வந்தோம். அக்காலத்தில் ஜெயிலிலிருந்த ஒரு கலகக்காரனை நான் நேரிலேயே பார்த்து விசாரிக்கவேண்டியிருந்தது. அவனை ஜெயிலில் போடும் முன் இந்தியாவிலுள்ள கலகக்கூட்டத்தில் சேர்ந்து அக்கூட்டத்தாருக்கு குருக்களாய் ராஜ்ஜியத்திற்கு வெகு அனர்த்தங்கள் விளைக்க நினைத்து, அக்கலகக்காரர்களுக்கு தலைவனாயிருந்தவன் - அவனைப் பார்த்து "1911-ம் வருஷத்தில் முடிசூட்டு வைபவமாய் இந்தியாவில் நடந்த தர்பாருக்கு மாக்ஷிமைதங்கிய நமது அரசர் இங்கே வரும் முன்பும் அவர் வந்துவிட்டுப் போனபின்பும் இந்தியாவில் கலகக்காரர்கள் கொள்ளையிட்டும் போலீஸ்காரர்களை வதைத்துக் கொன்றும் வங்காள மாகாணத்தில் பலவித அட்டூழியம் செய்து ராஜ்ஜியத்தைக் கோலாகலப்படுத்திவந்தனரே! அம்மன்னவர் இந்தியாவில் தங்கியிருந்த காலத்தில் அக்கலகக்காரர்கள் ஒருவிதக் கலகமும் செய்யாமல் அமெரிக்கையாய் நடந்து வந்தது என்ன காரணத்தினாலே?" என்று நான் நேரில் கேட்டதற்கு அக்கலகத்தலைவன்

"ராஜா இந்தியாவுக்கு வந்தபோது கலகக்கூட்டத்தலைவர்கள் நம் தேசத்தில் மாக்ஷிமைதங்கிய நம்முடைய சக்கிரவர்த்தியார் இருக்கும் காலத்தில், இந்தியாவில் கலகம் என்பதே தெரியக்கூடாது. ஒருவரும் இந்தியாவில் ஒருவித இடஞ்சலும் தொந்திரவும் கொடுக்கக்கூடாது" என்று தங்களைச் சேர்ந்த கலகக்காரர்களுக்கு கட்டளை பிறப்பித்ததனாலே அவர்கள் யாவரும் ஒன்றுபோல் அக்கட்டளையின் படி ராஜ்ஜியத்தில் ஒரு கெடுதியும் உண்டாக்காமலிருந்துவந்தனர்" என்று பதில் சொன்னான். ஆகையினாலே இந்தியாவிலுள்ள எல்லாதிறத்து மனிதர்களும் மாக்ஷிமைதங்கிய தங்கள் சக்கிரவர்த்தியாரிடம் வைத்து இருக்கும் பக்தி விசுவாசம் எவ்வளவு ஆழ்ந்து அதிகரித்துள்ளது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

இதற்கு யாதுகாரணம் என்று விசாரிப்போமாகில், விக்டோரியா மகாராணியார் இந்தியாவை நேரிலேயே பரிபாலனம்பண்ண ஆரம்பித்தநாள் முதற்கொண்டு இந்தியர்களிடத்தில் அவ்வரசி வைத்திருந்த அபிமானமும் அநுதாபமும் அதிகம். அவ்வபிமானமும் அநுதாபமும் இந்தியர்கள் மனதைக் கவர்ந்து அவர்களுக்கு உருக்கம் உண்டாக்கியது. அவ்வரசியார் இந்திய ஜனங்களுக்குத் தாய்போலிருந்து பிறப்பித்த பிரகடனப் பத்திரிகைமூலமாய் வெளியிடப்பட்ட வாக்கை இந்தியர்கள் தங்கள் ஸ்வயேச்சைகளைக் கைக்கொள்ள சாதனமாகக்கொண்டு அவ்வாக்கை வெகு சிலாக்கியமாய் மனதில் ஊன்றிவைத்திருக்கின்றனர். அவ்வரசியார் காலத்து இளவரசராயிருந்த எட்வர்ட் என்கிற அவள் புத்திரனும் 1875-ம்௵ இந்தியாவைப் பார்க்க வந்திருந்தபோது இந்தியர்களும் அவரைப் பற்றி வெகு நல்ல அபிப்பிராயப்பட்டுப் புகழ்ந்தனர். விக்டோரியா மகாராணியார் காலஞ்சென்ற பின்னர் "எட்வர்ட்" நமது சக்கிரவர்த்தியாக மகுடாபிஷேகம்பூண்டு, நம்மை ஆண்டு வரும்போது அவ்வரசருக்கு "ராஜ்ஜிய சமரசர்" என்கிற பட்டம் வாய்ந்து அவர் காலத்தில் சண்டை, சச்சரவு, யுத்தம் முதலான கெடுதிகள் ஒன்றும் இன்றி, ராஜ்ஜியம் சுபீக்ஷமாய் இருந்து வந்தது. அவரும் 1905-ம் வருஷம் இளவரசரான ஜியார்ஜ் என்னும் தன் புத்திரரை இந்தியாவைப் பார்த்துவர அனுப்பினர். அவ்விள அரசரும் இந்தியர்களுக்குக் காட்டிய அநுதாபம் அவர்கள் மனதில் பதிந்து உருக்கமுண்டாக்கியது. அவ்விளவரசரே இப்பொழுது நமக்கு சக்கிரவர்த்தியராய் விளங்காநிற்கிறவர். அவர் 1910-ம் வருஷம் பட்டாபிஷேகம்பூண்டு அரசராகி, 1911-ம் வருஷத்தில் மகுடாபிஷேக வைபவம் கொண்டாடும் நிமித்தம் நடைபெற்ற தர்பாருக்கு இந்தியாவிற்கு வந்திருந்தபோது அவர் போலீஸ் பந்தோபஸ்து யாவற்றையும் நிராகரித்துவிட்டு, ஒரு போலீஸ்காரன்கூட தன்னோடு இராமல் தானாகவே ஜனங்கள் மத்தியில் சென்று, அவர்களோடு தாராளமாய் வார்த்தையாடி வந்தனர். ஆனதுபற்றி இந்திய ஜனங்களுக்கும் அவரிடம் பிரத்தியேகமாய் சிரேஷ்டமான அபிமானம் ஜனிக்கலாயிற்று. அவர் இந்தியாவைவிட்டு தன் நாட்டுக்குத் திரும்பிப்போகையில் இந்தியர்களைப் பார்த்து "நீங்கள் பயப்படாதீர்கள். உங்களுக்கு நல்லகாலம் வருகிறது" என்கிற உறுதி வார்த்தையை அளித்துப்போயிருக்கிறார். இந்திய மகா ஜனங்களுக்கும் இந்திய அரசர்

களுக்கும் அச்சக்கிரவர்த்தியார் சென்ற டிசம்பர்மாதம் கம்பீரியமாய்ப் பிரசித்தப்படுத்தியுள்ள பிரகடனமும் இந்தியர்களுக்குள் கூட்டுறவையும் ராஜ்ஜிய பக்தியையும் ஒற்றுமையும் அதிகரிக்கலாயிற்று. அப்பிரகடனப் பத்திரிகையே இந்திய நூதன ஆக்டிற்குக் காரணபூதமாகி, அவ்வாக்டையும் மாக்ஷிமைதங்கிய நம் சக்கிரவர்த்தியார் அங்கீகரித்துள்ளனர்.

கிரேட் பிரெட்டெனில் நடைபெறும் அரசாக்ஷி உத்தரவாதம் நிர்ணயிக்கப்பட்ட அரசாக்ஷியாகும். அதாவது, அந்த தேசத்து அரசர் தன் மனோபீஷ்டப்படி ஒரு நிபந்தனைக்கும் கட்டுப்படாமல் கொடுங்கோலரசர்போல் அதிகாரம் செலுத்திப் பிரஜைகளை ஆளமுடியாது. அவருடைய அதிகாரம் இன்னது என்பது அந்த தேச ராஜாங்க அமைப்பால் வரையறுத்துக்காட்டப் பட்டுள்ளது. அந்த அதிகாரத்திற்கு உள்ளடங்கியே ஆங்கில அரசர் பிரஜைகளைப் பரிபாலித்துவரவேண்டும். ஆனால் தன்னுடைய சரீரசம்பந்தமாய் மட்டும், அவர் தன் இஷ்டப்படி நடக்கக்கூடுமே தவிர, பிரஜைகளை, ராஜாங்கமுறைப்படிதான் ஆண்டுவரவேண்டும்.

இந்நிபந்தனைகளைப் பார்த்து, ஆங்கில மன்னர் என்று சொல்லுவது வெறும்பேச்சுக்குத்தான் அரசரே ஒழிய, வாஸ்தவமாய் அவருக்கு அரசருக்குள்ள அதிகாரம் அவரிடமுள்ள செங்கோலைத் தவிர ஒன்றும் இல்லையே என்று சொல்லி, உலகத்தில் ராஜா என்பவர் மகாவிஷ்ணு அவதாரமல்லவா? அவர் ராஜ பதவியும் தெய்வத்தன்மை பொருந்தியதல்லவா? ஆங்கில ராஜாவுக்கு இது ஒன்றும் இல்லையே? என்று ஜனங்கள் எண்ணுவது சகஜம்.

அங்ஙனம் நினைப்பது சரியல்ல. ராஜபதவி தெய்வத்தன்மை பொருந்தியது என்று சொல்லிக்கொள்ளும் கொள்கை சரியானபடி, உலகத்தில் பரவ ஆரம்பித்தது முதலாய்த் தீரவிசாரித்துப் பார்க்குமளவில் ஒரு ஒழுங்குக்காவது, சட்டத்திற்காவது அடங்கி நடவாமல், 'தன்மனம்போன போக்கே சட்டம்' என்று நினைத்து ராஜ்ஜியத்தை ஆண்டுவரும் அரசருக்கு தெய்வத்தன்மையுள்ள ராஜபதவி இல்லை என்று ஏற்படுமே அல்லாது, ராஜாங்க அமைப்புக்கும் சட்டத்திற்கும் ஒத்தபடி ஆங்கில நாட்டைப்போல் அரசாண்டுவரும் அரசருக்குத்தான், அவ்வித தெய்வத்தன்மை பொருந்திய ராஜபதவி இருக்கிறது என்று சித்தாந்தப்படுத்தவேண்டும். அங்ஙனம் ராஜாங்க அமைப்புக்கு வரம்பு கடவாமல் உள்ளடங்கி நடந்துவரும் அரசரே, உத்தரவாதம் நிர்ணயிக்கப்பட்ட ராஜாங்கத்தலைவர் என்று மதிக்கப்படுவார்.

"மேற்சொல்லப்பட்டது எங்ஙனம் சரி" என்பதை இப்பொழுது விளக்கிக்கூறுகிறேன். ராஜ பதவி தெய்வத்தன்மை பொருந்தியது என்று சொல்லும்போது பூமியில், அரசரானவர் கடவுளுக்குப் பிரதிநிதியாய் இருந்து, கடவுள் ஜனங்களை பூமியில் எங்ஙனம் பரிபாலித்து வருகிறாரோ, அங்ஙனமே தெய்வத்தன்மை பொருந்திய ராஜபதவியை வகிக்கும் அரசரும் தன் பிரஜைகளைப் பரிபாலித்து வருபவர் என்று நாம் தெரிந்துகொள்ளவேண்டும். ஆகவே, கடவுளுக்கு ஜனங்களின்மேல் செலுத்த என்ன அதிகாரமுண்டோ அவ்

வதிகாரமே அவ்வித அரசருக்குமுண்டு என்று ஏற்படும். இப்பொழுது கடவுள் பூமியில் உள்ள ஜனங்களிடத்தில், தன் அதிகாரத்தை எவ்விதம் செலுத்திவருகிறார் என்று விசாரிக்குங்கால், தன் இஷ்டப்படி, ஒருவரம்புக்கும் கட்டுப்பட்டு அகப்படாமல் கடவுள் பூமியில் ஜனங்களை பரிபாலித்து வருவதில்லை என்று தெரியாதா? அவர் ஜனங்களைப் பரிபாலனம்செய்து வரச் சட்டதிட்டங்கள் ஏற்பட்டு இல்லையா? அவைகளைக் கடவுளே ஏற்படுத்தியுள்ளார். அச்சட்டங்களின்படிக்குத்தான் தானும் ஆன்மாக்களை ஆண்டுவருகிறார். கடவுளால் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களையே, நாம், இயற்கை விதிகள் என்றும், சுகாதார விதிகள் என்றும், தர்மசாஸ்திர நியாய விதிகள் என்றும் பலவிதமாய்ச் சொல்லி வருகிறோம். சர்வ வல்லமையுள்ள கடவுளும் இவ்விதமான விதிகளை அநுஷ்டித்து, தனக்குள்ள ஸர்வ அதிகாரத்தை இவைகளுக்குள் அடக்கி, அவைகளின் பிரகாரமே பூமியில் ஆன்மாக்களை, அவைகளின் நன்மைக்காக, பரிபாலித்து வருகின்றனர். இங்ஙனமின்றி, சர்வ வல்லமையுள்ள அக்கடவுள் தன்னிஷ்டப்படி ஒரு நிபந்தனைக்கும் உட்படாமல், பூமியில் ஜனங்களைப் பரிபாலித்து வரின் அக்கடவுளை குரூரக்கொடுங்கோலரசர் என்று தானே சொல்லவேண்டும்! கடவுளோ அப்பேர்ப்பட்டவரல்லர். நியாய விரோதமின்றி, நன்மைக்காக ஏற்படுத்தப்பட்ட விதிகளின் பிரகாரம் ஜனங்களை கிருபையுடன் பரிபாலித்து வந்து, ஜனங்களுக்கே தொண்டராகி இருப்பவர். ஆனதுபற்றியே, கடவுளும், தான் சிருஷ்டித்த ஆன்மாக்களை தன் எதேச்சைப்படி பரிபாலித்துவராமல், தான் ஏற்படுத்தியுள்ள தர்மசாஸ்திராதி விதிகளாலே தன்னையும் கட்டுப்படுத்திக்கொண்டு, ஆன்மாக்களைப் பரிபாலித்து கிருபாகடாக்ஷித்துவருகிறார். ஆகவே, இக்காரணம்பற்றி கடவுளின் அரசாக்ஷியும உத்தரவாதம் நிர்ணயிக்கப்பட்ட அரசாக்ஷி என்றே புலப்படும்.

தவிரவும், இந்துமத சித்தாந்தத்தின்படியும் கிரிஸ்துமதக்கொள்கையின்படியும், கடவுளானவர் பூமியில் மனிதனாக ஜனித்து ஜனங்களுக்கு தெய்வ சம்மதமாய் எங்ஙனம் நல்லபடி நடந்துவந்து, வாழ்நாளைக்கழித்து, முக்திபெறுவது என்பதைத் தானே தன் நடவடிக்கையினாலே காட்டியும் உள்ளவர். இதையே இந்து மதத்தினரும், கிரிஸ்துமதத்தினரும் கடவுள் பல அவதாரம்செய்து வந்தவர் என்று சொல்லுவதின் தாத்பரியமாகும். கடவுள் மானிட ஜன்மம் எடுத்து மானிடர்களோடு கலந்து ஊடாடி, ஆன்மாக்களின் நன்மையை நாடியே பாடுபட்டு வந்து, அவ்வான்மாக்களின் நிமித்தமாகவே அவர் பல அவஸ்தைகளையும் அநுபவித்து, அடியார்க்கடியராகி, ராஜாதிராஜாவாக விளங்கா நிற்பவர் என்று நாம் புகழ்வதில்லையா? அக்கடவுள் மானிட ஜன்மம் எடுத்து, தான் நடத்திக்காட்டிய நடவடிக்கைகளாலே, "சட்ட விதிகளைத் தானே ஏற்படுத்தி அதன்படி அநுஷ்டிப்பவன் எவனோ, அவனே பிறரையும் அச்சட்ட விதிப்படி நடத்தி பரிபாலிக்கக்கூடும்" என்பதை திருஷ்டாந்தமாக விளக்கியுள்ளார். 'தானடங்க தன் குல மடங்க' என்கிற பழமொழி கடவுள் நடவடிக்கையாலே ருஜுவாகும். இவ்விதமாய் கடவுள் அவதார புருஷனாயின்று, மானிடருக்குள்ள விதிகளின்படி, தானே முதலில் நடந்து

காட்டி, மானுஷனும் எங்ஙனம் தெய்வத்தன்மையை அடையக்கூடும் என்பதை விளக்கியிருக்கின்றனர். ஆகவே, "கடவுளானவர் ஜனங்களைப் பரிபாலிப்பதில், சில விதிகளை ஏற்படுத்தி, அவ்விதிகளின் படி முதலில் தானே நடந்து காட்டி, ஜனங்களையும் தன் கிருபா கடாக்ஷத்துடன் அநுதாபத்தோடு பரிபாலித்து வருகின்றனர்" என்று விளங்கலாகும்.

ஆனதுபற்றி 'தெய்வத்தன்மை பொருந்திய ராஜ பதவி' என்பது "சில விதிகள் ஏற்படுத்தி அவைகளின்படி ஜனங்களைப் பக்ஷத்துடன் ஆதரித்து, கிருபாகடாக்ஷம் மேலிட்டு, தொண்டுசெய்வதே தன் கடமை என்று அவர்களைக் கருணையுடன் பரிபாலித்துவரும் கடவுளின் அதிகார உரிமையை உடைத்தது" என்று தாத்பரியப்படும்.

பூர்வ காலத்தில் கிறிஸ்தவ வேதாந்திகளும் இந்துமத தர்ம சாஸ்திரிகளும், பாராளும் மன்னருக்கு மகாவிஷ்ணு பதவியுண்டு என்றும், அவருடைய பதவி தெய்வத்தன்மை பொருந்தியது என்றும் பிரயோகப்படுத்திவந்தது மேற்கூறிய அர்த்தத்திலேயே தவிர, வேறுவித தாத்பரியத்தில் இல்லை. ஆயினும், காலாந்தரங்களினாலே பூமியில் கொடுங்கோல் மன்னர் அரசாளத் தலைப்பட்டுப் பிரஜைகளை ஒரு சட்டத்திற்காகிலாவது, அல்லது ஒரு கட்டுப் பாட்டிலாவது ஆதரவுடன் உள்ளடக்கி ஆண்டுவராமல், தங்கள் மனோபீஷ்டப்படி, தோன்றினவிதமெல்லாம் ஆண்டு, தங்கள் ஸ்வயலாபத்தையே உத்தேசித்து வந்தவர்களாகையால், "தெய்வத்தன்மை பொருந்திய ராஜபதவி" என்பது முற்றும் வேறாகி, அக்கொடுங்கோல் மன்னரால் சிதைந்துபோகலாயிற்று. ஆனதுபற்றியே, ஐரோப்பாவிலுள்ள அநேக ராஜ்ஜியங்களில் ராஜ பதவிக்குள்ள தெய்வத்தன்மை நீங்கி அந்த ராஜாங்கங்களும் வேரோடு அற்றுப்போயிருக்கின்றன. ஆயினும் ஆங்கிலேய ராஜத்துவம் மாத்திரம் அங்ஙனம் சிதைந்துபோகாமல் நீடித்து, நிலைத்து வருவதுடன், ஆங்கிலேயர்களுக்கு ஸ்வராஜ்ஜியாதிபத்தியம் மிகுந்து ஆங்கில அரசும் ஜனங்களால் கொண்டாடப்பட்டுவருகிறது. இதற்குக்காரணம், ஆங்கில அரசர், தான் பிரத்தியேகமான பிறப்பைச்சேர்ந்தவர் அல்லர். தானும், தான் பரிபாலித்துவரும் பிரஜைகளில் ஒருவர் தான் என்று எண்ணி அடங்கி நடந்துவருதலேயாம்.

ஆகவே, பிரிட்டிஷ் ராஜ்ஜியத்தில் ராஜபதவி தெய்வத்தன்மை பொருந்தியது என்கிற கொள்கையைத் தழுவி, மேற்கூறியபடி ராஜ பதவியின் பூர்வார்த்தத்திலேயே அத்தேசத்தில் ராஜத்துவம் உபயோகித்துவரப்பெற்று, அம்மேன்மையான பதவி சிதைவு அடையாமல் காப்பாற்றிவரப்படுகிறபடியால், அந்த பிரிட்டிஷ் ராஜாங்கம் எவ்வளவு மாக்ஷிமை பொருந்தியதாகும்! ஆங்கில நாட்டு சரித்திரமும் ஜனங்களுடைய சுயேச்சையைப்பற்றிச் சொல்லும் சரித்திரமாகவே இருந்துவருகிறது. இதர ராஜ்ஜியங்களிலுள்ளவர்களும், ஆங்கில நாட்டில் நடைபெறும் அரசாக்ஷியைப்போலவே, தங்கள் நாட்டிலும் அரசாக்ஷி ஏற்படுத்தலாயினர். மேலும், பிரிட்டிஷ் ராஜாங்கமே, உலகத்தில், பார்லிமெண்டு அரசாக்ஷிக்குக் காரணபூத

மாகி இதர தேசங்களில் வழங்கும் பார்லிமெண்டு அரசாக்ஷிக்கு மூல மாதா என்று கொண்டாடப்பெற்று வருகிறது. இதுவுமன்றி, ஆங்கிலேய சரித்திரம், பூமியில் ராஜபதவி தெய்வதன்மை பொருந்தியது என்பதை வெளிக்காட்டி, அத்தேசத்திலுள்ள அரசாக்ஷியும் அக்கொள்கையையே மேற்கொண்டு உத்தரவாதம் நிர்ணயிக்கப்பட்ட ராஜாங்கமாயிருந்துவருவதை இதர தேசத்தார்கள் பார்த்துப் புகழலாகி, பிரிட்டிஷ் தேசத்தார் சரித்திரமும் மேலோங்கிப் பிரகாசிக்கின்றது. மாக்ஷிமைதங்கிய நமது ஜியார்ஜ சக்கிரவர்த்தி அவர்கள், ராஜாங்க நெறி முறைக்குக் கட்டுப்பட்டு, மனப்போக்கெல்லாம் போகாதபடி சட்டப்படியே, பிரஜைகளைப் பரிபாலித்து, தான் ஆண்டுவரும் பிரஜைகளில் தானுமே ஒருவராய்ப்பாவித்து, ராஜ்ஜிய பாரம் வகித்துவருவதினாலே, அவருக்கு ஜனங்கள் வைத்திருக்கும் ராஜ பதவி எவ்வளவு மகிமையுடையது! அவர் ஜனங்களோடு தானும் ஒருவராகவே இருந்து அவர்களோடு ஊடாடுவதும், கேவலம் ஹீனஸ்திதியிலிருக்கும் இடங்களையும் சேரிகளையும் தானே நேரில் போய்ப்பார்த்துவருவதும், ஜனங்களுக்காகத் தானே தேகசிரமெடுத்துப் பாடுபட்டு, அவர்கள் நன்மைக்காகவும், அவர்கள் அபிவிர்த்திக்காகவும் தாஸனுயிருந்து உழைத்துவருவதும், ஜனங்கள் மனதில் ஊடுருவி அவ்வேந்தருக்கு மேற்சொல்லிய ராஜ பதவியை எங்ஙனம் ஜனங்கள் கொடாமலிருக்கக்கூடும்! அதினால் அவருக்கு எவ்வளவு மகிமையும் ஏற்பட்டிருக்கவேண்டும்!! குடிகளுக்கு அடியனாகி, நம்மரசர் ராஜ்ஜியத்தை மகிமையோடு ஆண்டுவருவதும் தவிர, இளவரசராகிய தன் மூத்தகுமாரனை இந்தியாவிற்கு அனுப்புவித்து, இந்தியாவில் நூதன ஆக்டின்படிக்குள்ள சீர்திருத்தங்களைச் சீக்கிரம் பிரதிஷ்டை செய்து ஸ்தாபனம் செய்ய ஆஞ்ஞாபித்திருக்கின்றனர். அவ்விள அரசரும், தன் தந்தைக்குள்ள மானுஷ தெய்வத குணங்களையே அவலம்பித்து நடந்துவருகிறார். மாக்ஷிமைதங்கிய நமது சக்கிரவர்த்தியார், இந்திய மகாஜனங்களுக்குக் கருணைகூர்ந்து காம்பீரியமாய் பிரசுரித்துச் சொல்லிய அவரது பிரகடனப் பத்திரிகை, தனக்கு இந்தியர்களிடம் நிறைந்து பொங்கும் அநுதாபமும் ஜனங்களுக்கு நல்ல ஸ்திதிவரவேண்டும் என்கிற எண்ணமும், அவர்களோடு தானும் ஒருவராய் நின்று ஒற்றுமைக்கவேண்டும் என்கிற புத்தியும், ஜனங்களும் தங்களுக்குக் கிடைப்பதை நன்கு மதிக்கத்திறமையுள்ளவர்கள் என்று அவருக்குள்ள நம்பிக்கையும், ஆகிய நற்குணங்களையே, வெளிக்காட்டிவருகிறது. ஆகவே நமது சக்கிரவர்த்தி அவர்கள் கருணைகூர்ந்து அளித்திருக்கும் மேற்கூறிய பிரகடனப்பத்திரிகையினாலே நம்தேசத்திற்கு சீர்திருத்தங்கள் உண்டாகி, அவைகள் நிறைவேறும் நிமித்தம் நாம் என்னென்ன காரியம் இனிமேல் செய்யவேண்டும் என்பதை எடுத்துக்காட்ட அவர் வாக்குகளே அறிகுறியாயிருக்கின்றன. அக்கருணை வாக்குகள் எங்ஙனம் நமக்கு அறிகுறிகள் என்பதைப்பற்றி இந்தப் பிரசுரத்திற்குக் கடைசிமுடிவாக அடுத்த அத்தியாயத்தில் எடுத்துக்காட்டுவேன்.

11-ம் அத்தியாயம்.

எலக்டர்களின் கடமை.

ஜனங்களுக்கு உத்தரவாதமாய் நிற்கும் ஸ்வராஜ்ஜியாதிபத்தியம் இந்தியாவில் அபிவிர்த்தியடைந்து நன்மை பயக்குமாறு, இந்திய நூதன ஆக்டின்படி அடுத்தவருஷம் முதல் அமூலுக்குவரும் சீர்திருத்தங்களையெல்லாம் பின்வருமாறு அடக்கிக்கூறிவிடலாம். அவையாவன :—(1) முனிஸிபாலிடிகளிலும் லோகல் போர்டுகளிலும் பூராவுக்கும் ஸ்வயாக்ஷி வந்துவிடல்; (2) மாகாண அரசாக்ஷியில் ஒருவாறாய் ஸ்வராஜ்ஜியம் ஜனங்களுக்கு உத்திரவாதமாய்க் கிடைத்தல்; (3) இந்தியா கவர்ன்மெண்டில் இந்திய மெம்பர்கள் அதிகப்பட்டு, ஸர்க்கார் நடத்தும் காரியங்களில், பொதுஜன நன்மையின் பொருட்டு, குற்றம் குறைகளை எடுத்துக்காட்டுவதற்கு அதிகாரம் அதிகப்பட்டிருத்தல்.

நூதனச் சீர்திருத்தங்களாலே உண்டாகும் உரிமைகளையும் ஸ்வதந்திரங்களையும் ஜனங்களும், அவர்கள் பிரதிநிதிகளும் நன்கு மதித்து சாவதானமாயும் சரியான்படியும் ராஜாங்கத்தைப் பரிபாலித்து வந்தால்தான், மென்மேலும் ஜனங்களுக்கு ஸௌக்கியமுண்டாகி அரசாக்ஷியில் இன்னமும மேலான உரிமைகளை அடைய இடமுண்டாகும்.

ஆகையினாலே, சீர்திருத்தங்களால் நன்மை விளையுமாறு எலக்டர்களாயிருக்கும் ஜனங்கள் தங்களுக்குள்ள வோட் உரிமையைச் சரியானபடி செலுத்தி, அவர்கள் இச்சீர்திருத்தங்களின் ஸம்பந்தமாய் என்னென்ன செய்யவேண்டுமோ அவைகளை எல்லாம் நாம் இப்பொழுது கவனித்துப் பார்ப்போம்.

(1) புதிதாய் ஏற்படும் ஸபைகளுக்கு மெம்பர்களைத் தேர்ந்தெடுக்கும் வோட்டு உரிமையுள்ள ஒவ்வொருவரும், தனக்கு இருக்கும் வோட்டு உரிமை, தன்னுடைய சுயநலத்திற்காகவாவது, தன் வகுப்பினருக்காவது தன் ஜாதியாருக்காவது நன்மைபயக்க ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்று எண்ணிவிடாமல், ராஜ்ஜியம் பூராவும் நன்மை யடையவே, வோட் கொடுக்கும் சுவதந்திரம் தனக்கு கொடுபட்டிருக்கிறதாக மதிக்கவேண்டும். மேலும் அந்த வோட் உரிமையை, தன்னிடம் சாவதானமாய்க் காப்பாற்றும்படி வைத்திருக்கும் ஸொத்தைப்போல பாவித்து, குடிகளாகிற இந்தியர்களுக்கு அரசாக்ஷியால் நன்மை விளையும்படி உபயோகித்துவரவேண்டும்.

(2) அங்ஙனம் ஜாக்கிரதையாய் தன் வோட்டுரிமையை ஒரு எலக்ஷன் ஸமயத்தில், செலுத்தவேண்டும்போது, "இத்தனை தூரம் என் வீடுவாசலைவிட்டு, சிரமப்பட்டுக்கொண்டு வோட் கொடுப்பதற்காக யார் போவது? வோட் கொடுப்பதற்கு ஏற்படுத்தியுள்ள இட

மும் வெகுதூரமாயிற்றே? வோட் கொடுக்கிறதற்காக, வேறொரு காரியமுமில்லாமல் அவ்விடத்திற்கு இவ்வளவு தூரம் சிரமப்பட்டுப் போக யாருக்கு முடியும்? அப்படிச் செய்வதினால் எனக்கு என்ன நன்மை?'' என்று, பலவிதமாய் சொல்லிக்கொண்டு வோட் கொடுப்பதற்குப் போகாமல் ஒரு வோட்டர் தங்கிவிட்டானால், அவனுக்கு கொடுத்திருக்கப்பட்ட வோட்டு உரிமை நிஷ்பலமாகி, அவ்வுரிமையைக் காப்பாற்றிச் சரியானபடி உபயோகிக்கத் திறமை இல்லை என்பதை வெளிக்காட்டலாகும். தன் ராஜ்ஜியத்திலே, அப்பேர்ப்பட்டவன் பற்றில்லாத பாமரனாகி, ஜனங்கள் திருப்தியின்றி வருந்துவதற்கும், ராஜாங்கமும் சரியானபடி நடவாதிருப்பதற்கும், அவனே காரணபூதமாகிறான் என்பதற்கு ஸம்சியமே இல்லை.

(3) யாதாமொரு வோட்டர், தன் வோட்டினால் தேர்ந்தெடுக்கப்புகும் நபர் மெம்பராகவருவதற்கு யாதொரு பிரமேயமுமில்லை என்று தெரிந்திருந்தபோதிலும்கூட, அவ்வோட்டர், தனக்கிஷ்டப்பட்ட நபருக்கு வோட்டு கொடுக்கப்போகாமல் இருப்பது சுத்தப் பிசகு. வோட்டு கொடுப்பவர்கள், தங்கள் வோட்டு உரிமையைச் செலுத்தினால்தான், பொதுக்காரியங்களில் ஜனங்களுக்கு ஊக்கம் இருக்கிறது என்பதைத் தெரிவிக்கலாகும். அப்படி வோட்டு கொடுக்கப்போனால்தான், வோட்டருக்கு ராஜாங்க விஷயங்களும் தெரியலாய், ராஜ்ஜியத்திற்கும் நன்மை உண்டாகும். 'ஹென்றி ஸிட்ஜிவிக்கு' என்னும் ஒரு கியாதிபெற்ற இங்கிலீஷ் வித்துவான், வோட்டு விஷயமாய்ச் செய்ததுபோல ஒவ்வொரு வோட்டரும் நடந்துவரவேண்டும். அவ்வித்துவான் செய்தது என்னவென்றால், ஒருகாலத்தில் அவர், தன் ஊராகிய இங்கிலாந்தைவிட்டு, ஸ்விட்ஸர்லாந்து என்னும் தேசத்திற்கு உடம்பு ஸௌக்கியத்தைப் பார்த்துக்கொள்ளும்பொருட்டுப் போயிருந்தனர். அப்பொழுது, இங்கிலாந்தில் பார்லிமெண்டு மெம்பர்களைத் தெரிந்தெடுக்கும் ஸமயம் வந்துவிட்டது. அச்சமயத்தில், அவர் தன் தேகஸ்திதியைப் பாராட்டாமலே, தான் யாருக்கு வோட் கொடுத்து பார்லிமெண்டு மெம்பராக்க வேண்டுமென்று கருதியிருந்தனரோ, அவருக்கு வோட்டு கொடுப்பதற்காக, ஸ்விட்ஸர்லாண்டை விட்டு இங்கிலாந்துக்குத் திரும்பிப்போக தீர்மானித்துவிட்டனர். இங்கிலாந்திலிருந்த அவருடைய சிநேகிதர்களில் சிலர் "நீர் வீணாக உடம்பைக் கெடுத்துக்கொண்டு, இங்கே உம்முடைய வோட்டு கொடுப்பதின் நிமித்தம் வரவேண்டாம். நீர் யாருக்கு வோட் கொடுக்கப்போகிறீரோ, அவருக்கு இந்தத் தடவை மெம்பராவதற்கு பிரமேயமே கிடையாது. உம்மைச்சேர்ந்த ராஜீய கக்ஷியாருக்கு இந்தத் தடவை ஜயமில்லை. அபஜயம் வருவது நிச்சயந்தான்'' என்று பலவிதமாய் அந்த ஸிட்ஜிவிக்கை வராமல் தடைபண்ணினர். ஆயினும், அந்தப் பெரியவர், தன் சிநேகிதர்கள் எழுதியவைகளை எல்லாம் கொஞ்சமேனும் கவனியாமலும், தன் தேகஸ்திதியைப் பாராட்டாமலும், ஸ்விட்ஜர்லாந்திலிருந்து இங்கிலாந்திற்கு வந்து, தன் வோட்டைக் கொடுத்தனர். அப்பொழுது அவர் சிநேகிதர்கள், "ஏன் நீர் அனாவசியமாய் சிரமப்பட்டுக்கொ

ண்டு, இவ்வளவு தூரம் வந்தீர்? நீர் வோட்டுக் கொடுத்து நியமிப்ப தாக நினைத்த நபர் இந்தத் தடவை மெம்பராகவர முடியாதே? உம்முடைய கக்ஷியார்களுக்கும் பிரயோஜனமில்லையே?'' என்று கேட்டதற்கு அவர், ''என் சுயநன்மைக்காகவாவது, அல்லது என் கக்ஷியார் சுகமடைவதற்காகவாவது நான் இவ்வளவு தூரத்திலிரு ந்துவரவில்லை. எனக்கு இருக்கும் வோட்டு உரிமையை நான் ராஜ்ஜி யத்தின் பொது நன்மைக்காகச் செலுத்தக் கடமைப்பட்டு வந்தேன். அம்மாதிரி நான் செய்யாதபோனால், என் ராஜ்ஜியத்திற்கு நான் நம் பிக்கை துரோகம் செய்தவன் ஆய்விடுவேன். எனக்கு எந்த கக்ஷி ஜயித்தாலும், எந்த நபர் மெம்பராகவந்தாலும் பிரமாதமில்லை. ராஜ்ஜியம் நன்மையடைய வேண்டுவதுதான் என் ஒரு நோக்கம்'' என்று பதில் உரைத்தனர். ஆகவே இந்தியாவில் ஒவ்வொரு வோட்டரும் இந்த ஸிட்ஜிவிக்கு மகான் நடந்துவந்ததுபோல, ராஜ்ஜியநன்மையை மேற்கோளாகக் கொண்டு, தன்தன் வோட்டை கொடுக்காமல் வீணில் இருந்துவிடலாகாது.

(4) மேற்சொல்லியபடி ஒவ்வொரு எலக்டரும், எந்த ஸ்திதி யிலிருப்பவனானாலும் சரி, தன் வோட்டைக் கொடுக்காமல் தங்கிவிடு வது சுத்தப்பிசகு என்று தெரிந்துகொண்டு, வோட்டு கொடுக்கும் போது, ''எந்த நபருக்கு வோட் கொடுத்தால் ராஜ்ஜியத்திற்கு நன்மை?'' என்பதைக் கடைப்பிடித்துச், சரியான நபருக்கு தன் வோட்டைக் கொடுக்கவேண்டும். யார் சரியான நபர்? என்று கேட் டால், ஒவ்வொரு எலக்ஷன் காலத்திலும், அநேகம் நபர்கள், 'தான் மெம்பராக வரவேண்டும்' என்று சொல்லிக்கொண்டு, வோட்டு ஸம்பாதிக்க அலைகின்றனர். அநேகர் அப்படி வருவதி னாலே, வோட்டர்களுக்கு, ''யார் யோக்கியமானவர்? எவருக்கு வோட்டு கொடுப்பது நலம்'' என்பதைத் தெரிந்துகொள்ளுவது வெகு சிரம்மாக முடிக்கிறது. வோட் ஸம்பாதித்து மெம்பராய் வரவேண்டும் என்று முயல்கிறவர்கள், 'இன்னபடிச் செய்வது உத்தமம்' என்றுப் பகுத்தறிய வொட்டாதபடி, வோட்டர்கள் மனதைக் கலக்கிவிடுகின்றனர். அவ்வோட்டர்கள், ஏழையா யுமிருந்து ராஜீய விஷயங்களில் ஒன்றும் தெரியாதவராயுமிரு ந்துவிட்டால், கேட்கவே வேண்டியதில்லை. அவர்களுக்கு இன் னது செய்வது யுக்தம் என்று தெரியாமல் மனங்கலங்கிப் போய் விடுகிறது. மெம்பராக வரவேண்டுமென்று யத்தனப்படுகிறவர் களும், இப்பேர்ப்பட்ட வோட்டர்களுக்கு பணம்கொடுத்தோ, அல்லது ஏதாவது அவர்களுக்குப் பிரத்தியேகமாய் அநுகூலம் செய்தோ அவ்வோட்டர்களை தன் வசமாக்கிக் கொள்ளலாகும். அங்ஙனம் வோட்டர்களுக்கு வஞ்சம் முதலானது கொடுத்து மெம்பராகவர இஷ்டமில்லாமல் இருக்கும், நபராகில், அவரும் வோட்டர்களைப்பார்த்து, தன்னை எலக்ஷனில் மெம்பராக நியமித்து விட்டால், ஜனங்களுக்கு வெகு நன்மைகள் செய்யப் புகுவதாயும், தான் தன் வேலையை ஜனநன்மைக்காக வெகு ஒழுங்காய்ப் பார்த்து வருவதாயும், வோட்டர்களைப் பலவிதமாய் ஸ்துத்தியம்பண்ணி, அவர்களுக்கு ஹிதவார்த்தைகளை எல்லாம் சொல்லி, பலவிதமாய் அவர்களுக்கு அநேகம் வெறும் வாக்குத்தத்தங்கள் செய்துவரக்

கூடும். வேறொருவர், 'தான் சுயேச்சையையே கருதி நடப்பவர்' என்றும் 'தான் ஒரு உத்தியோகஸ்தரையும் கண்டு அஞ்சுவதில்லை' என்றும் சொல்லிக்கொண்டு, 'ஜனங்களுக்குப் போடப்பட்டிருக்கும் வரியைக் குறைத்து விடுவதாயும், தனக்கு மெம்பரானால், ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களை தன் காலில் விழும்படிச்செய்து, தான் சொல்லும்படி அவர்களை ஆடப்பண்ணுவதாயும்' சொல்லிவரக் கூடும். ஆகவே இத்தியாதி வார்த்தைகளை எல்லாம் சொல்லிக் கொண்டு, வோட்டு ஸம்பாதிக்க வரும் நபர்களிலிருந்து, 'இன்னவர் ஸ்வயநலம் கருதி வருபவர், இன்னவர் வீண்வார்த்தை பேசுபவர், இன்னவர் காரியவாதியாவர்' என்பதை நன்றாய் ஆராய்ந்துபார்த்து அறியவேண்டுவது ஒவ்வொரு வோட்டருக்கும் அவசியம். ஆகவே, மேல்சொல்லியபடி பலவிதமான கட்டுரை கூறுபவர்களை யாவது, வீண்முகஸ்துதி செய்பவரையாவது, ஆத்மஸ்துதி செய்பவரையாவது, வோட்டர்கள் கவனிக்காமல், "எவன் ஒருவன் நன்னடக்கையே தன் நடத்தையாக மெய்யாய் மனதில் கொண்டுள்ளானோ" அவனைத்தான் ஒவ்வொரு வோட்டரும் தேர்ந்தெடுத்து மெம்பராய் நேமிக்கவேண்டும். ஆகையினாலே, வோட்டர்காள்! "வீண்ஸ்துதிசெய்து, காசுகொடுக்கும் மோசக்காரர்களை மெம்பர்களாகத் தேர்ந்தெடுக்காதீர்கள். அவர்கள் வார்த்தைகள் வீண் ஆடம்பரம். அவர்கள் பேச்சு காரியத்திற்குதவாது. அவர்களுக்கு, உங்களுக்குள்ள வோட்டைக் கொடுத்து, உங்கள் உரிமையைப் பாழாக்கிக்கொள்ளாதீர்கள்!! எவன் ஒருவன் ராஜ்ஜியம் நன்மைபெற உழைக்கச் சக்திவாய்ந்துளனோ, எவன் ஜனங்களிடத்தில் அநுதாபம் மிக்கு, அவர்கள் சௌக்கியத்திற்குத் தக்கபடி காலாகாலத்தில் தன்புத்தி சாதுரியத்தைச் செலுத்தத் திறமையுள்ளவனோ, எவனொருவன், ஒரு கக்ஷிக்காரருக்காவது, அல்லது ஒரு வகை ஜாதியாருக்காகவாவது பிரத்தியேகமாய் அநுகூலம் செய்வதாகச்சொல்லி வாக்குத்தத்தம் செய்யாமல், தான் மெம்பராய் இருக்கும் நாளெல்லாம், தான் இன்னகக்ஷி மெம்பர் என்று சொல்லிக் கொள்ளாமல், ராஜ்ஜியத்திலுள்ள நானாவிதமாயுள்ள ஜனங்கள் யாவருக்கும் தான் பிரதிநிதியாகவிருந்து, ராஜ்ஜியத்திற்கு நன்மையுண்டாக்க முயலுவதையே மூலகருத்தாகக்கொண்டு உளனோ, அவனையே, நீங்கள், உங்களுக்குத் தக்க மெம்பராக எண்ணி, அவனுக்கே உங்கள் வோட்டைக் கொடுங்கள். இங்கிலாந்து, பிரான்ஸ், ருஷியா தேசங்களில், அரசர்கள், ராஜ்ஜியதந்திர நிபுணர்களைத் தள்ளிவிட்டு, தங்களுக்கு விகிதமாயுள்ள மந்திரிமார்களை ஏற்படுத்திக்கொண்டார்கள். அதினாலே அவ்வரசர்கள் நாசமடைந்து, அவர் தேசங்களும் சின்னாபின்னப்பட்டுப் போய்விட்டன. நீங்களும் இங்ஙனம் சரியானபடி மெம்பர்களைத் தேர்ந்தெடுக்காமல் போனால் உங்களுக்கும் இந்தக்கதிதான் விளைந்து உங்கள் ராஜ்ஜியமும் பாழாகிப்போகும். ஆகவே, நீங்கள் ஸர்வ ஜாக்கிரதையாயிருந்து ராஜ்ஜியாநுகூலத்திற்குத் தகுந்தவரைத் தேர்ந்தெடுக்க முயலுங்கள்." மேல்சொல்லிய, இவ்வார்த்தைகளையே லண்டன் மாநகரில் பிரசுரமாகும் லண்டன் 'டைம்ஸ்' என்னும் பத்திரிகை கூறுகின்றது. இவ்வார்த்தைகளையே, உங்கள் ராஜ்ஜியம் முன்னுக்கு வருவதற்கு, உங்களுக்கு உற்ற துணையாகக் கொள்ளுங்கள்.

(5) நம்முடைய வாழ்நாளில் நாம் பலருக்கு இணங்கி நடந்து வருவதுபோலவே ராஜாங்கத்தில் பலபல விஷயங்களையும் இணக்கிக்கொண்டுவந்து, ராஜாங்கத்தை நடத்திவரவேண்டும் என்பதை ஒவ்வொரு எலக்டரும் ஞாபகத்தில் வைக்கவேண்டும். ராஜ்ஜியத்திலே, நானாவித ஜாதி, மதாச்சார, வர்ணாச்சிரமங்களும், பலபல தொழில் புரிவர்களும் உண்டு. இப்படிப் பலவிதமாய் ஜனங்கள் ராஜ்ஜியத்தில் இருந்துவருவதினாலே, அவரவர்கள் நடப்பும் மாதிரியும் வெவ்வேறாகிறது. இப்படிப் பலவகைப்பட்ட ஜனங்களுக்குள்ள பலவித நடவடிக்கைகளில் விரோதம் ஏற்படாமல், ஜனங்கள் யாவரையும் ஒருங்குபடச் சேர்த்து இணக்கிக்கொண்டு வருதலே ராஜ்ஜிய பரிபாலனம் என்று சொல்லலாகும். இப்படி வேறு பாடாயிருக்கும் நடவடிக்கைகளையெல்லாம் ராஜ்ஜியத்தில் ஜனங்களின் நன்மையைக்கோறி ஒற்றுமைப்படுத்த சமயோசிதமாய் இணக்கிக்கொண்டு வருதல் அத்தியாவசியகம். ராஜ்ஜிய விஷயங்களில் ஜனங்கள் கக்ஷியையெடுத்து வாதிக்கும் ஒரு ஆங்கிலேயர் “ ராஜ்ஜிய ஸம்பந்தமாயுள்ள காரியங்கள் ராஜ்ஜியத்தில் பலவகைபட்டு, ஒன்றுக்கொன்று மாறுபாடாய் விரோதப்பட்டு, நடப்புக்கள் மாறியிருப்பதெல்லாம் மனுஷியர்கள் சுபாவத்திற்கு தக்கவாறுதான் இருக்கும். அவைகளை ஒன்றை ஒன்று இணங்கும் விதமாய் ஒருங்குபடச் சேர்த்து, ராஜ்ஜியத்தை நிர்வகித்து வருவதே, ராஜ்ஜிய தந்திரத்தின் அநுபவமாகும். அதுவே ராஜநீகதத்துவம்” என்று எழுதி யிருக்கின்றனர்.

(6) ஆகையினாலே எலக்டர்கள் தகுந்தபடி யோக்கியமான நபரை மெம்பராகத் தேர்ந்தெடுத்து, சட்டஸபையில் தங்கள் பிரதிநிதியாக அவரை நேமித்துவிட்டபிறகு, அன்னவர் எங்ஙனம் தன் வேலையைச் சட்டஸபையில் நடத்திவருகின்றனர் என்பதை நன்றாய் கவனித்து வரவேண்டும். அம்மெம்பர், சட்டஸபையில் ராஜ்ஜிய விஷயங்களைக் குறித்து வீண்போக்காக குற்றம்குறைமட்டும் எடுத்து கூறிவருகிறாரா? அல்லது ராஜ்ஜியத்தில் மேல் நடக்கவேண்டிய நடவடிக்கைகளை முன்னுக்கு வரும்படிச்செய்ய யத்தனப்பட்டு வருகிறாரா? ராஜாங்க விஷயங்களை எல்லாம் சரிவரப்படித்துப்பார்த்து ஜனங்களுக்கு எது சுகாசுகம் என்பதைப் பகுத்தறிந்து, ஜனங்களுடைய நன்மையைக் கோறி ராஜ்ஜியகாரியங்களில் குறைசொல்லி வருகிறாரா? அப்படியன்றி, ராஜீயவிஷய ஞானம் ஒன்றுமில்லாமல் வீண் ஆடம்பரம் செய்து ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களைக் கண்டனம் செய்வதையே தொழிலாக மேற்கொண்டிருக்கின்றனரா? ராஜீயகாரியங்களில் உள்ள குறைகளை பதட்டமின்றி நிதானமாய் அறிவுறுத்தும்படி ஸர்க்காருக்கு விளக்கிக்காட்டி, ராஜ்ஜியம் முன்னுக்கு வரவேண்டிய ஏற்பாடுகளைப் பிரேரேபித்து வருக்கின்றனரா? ஜனங்கள் யாவரும் தன்னைப்புகழ்ந்து பேசவேண்டுமென்றும், தான் சொல்லும் வார்த்தைகளை ஜனங்கள் கரகோஷம் செய்து தன்னைத் தூக்கிவைக்கவேண்டும் என்கிற வீணாசையுடன் ஜனங்களுக்கு ப்பிரதிநிதியாய் அவர்கள் கக்ஷியைக்கோறி ஸர்க்காரை எதிர்த்துப் பேசுவதாய்நடிக்கிறாரா? அல்லது சரியான காரணங்களைக்கொண்டு, தான் சொல்லுவதை ருஜுப்படுத்தி,யாவரும் ஒப்புக்கொள்ளும்படி ராஜீய விஷயங்களை எடுத்து விளக்கிக்காட்டி வருகின்றனரா? என்று இத்

தியாதி விஷயங்களை எலக்டர்கள் யாவரும் கவனித்துவரவேண்டுவது அவசியம்.

(7) இந்தியாவில் அநேகம் ஜனங்களை எலக்டர்களாக்கிச் சட்டசபைக்கு மெம்பர்களை வோட் மூலமாய்த் தேர்ந்தெடுக்கும்படி அவர்களுக்கு உரிமை வாய்ந்து, பிரதிநிதிகள் மூலமாய் தங்கள் ராஜ்ஜியத்தை தாங்களே பரிபாலித்துவரும்படிக்குள்ள ஏற்பாடுகள் இந்திய நூதன ஆக்டால் உண்டாயிருப்பது பெருத்தலாபம். ஜனங்களே ராஜாங்கம் நடத்திவருதல், அதாவது குடி அரசு என்பது இந்தியாவில ஏற்படுவதற்கு இந்த ஆக்டே ஸாதனம். ஜனங்களே அரசுபுரிதல் என்று சொல்லுவதினாலே, ஜனங்கள் தங்கள் ராஜ்ஜியத்தை ஆளும் நிமித்தம், தங்களுக்குள்ளிருந்து பிரதிநிதிகளை ஏற்படுத்திக்கொண்டு ஆண்டுவரும் அதிகாரம் ஜனங்களுக்குக் கிடைத்திருக்கிறது என்று அறியவேண்டும். ஜனங்கள் என்று பிரயோகிப்பதனாலே, பணம் ஏராளமாய் நிறைந்துள்ள நிலத்திற்குடையவர்கள், பெருத்த வியாபாரிகள், படிப்புமேலிட்ட வகுப்பினர், உயர்குலத்தைச சேர்ந்த பிராம்மணர்கள் ஆகிய இவர்கள்தான் அரசுபுரியும் அதிகாரம் வாய்ந்த ஜனங்கள் என்று எண்ணிவிடாமல், கிராமங்களில் உள்ள குடியானவர்களும், பட்டணங்களில் கூலிவேலை செய்பவர்களும், கீழ்ப்பட்ட பஞ்சமர் முதலிய ஜாதியார்களும் கூடத்தான் ராஜ்ஜிய விஷயமாய் கவனிக்கக்கூடிய ஜனங்கள் என்று எண்ணி இதுவரையிலும எந்தெந்த ஜனங்கள் ஜாதி மதாச் சாரங்களில் தாழ்வுபட்டு ஜனங்களால் அவமதிக்கப்பட்டும், ராஜீய விஷயங்களில் அஞ்ஞானிகளாயும் இருந்து வந்தனரோ அந்த ஜனங்களும் கூட இனிமேல் ராஜ்ஜிய விஷயங்களில் எலக்டர்களாக இருந்து ராஜ்ஜியம் நடத்திவரப் போகின்றனர் என்று நினைக்கவேண்டும். இதுதான் இந்தியாவில் ஸர்வஜனங்களுமாய்ச் சேர்ந்து, இந்திய அரசாக்ஷியை இனிமேல் நடத்திவரும்படிக்குள்ள அந்தரங்கம. இதுவே இந்தியருக்கு பெறும் பேறு. மிகத் தாழ்ந்த ஜனங்கள் என்றும், உலக நடவடிக்கை தெரியாத பாமரர்கள் என்றும், ராஜீய விஷயாதிகளில் கொஞ்சமேனும் பற்றில்லாத அஞ்ஞானிகள் என்றும், சொல்லிவந்த ஜனங்களுக்கு எல்லாம் இந்திய புதிய ஆக்டின்படி வோட்டுக்கள் ஏற்பட்டு தங்கள் வோட்டின் மூலமாய் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து ராஜ்ஜிய பரிபாலனம் செய்துவர அதிகாரம் கிடைத்திருக்கிறது. ஆகையினாலே தான், இனிமேல இந்தியாவில் ஏற்படும் அரசாக்ஷி இந்தியக் குடிகளாலே நடத்திவரும் அரசாக்ஷி என்றும், இந்திய நூதன ஆக்ட்டும், குடியரசாக்ஷிக்காக ஏறபடுத்தப்பட்ட ஆக்டு என்றும் ஏற்படுகிறது. ஆகவே, இதுகாறும் ராஜீய விஷயங்களை கவனிக்கப் போதுமான யோக்கியத்தை யுள்ளவர்கள் இல்லையென்று தாழ்வாய் மதிக்கப்பட்டிருந்த இந்தியர்கள் யாவரும், இனிமேல் ஊக்கமடைந்து, தங்கள் ராஜ்ஜியத்தை நன்கு பரிபாலித்துவர தங்களுக்குள்ள வோட்டுரிமைகளைச் சரியானபடி செலுத்தி வரவேண்டும் வீண் ஆடம்பரம் செய்து, எலக்டர்களுக்கு ஹிதவார்த்தைகளைச் சொல்லி ஆசைகாட்டி மோசம்பண்ண நினைக்கும், நன்னடத்தையற்ற நபர்களை மின் பின் ஆலோசிக்காமல் சட்டநிர்மாண ஸபைகளுக்கு மெம்பராக வரும்படி எலக்டர்கள் தங்கள் வோட்டைக் கொடாமலிருக்கவேண்டும். பூர்வகாலத்தில் கிரீஸ் ரோம் என்கிற தேச

ங்களில் ஜனங்களே ராஜ்ஜிய பரிபாலனம் செய்துவந்தனர். அவர்கள் தங்கள் ராஜ்ஜியத்தை பரிபாலித்துவர யோக்கியமாயுள்ள பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்காததினால், அவ்விராச்சியங்களில் குடிகளாலே நடத்தப்பட்டுவந்த அரசாக்ஷி அடியோடு மாண்டு போய் அந்த ஸ்தானத்தில் கொடுங்கோல் அரசு வியாபிக்கலாய் ஜனங்களுக்கு ஹிம்ஸை ஏற்பட்டுவிட்டது. ஏனென்றால், அத் தேசங்களிலுள்ள ஜனங்கள் தங்கள் வோட்டு உரிமைகளைச் சரியானபடி உபயோகிக்காமல், வீண்பேச்சுப்பேசி, ஜனங்கள் மனதைக் கவர்ந்து ஆசை வார்த்தைகள் காட்டிய அயோக்கியர்களைப் ப்பிரதிநிதிகளாக நியமித்துவிட்டார்கள். இப்படி கிரீஸ்தேசமும் ரோமாபுரியும் பாழடைந்து நசித்ததுபோல, உங்கள் ராஜ்ஜியத்திலும் அங்ஙனம் நடவாமலிருக்க வேண்டும். சட்டஸபைக்கு மெம்பராவர எண்ணும் ஒவ்வொரு நபரும், ஜனங்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்கள் கஷ்டநிஷ்டூரங்களைப் போக்கவும் தான் மெம்பராக இருந்து பாடுபடப் போகிறவன் என்று சொல்லி எலக்டர்களை வோட்டுக் கேட்பது உலகத்தில் ஸகஜமே. அப்பேர்ப்பட்ட நபரை ஜனங்கள் விரும்பி, அவருக்கு வோட்டு கொடுக்க நினைப்பதும் ஸாதாரணம் தான். ஆனால் ஒவ்வொரு வோட்டரும், வோட்டுகொடுக்கு முன் இந்தமாதிரிச் சொல்லிவருபவர் வாஸ்தவமாய் ஜனங்களுக்குப் பாடுபடக்கூடியவர்தானா? அவர் பேசுவது தான் மெம்பராக வருவதற்கு மாத்திரம்தானா பிரயோஜனம்? அல்லது அவர் ஜனங்களிடத்தில் அந்தரங்க விசுவாஸம்மேலிட்டு, உண்மையாகவே ஜனங்களுடைய சௌகரியத்தையும் நன்மையையும் நாடி, தன்னுடைய ஸ்வப் பிரயோசனத்தை கவனியாமலிருப்பவரா? ஜனங்கள் தப்பு செய்துவிட்டாலும், நீங்கள் செய்தது சரியல்ல, என்று பயப்படாமல் வெளியிட்டுச்சொல்ல தைரியவானாயிருந்து உண்மையேபேசும் குணஞ்ஞரா? தனக்கே தான் சொல்லுவது சரிதான் என்கிற திடபுத்தி வாய்ந்து, அதை ஜனங்களுக்கு ஒளிக்காமல் தைரியமாய்ச் சொல்லும் திறமையரா? என்கிற இவ்விஷயங்களை தீவிரமாய் கவனிக்கவேண்டும், இந்திய எலக்டர்கள் யாவரும் கீழ்வரும் உதாரண பூர்வமாயுள்ள விஷயத்தை நன்குமதித்து மனதில் திடமாய் வைத்துக்கொள்ளவேண்டும். 60 ஆண்டுகளுக்கு முன்பு. ஜான் ஸ்டூவர்ட் மில் என்கிற துரை இங்கிலாந்தில் பார்லிமெண்டு மகா ஸபைகு மெம்பராகவர முயன்றனர். இங்கிலாந்தில் வேலை செய்து பிழைக்கும் கூலியாட்களாகிற ஏழைகளிடத்தில் அவருக்கு வெகு பிரீதி. அவர்கள் ஸௌகரியத்தைப் பற்றியே, பிரத்தியேகமாய் அடிக்கடி எழுதியும் பகிரங்கமாய்ப் பேசியும் உள்ளவர். அக்கூலிவேலை செய்பவர்களைப் பார்த்து, அவர்கள் செய்யும் காரியங்கள் இன்னின்னது தப்பு என்று அவர்கள் குற்றங்குறைகளை ஒளிக்காமல் தைரியமாய்ச் சொல்லி, அவர்கள் பொய்கூடப் பேசுகின்றனர் என்று பகிரங்கமாய்ச் சொன்னார். அதினாலே அவ்வேலையாட்களுக்கு அவரிடம் குரோதம் உண்டாகிவிட்டது. தனக்கு பார்லிமெண்டில் மெம்பராகவர இஷ்டமிருப்பதை வெளிக்காட்டி ஒரு பெரிய ஸபைகூட்டிப் பேசி, அவர்களுடைய வோட்டைதனக்குக் கொடுக்கும்படிக் கேட்டபோது, வேலையாட்கள் கோபாவேசத்தால் அவரைப்பார்த்து, "நீர்தான் எங்களைப் பொய்யர்கள் என்று பேசியிருக்கிறீரே? இப்

பொழுது அப்படிப் பொய்பேசும் எங்களுடைய வோட்டுக்களை ஏன்வேண்டுகிறீர்", என்றுக்கேட்டதும், மில் துரை "எனக்கு எது மெய் என்று தோன்றுகிறதோ அதை உங்களுக்குச் சொல்ல நான் ஏன் அதைரியப்படவேண்டும்? வேலையாட்கள் பொய்யர்கள் என்று நான் சொல்லியிருப்பது வாஸ்தவம்தான். இப்பொழுதும்கூட அவர்களைப்பற்றிப் பொய்யர்கள் என்றே எண்ணியிருக்கிறேன்; உங்களுடைய வோட்டை எனக்குக் கொடுப்பதற்காக வேண்டி உங்களை நான் இப்பொழுது ஸதுத்தியம் செய்யத் தயாராக இல்லை. உங்கள் பிசகுகளை எடுத்து உங்களுக்குக் காட்டி, என் நண்பர்களாகிய உங்களை முன்னுக்குக்கொண்டுவருவது என் கருத்தே ஒழிய, உங்கள் கண்ணுக்குப் பகட்டாய்ப் பேசும் சுபாவம் எனக்குக்கிடையாது" என்று வெகு தைரியமாய்ப் பதில் உரைத்துவிட்டனர். அம்மாதிரி அஞ்சாமல் தன்மனதில் உள்ளதை மனப்பூர்ணமாய் மில்துரை வெளியிட்டதை நோக்கி, ஜனங்களுக்கு அவரிடத்தில் பிரீதி உண்டாகி, அவருக்கே தங்கள் வோட்டுக்களைக்கொடுத்து தங்கள் பிரதிநிதியாய் அவரை பார்லிமெண்டு மெம்பராக நியமித்தனர். "யாவனொருவன் ஜனங்களுடைய அவிசுவாஸத்தையும் அடையத்தயாராக இல்லையோ அதாவது ஜனங்கள் தூஷணைக்குப்பயப்படாமல் அந்தரங்கசுத்தியாய் தன் காரியத்தைப் பார்க்க சக்தியற்றவனோ, அவனே ராஜ்ஜியத்தை வாஸ்தவமாய்ச் சரியானபடி ஆளத்திறமையற்றவன்" என்பதை நன்றாய் மனதில் கிரகிக்கவேண்டும். ஆகவே நூதனச் சீர்திருத்தங்களால் இந்தியாவுக்கு நன்மை உண்டாக்க வேண்டும் என்று கோறி, சீக்கிரத்தில் இந்தியர்களுக்கு ஸ்வராஜ்ஜியாதிபத்தியம் பூராவாகக்கிடைத்து, ராஜ்ஜியமும் அபிவிருத்தி அடைந்து ஜனங்களுக்கு சௌகர்யம் மேலிடவேண்டுமென்று நினைக்கும் இந்தியாவிலுள்ள எல்லா எலக்டர்களும், இப்போது மில் துரையைப் பற்றி சொல்லிமுடித்த விருத்தாந்தத்தை நன்றாய் மனதில் உட்கொண்டு, இந்தியாவின் நன்மைக்காகத் தகுந்தபடி தங்கள் வோட்டுரிமைகளை பரிபாலித்துவரவேண்டுவது பிரதானமான காரியமாகும்.

MADRAS: PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.